


புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்ச் 03, 2011 | புரட்சி 10 | முழக்கம் 7 | விலை: ரூ.2.50


## பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையில்லா மின்சாரம்; தேர்வுக்கு படிக்கும் மாணவர்களுக்கு மின்தடையா?

# மார்ச் 5 இல் மின்வாரியங்கள் முன் கழகம் ஆர்ப்பாட்டம்

பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழு கூட்டம் பிப். 26, 27 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெற்றது. முதல் நாள் அண்ணாமலை ஓட்டல் அரங்கிலும், இரண்டாம் நாள் திவ்யோதயா அரங்கிலும் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர்களும் கழகத் தோழர்களும் பார்வையாளர்களாக பங்கேற்றனர். கழகத்தின் செயல்பாடுகள், திட்டங்கள் குறித்தும் தங்கள் கருத்துகளை மாவட்டக் கழகங்கள் சார்பாக தோழர்களுடன் கலந்து விவாதித்து மாவட்டக் கழக பொறுப்பாளர்கள் அறிக்கைகளாக தயாரித்து வந்தனர். அதனடிப் படையில் விவாதங்களும், கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற்றன. கூட்டத்தில் இறுதியில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அ) தமிழ்நாட்டில் சில நாட்களில் மேனிலைப் பள்ளிகளில் பொதுத் தேர்வுகள் தொடங்க உள்ளன. தொடர்ந்து பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளும், கல்லூரித் தேர்வுகளும் நடக்க இருக்கின்றன. இந் நிலையில் தமிழ்நாட்டில் வழக்கமான இரண்டு மணி நேர பகல் மின்வெட்டுக்குப் பதிலாக மூன்று மணி நேரமும், அதற்கு அதிகமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இரவு நேரங்களிலோ முன் அறிவிப் பின்றி மின்வெட்டு அன்றாடம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டின் கிராமப்புறங்களிலிருந்து படிக்கும் முதல் தலைமுறையினருக்கும், பேரூர்களிலும், நகரங்களிலும் வசிக்கும் அடித்தட்டு உழைக்கும் மக்களுக்கும் மின்தடைகளின்போது வெளிச்சத்துக்கு மாற்று மின்சாரத்தை ஆக்கும் சாதனங்கள் எதுவும் இருக்காது என்பது வெளிப்படையான உண்மை.

ஆனால், இந்நாட்டு வெகு மக்களுக்கு வேலை வாய்ப்பு எதையும் தராத பன்னாட்டு நிறுவனங்கள் சிறப்பு பொருளாதார மண்டலங்களிலும், வெளியிலும் தொழிலாளர்களுக்கான இந்நாட்டின் பாதுகாப்பு சட்டங்கள் எதையும் பின்பற்ற வேண்டியதில்லை என்ற விதிவிலக்கோடும், தடையில்லா மின்சாரத்தை எப்போதும் குறிப்பிட்ட குறைந்த விலையிலேயே கொடுக்கப்படும் என்ற ஒப்பந்தத்திலும், மக்கள் நலனில் அக்கறையில்லாத ஊழல் அரசியல்வாதிகளால் வழங்கப்பட்டு வருவது பேரவலமாகும்.

எனவே, இந்நாட்டின் பெரும்பான்மையாகவும், தங்களது கடும் உழைப்பால் அனைத்து வளங்களையும் உற்பத்தி செய்யும் உழைக்கும் மக்கள் வீட்டுப் பிள்ளைகளின் கல்வித் தேர்வுகளுக்கு பெரும் இடையூறாக உள்ள மின்வெட்டை 2011, மே மாத இறுதி வரையிலாவது அறவே ரத்து செய்து முழு நாளும் மின்சாரம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், வாய்ப்புள்ள இடங்களில் மின்சார அலுவலகங்களுக்கு முன்னர் வருகிற மார்ச் 5 ஆம் நாள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று செயற்குழு தீர்மானிக்கிறது.

வீடுகளுக்கான மின்சாரத்தை முழுமையாக வழங்கு கிறோம் என்ற காரணம் காட்டி, விவசாயத்துக்கோ, சிறு தொழில்களுக்கோ கொடுக்கப்படும் மின்சாரத்தை நிறுத்தவோ, நேரத்தை குறைக்கவோ கூடாது என்று இச்செயற்குழு வற்புறுத்துகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு தேர்வை எதிர் கொண்டிருக்கிற மாணவர்களைத் தவிர பிற மாணவர்களும், பெற்றோர்களும், வெகுமக்கள் நலனில் அக்கறைக் கொண்டுள்ள அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என அறைகூவல் விடுக்கிறது.

ஆ) பொது இடங்களில் ஒலி பெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை தடை இருந்தாலும், மதப் பண்டிகைகள் மத விழாக்களில் இரவு நேரங்களில் ஒலி பெருக்கிகள் பயன்படுத்தப்படுவதால் மாணவர்கள் தேர்வு காலங்களில் படிப்பதற்கு பெரும் இடையூறாகி விடுகிறது. நீதிமன்ற ஆணைகளுக்கு எதிரான இந்த சட்ட விரோத நடவடிக்கைகளைத் தடை செய்ய வேண்டும் என்று தமிழக காவல்துறையை இச்செயற்குழு வலியுறுத்துகிறது. (இது தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு நகல்களை காவல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது)

மாநில செயற்குழுவில் உரையாற்றிய மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் : வெள்ளமடை நாகராசு (கோவை வடக்கு), கா.சு.நாகராசு (கோவை தெற்கு), வழக்கறிஞர் சாஜித் (கோவை மாநகரம்), இலக்குமணன் (பெரம்பலூர்), தமிழ்ப்பித்தன் (பெரம்பலூர்), துரை. சம்பத் (திண்டுக்கல்), அழகிரி (கடலூர்), இராம. இளங்கோவன் (ஈரோடு), டேவிட் (சேலம்), குமாரதேவன் (வடசென்னை), அன்பு. தனசேகர் (தென்சென்னை), திலீபன் (வேலூர்), அய்யனார் (விழுப்புரம்), சாமிநாதன் (நாமக்கல்), தனபால் (கரூர்), வேடியப்பன் (தருமபுரி), ரசீத்கான் (நாகை), துரைசாமி (திருப்பூர்), சோலை மாரியப்பன் (தஞ்சை), பகுத்தறிவாளன் (அரியலூர்), பால். பிரபாகரன் (தூத்துக்குடி). பார்வையாளர் களாக பங்கேற்ற கழகத்தினரும் தங்களது கருத்துகளைப் பதிவு செய்தனர். மாநகர பொறுப்பாளர் ரஞ்சித் நன்றி கூறினார்.

கோவை மாநகர கழகம் 2 நாள் கழக செயற்குழுவுக்கும் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தது.

## சட்டத்தைக் காக்க – கழகம் களமிறங்குகிறது

# சுடுகாடுகளை-சாதிவாரியாகப்பிரிக்கும்இரட்டைச்சுவர்கள்இடிக்கப்படும்

கோவையில் கூடிய கழக மாநில செயற்குழுவில் நிறைவேற்றிய தீர்மானம்:

மனித குல சமத்துவத்துக்கும், மாண்புக்கும், முரணாகவும், உழைக்கும் அடித்தட்டு மக்களின் சுயமரியாதைக்கு எதிராகவும், ஜனநாயக நாட்டின் அரசியல் சட்டம், வன்கொடுமை தடுப்புச் சட்டங்களுக்கு எதிராகவும் பெரியாரின் வாரிசுகளாக தங்களை சொல்லிக் கொள்ளுகிற அரசுகளின் ஆட்சியிலும் சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும் சாதிக்கு, தனித் தனியாக இருப்பது கேவலமான ஒன்றாகும்.

அதுவும் தமிழ்நாடு அரசு, அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற தனது திட்ட நிதியிலிருந்து கட்டப்படும் இடுகாடு, சுடுகாடுகளிலும்கூட தாழ்த்தப்பட்டோருக்கு என தனியாகவும், பிற மக்களுக்கு என தனியாகவும் உள்ள நிலை மிகமிகக் கேவலமானதும், அரசியல் அமைப்புக்கே எதிரானதும் ஆகும்.

அரசின் இந்த தவறான நடவடிக்கைகளுக்கு எதிராகவும், மக்கள் சமத்துவத்தை நெஞ்சில் ஏந்தியும் அரசியல் சட்டத்தையும், பிற சட்டங்களையும் மதித்துப் பேணும் நோக்கத்தோடும், சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தடுக்க வேண்டும் என்ற சட்ட உணர்வோடும், புரட்சியாளர் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் நாளுக்குள் வாய்ப்பான நாளில் அரசு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள சுடுகாடுகளைப் பிரிக்கும் இடைச் சுவரை உடைத்தும், தனித் தனி இடங்களில் இருந்தால் அறிவிப்புப் பலகையிலுள்ள தாழ்த்தப்பட்டோர் சுடுகாடு என்ற எழுத்துக்களை தார் கொண்டு அழித்தும், அரசின் தவறான போக்கை அம்பலப்படுத்துவது என்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

## 104 கிராமங்களில் தொடர்கிறது இரட்டைக் குவளை முறை

தமிழகத்தில் 12 மாவட்டங்களில், 213 கிராமங்களில் மேற்கொண்ட ஆய்வில், 104 கிராமங்களில் இன்னும் இரட்டைக் குவளை முறை இருப்பது மதுரை 'எவிடன்ஸ்' அமைப்பு மூலம் தெரிய வந்துள்ளது.

மதுரையில் 13 கிராமங்கள், திண்டுக்கல்லில் 24 கிராமங்கள், சிவகங்கையில் 15 கிராமங்கள் என, 213 கிராமங்களில் நிலவும் தீண்டாமை பாகுபாடுகளை, இந்த அமைப்பு ஆய்வு செய்தது. இதில், 104 கிராமங்களில் டீ கடைகளில் இரட்டைக் குவளை முறை இன்னும் இருப்பது கண்டறியப்பட்டது. சில கிராமங்களில் குறிப்பிட்ட சமூகத்தினருக்கு கண்ணாடி குவளையும், ஆதி திராவிடர் களுக்கு சில்வர் குவளையும், பிளாஸ்டிக் கப்பும் கொடுக்கப் படுகிறது. தமிழகத்தில் 208 கிராமங்களில், சாதி ரீதியாக சுடுகாடுகள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் 97 கிராமங்களில் ஆதி திராவிடர் சடலத்தை பொதுப் பாதையில் எடுத்து செல்ல முடியாது. 153 கிராமங்களில் மாற்று சாதியினர் குடியிருப்பு வழியாக எடுத்து செல்ல முடியாது. ஆதி திராவிடர் சுடுகாடுகளில் தண்ணீர், மின்சாரம், கொட்டகை என எந்த அடிப்படை வசதியும் இல்லை.

சலூன் கடைகளில்கூட பாகுபாடு பார்க்கப்படுகிறது. 142 கிராமங்களில் ஆதி திராவிடர்களுக்கு முடிவெட்டக் கூடாது என தடையுள்ளது. சில கிராமங்களில் முடிவெட்டும் கருவிகள் இரண்டு 'செட்' வைத்துக் கொண்டு, அதில் ஒன்றை ஆதி திராவிடர்களுக்கு பயன்படுத்துகின்றனர். இதேபோல், ரேஷன் கடைகள், மருத்துவமனைகள், சாவடிகள் என அனைத்து இடங்களிலும் பாகுபாடு தொடர்கிறது. 45 ஆதி திராவிட ஊராட்சி தலைவர்கள் வன்கொடுமைக்கும், சித்ரவதைக்கும் ஆளாகியுள்ளனர்.

# சாதி-மத மறுப்பு திருமணப் பதிவு : சில முக்கிய தகவல்கள்

**வழக்கறிஞர் பொற்கொடி**

டெல்லி, அரியானா போன்ற வட மாநிலங்களில் வருடத்திற்கு சுமார் 100 கவுரவக் கொலைகள் நடப்பதாக ஊடகங்கள் தகவல் தருகின்றன.

வேறு வேறு சாதியினர் குறிப்பாக வேறு வேறு மதத்தினர் காதலித்து திருமணம் செய்து கொண்டால் அடிப்படை மதவாதிகளுக்கு பொறுக்காது. உடனே குடும்ப கவுரவத்தை காப்பாற்றுகிறோம் என்கிற பெயரில் காதலர்களின் அதிலும் குறிப்பாக உயர் சாதிப் பெண் தாழ்த்தப்பட்ட ஆண் மகனை காதலித்துத் திருமணம் செய்து கொண்டால் பெண்ணின் குடும்பமே அவர்களை கொடூரமாக கொன்று விடுகிறது. அதற்கும் கவுரவக் கொலை என்ற பெயர் வேறு.

வேறு வேறு மதத்தினர் திருமணம் செய்து கொண்டால் அவர்கள் 1957 இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி தான் பதிவுத் திருமணம் செய்ய முடியும். இந்த சட்டத்தின் மிகப் பெரிய குறைபாடு என்னவென்றால் பதிவு அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்தால் 1 மாதம் காத்திருக்க வேண்டும். அதன் பிறகுதான் திருமணச் சான்றிதழ் வழங்கப்படும்.

இந்த ஒரு மாத கால அவகாசம் சாதி மத வெறியர்களுக்கு மிகவும் வசதியாய் இருக்கிறது. அதற்குள் காதலர்களை கொன்று கவுரவத்தை நிலைநாட்டி விடுகின்றனர்.

தற்போது வடநாட்டு அரசியல்வாதிகள் பலரும் இச்சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டும். குறிப்பாக ஒரு மாத கால அவகாசத்தை நீக்க வேண்டும் என ஓங்கி குரல் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் தமிழ்நாட்டில் சத்தமில்லாமல் ஒரு சட்டம் 2009 இல் இருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. (தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம்-2009)

அதன்படி எந்த சாதியினரும் வேறு வேறு மதத்தினரும் ஒரே நாளில் பதிவுத் திருமணம் செய்து கொள்ள முடியும். 30 நாட்கள் காத்திருக்கத் தேவையில்லை.

தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் வசிப்பவர் ஆயினும் எந்த இடத்தில் திருமணம் நடக்கிறதோ அந்த பகுதிக்குரிய சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்தல் போதுமானது.

சாதி மறுப்பு, மத மறுப்புத் திருமணங்களைக் கொள்கையாக செய்து வைக்கும் பெரியாரிஸ்டு மற்றும் கம்யூனிஸ்ட் தோழர்களுக்கு இது மிகவும் வசதியான தாகும்.

இதற்கு முன் திருமணத் தரப்பினரின் வசிப்பிடத் திற்குட்பட்ட பதிவாளர் அலுவலகத்தில்தான் பதிவு செய்ய முடியும் என்ற நிலை இருந்ததால் பெற்றோர்கள் எளிதாக காதலர்களைத் திருமணம் செய்ய விடாமல் தடுத்து விட முடியும்.

பதிவுத் திருமணத்திற்கு வழியில்லாததால் தான் கோயிலையும் கடவுளையும் பூசாரியையும் நம்பி தாலி கட்டித் திருமணம் முடித்தனர். பிற்காலத்தில் பெண்கள் ஏமாற்றப் படுவதற்கும் இந்தக் கோயில் கல்யாணங்களே காரணமாயின.

எந்தச் சாமியும் முப்பத்து முக்கோடி நபர்களும் இது வரை எந்த நீதிமன்றத்திலும் சாட்சி சொன்ன தில்லையே.

திருமணத்தை நடத்தி வைத்த அல்லது திருமண நிகழ்ச்சியில் பங்கெடுத்த யாரும் மதகுரு என்ற இடத்தில் கையொப்பமிடலாம்.

மிக முக்கியமாக திருமணம் இப்படித்தான் நடக்க வேண்டும் என்ற கறாரான விதிமுறைகள் ஏதும் இல்லை என்பதால் எந்த முறைத் திருமணமும் செல்லும். ஒப்பந்தம் போல அல்லது மாலை மாற்றி சீர்திருத்த முறை திருமணம்கூட இதன்படி செல்லுபடி ஆகும்.

2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டம் கூறுவது என்ன ?

பிரிவு-2 பொருள் வரையறைகள்:

2(சி) திருமணம் என்றால் அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் எதுவானாலும் அல்லது எந்த வடிவத்திலும் அல்லது முறையிலுமான வழக்கம் அல்லது வழக்காறு எதனின்படியும் எந்த சாதியினரையும் அல்லது சமயத்தினரையும் சார்ந்த நபர்களால் நடத்தப்படும் அனைத்துத் திருமணங்களையும் உள்ளடக்குவதோடு மறு திருமணத்தையும்கூட உள்ளடக்கும்.

2(c) - Marriage includes all marriage performed by persons belonging to any caste or religion under any law for the time being in force or as per custom or usuage in any form or manner and also includes remarriage.

2(இ) - மத குரு என்றால் 1955 ஆம் ஆண்டு இந்து திருமணம் சட்டத்தின் 7ஏ எனும் பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ள திருமணத்தை நடத்தி வைக்கும் நபர் எவரும் அல்லது அத்திருமணத்தில் முன்னிலையாகும் நபர் எவரும் என்று பொருள்படும்.

2(e) - Priest means any person who performs a marriage or any person present in the marriage referred to in sec-7 of the Hindu Marriage Act, 1955.

பிரிவு - 5 திருமண தரப்பினர்கள் வடிவமைக்கப்பட்ட படிவத்தில் 2 படிகளைத் தயாரித்து திருமணத் தேதியில் இருந்து 90 நாட்களுக்குள் எந்தப் பகுதியில் திருமணம் நடைபெறுகிறதோ அந்தப் பகுதியின் பதிவாளருக்கு அதனை நேரடியாகவோ படிவத்தில் கூறியுள்ள வழிமுறைகளிலோ ஒப்படைத்தல் வேண்டும்.

பிரிவு - 6 குறிப்பாவணத்தில் திருமணத் தரப்பினர்களும் மத குருவும், இரண்டு சாட்சிகளும் கையொப்பம் இடுதல் வேண்டும்.

# தமிழக மீனவர்கள் இந்தியக் குடிமக்கள் இல்லையா?

## பொள்ளாச்சியில் கழகம் சார்பில் ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் 136 பேர் சிங்கள கடற்படையால் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பொள்ளாச்சியில் நகர ஒன்றியக் கழகம் சார்பில் நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பேசிய மாவட்ட செயலாளர் கா.சு.நாகராசன், “சொந்த நாட்டு மக்களை அந்நிய நாட்டு இராணுவம் சுட்டுக் கொல்வதை வேடிக்கைப் பார்க்கிற ஒரே நாடு இந்தியாவாகத்தான் இருக்க முடியும். 500க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் சிங்கள படையால் படுகொலை செய்யப்பட்டும், ஆயிரக்கணக்கானவர்கள் சிறைபிடிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டும்கூட இந்திய அரசு இதுபற்றி வாயே திறக்கவில்லை என்றால் தமிழர்களை இந்தியக் குடிமக்களாக இந்திய அரசு கருதவில்லை என்றுதானே பொருள் ? இந்தியாவும் தமிழர்களுக்கு ஒரு அந்நிய நாடுதான் என்பதை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்” என்று பேசினார்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளின் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### கிளைக் கழகங்களையும், புதிய தோழர்களையும் அதிகரிக்க வேண்டும்: கோவை மாவட்ட கழகம் தீர்மானம்

தலைமைச் செயற்குழு கூட்ட நடவடிக்கைகளுக்கு வசதியாக கருத்துகளை நகர ஒன்றிய கிளை கழக தோழர்கள், பொறுப்பாளர்களிடமிருந்து பெறுவதற்காக கோவை தெற்கு மாவட்ட கழக கலந்துரையாடல் கூட்டம் 20.11.2011 ஞாயிறன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக துணைத் தலைவர் சூலூர் இரா. பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.

கழகத்திற்கு புதிய தோழர்களையும், கிளை கழகங்களையும் அதிகரிக்க வேண்டும். பெரியார் பிறந்த நாள் விழாவை கழகத் தோழர்களின் இல்லங்கள் தோறும் ஒரு திருவிழாவைப்போல் கொண்டாட வேண்டும். கழகத் தோழர்கள் குறிப்பாக பொறுப்பாளர்கள் தங்கள் சொந்த வாழ்வில் கட்டாயமாக சாதி மத சடங்குகளை பின்பற்றக் கூடாது. தோழர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் இடையே கொள்கை வழிபட்ட விவாதங்கள் எழ வேண்டுமே தவிர, அதிகார மோதல்கள் எழக் கூடாது. பொறுப்பாளர்களுக்கு இடையே ஏற்படும் சங்கடங்களில் தலைமைக்கழகம் துணிந்து தவறுகளை கண்டிக்கவும், நியாயங்களை பாதுகாக்கவும் முன்வரவேண்டும் என்பது உள்ளிட்ட கருத்துகள் உருவாக்க தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர் கா.சு. நாகராசன், மாவட்ட பொருளாளர் அகில்குமாரவேல், சூலூர் வீரமணி, பொள்ளாச்சி வே. வெள்ளிங்கிரி, இரா. மோகன், சி. விசயராகவன், வே. அரிதாசு, மணிமொழி, உதயகிரி உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள், தோழர்கள் பங்கேற்றனர்.

### குளத்துப்பாளயத்தில் கழகப் பிரச்சாரம்

13.2.2011 ஞாயிறன்று பெரியார் சிந்தனைகள் பற்றிய பரப்புரை பொதுக் கூட்டம், பல்லடம் சாலை குளத்துப் பாளையம் பகுதியில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் இராமசாமி தலைமை தாங்கினார். கோபி வேலுச்சாமி, திருப்பூர் மாவட்ட தலைவர் அ. துரைசாமி சிறப்புரை யாற்றினார். மடத்துகுளம் மோகன், ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சி நடத்தினார். நிகழ்ச்சியில் சாமியார்களின் மோசடிகளை அம்பலப்படுத்தியதை ஏராளமான பொது மக்கள் பார்த்து விழிப்படைந்தனர். கழக நகர செயலாளர் முகில் இராசு, அகிலன், ஜீவா நகர் குமார், பாடகர் தியாகு, பொள்ளாச்சி வெள்ளிங்கிரி, விசயராகவன், பெரியார் பிஞ்சு கனல் மதி, இரவி, மு. மணி, சண். பாண்டியநாதன், பெரியார் முத்து, தமிழ்ச் செல்வன், குமார், பரிமளம் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மீனவர் மீதான தாக்குதல் : கிருட்டிணகிரியில் ஆர்ப்பாட்டம்

இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களை தாக்குவதைக் கண்டித்து கிருட்டிணகிரி மாவட்ட கழக சார்பில் கிருட்டிணகிரி ரவுண்டானா அருகில் பழைய பேட்டை சாலையில் கழக மாவட்டத் தலைவர் தி. குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் 19.2.2011 பகல் 12 மணி யளவில் நடைபெற்றது.

ருத்திரன் (ம.தி.மு.க.), சந்திரன் (ம.தி.மு.க.), தமிழக மக்கள் விடுதலை முன்னணியின் மாநில ஒருங்கிணைப் பாளர் இரா. தமிழரசன், பிரேம்குமார் (பெ.தி.க.), முருகேசன் (தமிழர் தேசிய இயக்கம்), சிவா (த.தே. இயக்கம்), ராஜ லிங்கம் (தமிழக புரட்சிகர இளைஞர் முன்னணி) ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி நன்றி கூறினார்.

### தூத்துக்குடியில் கழகப் பொதுக் கூட்டம்

19.2.11 அன்று மாலை 6.30 மணியளவில் தூத்துக்குடியிலுள்ள தாளமுத்து நகர் முதன்மை சாலை அருகில், பெரியாரியல் கொள்கை விளக்கப் பொதுக் கூட்டம், கழகத்தின் சார்பில் நடைபெற்றது. மாநகரத் தலைவர் சா.த. பிரபாகரன் தலைமை வகித்தார். ஆழ்வை ஒன்றிய தலைவர் பா. முருகேசனார் முன்னிலை வகித்தார்.

தொடர்ந்து மாவட்ட அமைப்பாளர் ச. கா.பாலசுப்பிரமணியன், மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, மாவட்ட செயலாளர் கோ.அ.குமார், மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் ஆகியோர் பெரியாரியலின் அவசியத்தைப் பற்றி பேசினார். இறுதியில் மாநகர செயலாளர் பால். அறிவழகன் ‘மந்திரமல்ல, தந்திரமே’ என்ற நிகழ்ச்சியை செய்து காட்டி மக்களிடம் வரவேற்பைப் பெற்றார்.

நிகழ்வில் மாவட்ட இணைச் செயலாளர் க. மதன், மாவட்ட பொருளாளர் செ. செல்லத்துரை, தமிழ்நாடு மாணவர் கழகத்தின் வ. அகரன், ஆழ்வை ஒன்றிய செயலாளர் உதயகுமார், நெல்லை மாவட்ட செயலாளர் காசிராசன், தோழர்கள் அமிர்தராசு, குமாரசிங், பெரியார் பிஞ்சு ம. திலீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். இரவு உணவு மாநகரத் தலைவர் சா.த. பிரபாகரன் இல்லத்தில் இரவு உணவு வழங்கப்பட்டது.

### நன்கொடை

முடிவெய்திய பெரியார் பெருந் தொண்டர் காட்டுசாகை குப்புசாமி அவர்களின் படத்திறப்பு நினைவேந்தல் நிகழ்வின் நினைவாக அவரது மகன் பெல். இராசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் ரூ.5000 நன்கொடை வழங்கினார்.

சவுதி நாட்டில் பணியாற்றும் ஈரோடு மெஹத் தாஜ் பர்வீன், தனது முதல் மாத ஊதியத்தில் ரூ.1500 நன்கொடையாக கரூரில் கழகத் தலைவரிடம் வழங்கினார்.

நாமக்கல், குமாரபாளையம் தோழர் மாதுராஜ் தனது 43 ஆவது பிறந்த நாள் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.100 நன்கொடை வழங்கினார்.

நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

# கச்சத் தீவு – தமிழகத்துக்கு உரிமையானது : அடுக்கடுக்கான ஆதாரங்கள்!

'கச்சத்தீவு' – தமிழ்நாட்டுக்கே உரிமையானது என்பதற்கு அடுக்கடுக்கான சான்றுகளை முன்வைத்து, கல்வெட்டு – தொல்லியல் துறை ஆய்வாளரும் பேராசிரியருமான புலவர் செ. இராசு, 'நமது கச்சத் தீவு' என்ற நூலை எழுதியுள்ளார். அதிலிருந்து முக்கிய பகுதி:

சேதுபதி அரச மரபினருக்கு அளிக்கப்பட்ட நிலப்பகுதி யில் கச்சத் தீவும் அடங்கியிருந்தது. குத்துக்கால் தீவு, இராமசாமித் தீவு, மண்ணாலித் தீவு, கச்சத் தீவு, குருசடித் தீவு, நடுத் தீவு, பள்ளித் தீவு ஆகிய தீவுகளும், 69 கடற்கரைக் கிராமங்களும் சேதுபதி அரசர்க்கு உரிமையாக்கப்பட் டிருந்தன.

தளவாய் சேதுபதி காத்த தேவர் என்ற கூத்தன் சேதுபதி *(1622-1635)* காலத்துச் செப்பேடு ஒன்றில் தலைமன்னார் வரை சேதுபதி அதிகாரத்திற்கு உட்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

சேதுபதிக்குரியது இராமேசுவரம் இராமநாதசுவாமி மலைவளர் காதலி அம்மை ஆலயம். அந்த ஆலயத்திற்குரிய நந்தவனம் கச்சத் தீவில் இருந்தது. அங்கிருந்து கோயில் பூசைக்கு மலர்கள் கொண்டு வரப்பட்டன. இராமேசுவரம் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட கால்நடைகள் கச்சத் தீவில் மேய்ச்சலுக்கு விடப்பட்டன. அங்கிருந்து அபிசேகத்திற்குப் பாலும், தேவையான பஞ்சகவ்யங்களும் வந்தன. இவை பற்றி இலங்கை தினகரன் ஏட்டில் 1.5.1975 அன்று விரிவான கட்டுரை வெளி வந்தது.

தாயுமானவர், இலங்கையின் வடபகுதியிலிருந்து தமிழகம் நோக்கி வந்த டச்சுக்காரர்களைச் சேதுபதிக்கு ஆதரவாகப் படை நடத்திச் சென்று, கச்சத்தீவுக்கு அப்பால் விரட்டியடித்துக் கச்சத்தீவைச் சேதுபதிக்கு உரித்தாக்கினார் என்பர்.

*1803* முதல் சென்னை மாகாணத்தில் ஜமீன்தாரி முறை கொண்டு வரப்பட்டது. *1795* ஆம் ஆண்டு முத்துராமலிங்க சேதுபதி மன்னர் பல்லாண்டுகள் சிறையில் இருந்து மறைந்தபின் சேதுபதி அரச கட்டிலில் எவரும் ஆட்சி புரியவில்லை. இருப்பினும் முத்துத் திருவாயி நாச்சியார் மகளும் *1795* இல் மரணம் அடைந்த முத்துராமலிங்க சேதுபதியின் தமக்கையுமாகிய இராணி மங்களேசுவரி நாச்சியாரை, இந்தியாவில் நிர்வாகம் நடத்தி வந்த பிரிட்டிஷ் கம்பெனியார் ஜமீன்தாரிணியாக்கினர். அவர் *1803* இல் பட்டம் ஏற்று 1812 வரை நிர்வாகத்தில் இருந்தார்.

ஜமீன்தாரிணிக்கு "இஸ்திமிரார் சன்னது" என்ற ஜமீன் உரிமைப் பட்டயம் கொடுக்கப்பட்டது. அந்தப் பட்டயத்தில் சேதுபதி ஜமீனுக்கு உரியதாகக் கச்சத்தீவு தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி கிழக்கிந்தியக் கம்பெனியார் *1822* ஆம் ஆண்டு சேதுபதி ஜமீன்தாரிடமிருந்து கச்சத் தீவைக் குத்தகைக்குப் பெற்றனர். அப்போது நீதிமன்ற அதிகாரத்தின் கீழ் நிர்வாகம் நடைபெற்றாலும் தீவுகள் ஜமீன் வசமே இருந்தன.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் வருமானம் பெரிய அளவில் பெருகியதாலும், கம்பெனி இயக்குநர்கள் மீது பல புகார்கள் கூறப்பட்டதாலும், இந்திய ஆட்சியைக் கம்பெனியார் வசமிருந்து இங்கிலாந்து அரசு மேற் கொண்டது. *1.9.1858* இல் கம்பெனிக் கொடியை இறக்கி யூனியன் ஜாக்கொடியை ஏற்றி இந்திய நாட்டைக் கம்பெனி யார் இங்கிலாந்து அரசிடம் ஒப்படைத்தனர். விக்டோரியா மகாராணியார் தன் பிரகடனத்தில் இராமநாதபுரம் ஜமீனுக்கு உரியதாகக் கச்சத்தீவைக் குறிப்பிட்டிருந்தார். இதைப் பின்னாளில் இலங்கை அமைச்சரவைச் செயலாளர் பி.பி.பியரீஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

"நான் *1936-40* ஆம் ஆண்டுகளில் நில அளவைத் துறையில் உதவி வரைவாளராக இருந்தேன். இலங்கை வடக்கு மாவட்ட எல்லைகள் பற்றிப் பரிசீலனை செய்தேன். பழைய ஆவணங்கள், வரலாற்றுச் சான்றுகளைப் பார்வை யிட்டேன். விக்டோரியா மகாராணியாரின் பிரகடனத்தில் கச்சத் தீவு சேதுபதி மன்னர்க்கு உரியதாகக் கண்டிருந்தது. அவ்வாறே கச்சத்தீவை நீக்கி வடக்கு மாவட்டப் படம் வரைந்தேன்".

என்பது இலங்கை அமைச்சரவை அரசுச் செயலாளர் கூறிய சொற்களாகும். இவை கூறப்பட்டது 8.5.1966 அன்று ஆகும். இச் செய்தி இலங்கை "டெய்லி மிரர்" நாளிதழிலும், இந்தியாவில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழிலும் வெளிவந்தது.

ஜமீன் நில உரிமைச் சட்டப்படி இருபதுக்கும் மேற்பட்ட தீவுகள் கரையோரக் கிராமங்களுடன் இணைக்கப்பட்டன. பெருவாரியான காலங்களில் கச்சத் தீவு, இராமேசுவரத் துடனும், சில சமயம் தனுஷ்கோடியுடனும் இணைக்கப்பட்டது.

இராமேசுவரம் நகரியத்தின் ஒரு பகுதியாகவும், இராமேசுவரம் கர்ணத்தின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதியாகவும் கச்சத் தீவு இருந்தது. ஒரு சமயம் இராமேசுவரம் நகரியக் குழுவினர் கச்சத் தீவில் காடு வளர்க்கும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானித்தனர். பின் இத்திட்டம் கைவிடப்பட்டது.

*23.06.1880* ஆம் வருடம் இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்த எட்டு கடற்கரைக் கிராமங்களையும், கச்சத் தீவு, மண்ணாளித் தீவு, முயல் தீவு, குத்துக்கால் தீவு ஆகிய நான்கு தீவுகளையும் இராமநாதபுரம், மதுரை மாவட்டச் சிறப்பு ஆட்சியர் எட்வர்டு டர்னர் அவர்களிடமிருந்து, கீழக் கரை சாயபு மாப்பிள்ளை மரக்காயர் மகன் ஜனாப் முகம்மது அப்துல் காதர் மரக்காயர் அவர்களும், இராமசாமிப் பிள்ளை மகன் முத்துசாமிப் பிள்ளையும் கூட்டாக வருடம் ஒன்றுக்கு எழுநூறு ரூபாய் குத்தகைக்கு எடுத்தனர். அதற்குரிய பத்திரம் இராமநாதபுரம் பத்திரப் பதிவு அலுவலகத்தில் *2.7.1880* அன்று பதிவு செய்யப்பட்டது. சேதுபதி ஜமீன்தாரிட மிருந்து குத்தகைக்குப் பெற்ற கிராமங்களையும், தீவுகளை யுமே மாவட்ட ஆட்சியர் இவ்வாறு குத்தகைக்கு விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இடங்கள், "இராமநாதபுரம் ஜமீன்தாரியைச் சேர்ந்தது" என்று தெளிவாகப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

*4.12.1885* அன்று சேதுபதியவர்களின் எஸ்டேட் மேலாளர் டி. ராஜாராமராயரிடமிருந்து முத்துசாமிப் பிள்ளை என்பவர் சாயவேர் சேகரிக்கக் கச்சத்தீவை ஆண்டுக்குப் பதினைந்து ரூபாய்க்குக் குத்தகைக்கு எடுத்தார்.

முத்துராமலிங்க சேதுபதி *1767* ஆம் ஆண்டு முத்துக் குளிக்கும் சில கடற்கரைக் கிராமங்களையும், தீவுகளையும் பெற்றிருந்தபோது, மன்னாரிலிருந்து பாம்பனுக்கு டச்சுக் காரர்களை வர அனுமதியளித்தார். டச்சுக் கப்பல் வரும் இடங்களில் ஒன்றாகக் கச்சத் தீவு குறிக்கப்பட்டிருந்தது. டச்சுக்காரர் அனுமதியைப் பெற்றிருந்தாலும், ஜமீனைச் சேர்ந்தவர்கள் எவர் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமென்றாலும் கச்சத் தீவுக்குச் செல்லலாம். டச்சுக்காரர்கள் தடுக்கக் கூடாது என்ற விதி ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது. இதன் மூலம் சேதுபதி ஜமீன்தாரின் கச்சத் தீவு பரம்பரை உரிமை நிலைநாட்டப்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் ஆட்சிச் செயலர் *20.4.1950* இல் எஸ்டேட் மேலாளருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் கச்சத்தீவு பற்றியும், *1929-1945* ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாண அரசின் மீன்பிடித் துறை, அதனைக் குத்தகைக்கு எடுத்து அனுபவித்தது பற்றியும், மீன் பிடிப்பவர்கட்கும், சங்குகள் சேகரிப்பவர்கட்கும் அவைகளைக் குத்தகைக்கு விடப்பட்டது பற்றியும் எழுதியுள்ளார்.

இலங்கை நெல்லிமலைத் தோட்டத்திலுள்ள சோலை மலை ஆசாரி என்பவர் தாம் எழுதிய கடிதம் ஒன்றில் ஒரு முக்கியமான செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். இராமநாதபுரம் ஜமீன்தாரர் பாஸ்கர சேதுபதியவர்களும், சுவாமி விவேகானந்தரும் ஒருங்கு வீற்றிருக்கும் அரிய காட்சியைக் கண்ட சுந்தரப் புலவர் என்பவர் சில பாடல்கள் பாடியதாகவும், அதைக் கேட்டு மகிழ்ந்த பாஸ்கர சேதுபதியவர்கள் கச்சத் தீவின் ஒரு பகுதியை அனுபவிக்கச் சுந்தரப் புலவருக்கு உரிமை கொடுத்ததாகவும் சோலைமலை ஆசாரி எழுதி யுள்ளார். விவேகானந்தர் பாஸ்கர சேதுபதியவர்களுடன் இருந்த நாள் 27.1.1897 ஆகும்.

சென்னை மாகாணத்தில் சட்டம் மற்றும் உள்துறை அமைச்சராக இருந்த டாக்டர் எஸ். சுப்பராயன் ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்து நிறைவேறச் செய்தார். அதன்பின் சென்னை மாகாண அரசின் ஆவணங்களில் "இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம், இராமேசுவரம் கிராமப்புல எண்.1250, 285 ஏக்கர் 20 சென்ட் கச்சத்தீவு அரசுப் புறம்போக்கு" என்ற குறிக்கப்பட்டது.

*1921* ஆம் ஆண்டு கொழும்பு நகரில் நடைபெற்ற குழுக் கூட்டம் ஒன்றில் சென்னை மாகாண ஆங்கிலேய அதிகாரி ஏ.ஜி.லீச் என்பவர் கச்சத் தீவு பற்றிய சேதுபதி மன்னர்களின் உரிமை ஆவணங்கள் பற்றி மிக விரிவாக எடுத்துரைத்தார்.

"கச்சத் தீவின் உரிமை பற்றி இப்போது பேசவில்லை. எல்லை மட்டுமே நிர்ணயிக்கப்படுகிறது. பிற்காலத்தில் ஆவணப்படி இந்திய அரசோ அல்லது சென்னை மாகாண அரசோ கச்சத்தீவிற்கு உரிமை கொண்டாடுவதை இந்த ஒப்பந்தம் தடுக்காது" என்று இலங்கைக் குழுவின் தலைவர் கூறினார். இது ஒப்பந்தத்தில் எழுதப்பட்டுள்ளது.

சென்னை நிலத் தீர்வை உதவி அலுவலர் எஸ்.ஏ.விசுவ நாதன், *11.11.1958* இல் வெளியிட்ட இராமேசுவர நிலப் பதிவேடு எண்.*68* இல் கச்சத் தீவு இராமேசுவரம் கிராமத்தைச் சேர்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

*1.7.1913* இல் சென்னை மாகாண அரசுச் செயலர், சேதுபதி மன்னரிடமிருந்து சில தீவுகளைப் பதினைந்து ஆண்டுகட்குக் குத்தகைக்கு எடுத்தார். சேதுபதியரசர்க்குச் செலுத்தப்பட்ட தொகை ரூபாய் ஐம்பதாயிரம். அதில் "ஜமீன்தாரிக்குச் சொந்தமான இராமேசுவரத்தின் வட கிழக்கில் உள்ள கச்சத்தீவு" என்று குறிக்கப்பட்டுள்ளது.

*1957* ஆம் வருடம் வெளியிடப்பட்டு, *1.1.1966* இல் திருந்திய இரண்டாம் பதிப்பாக வெளிவந்த ஆவணப் பதிவு நூலில் 107 ஆம் பக்கம் தனுஷ்கோடிக்குச் சேர்ந்த குடியில்லாத சிறு கிராமமாக (Hamlet) கச்சத் தீவு குறிக்கப்பட்டுள்ளது.

*1913* முதல் *1928* வரை சென்னை மாகாண அரசின் மீன்வளத் துறை குத்தகைக்கு விட்ட இடங்களில் கச்சத் தீவும் ஒன்று. சேதுபதியரசரிடமிருந்து சென்னை மாகாண அரசு அதிகாரிகள் கச்சத்தீவைக் குத்தகைக்குப் பெற்று மீனவர் கட்குக் குத்தகைக்கு விட்டதுடன், சேதுபதியரசர்களின் அதிகாரிகளும் நேரடியாகக் குத்தகைக்கு விட்டுள்ளனர். அனைத்திலும் கச்சத்தீவு இடம் பெற்றுள்ளது.

தொண்டி, நம்புதாழையைச் சேர்ந்த மீனவர் பலர் அவ்வாறு குத்தகைக்குப் பெற்றுள்ளனர்.

*19.2.1923* இல் இராமநாதபுரம் திவான் ஆர். சுப்பைய நாயுடு, அரசர் ஆர். ராஜேஸ்வர சேதுபதிக்கு ஜமீன் கடல் எல்லைப் பற்றி எழுதிய கடிதத்தில் கச்சத்தீவு பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளன. இதைப் பரிசீலித்து சேதுபதியவர்கள் 27.2.1922 இல் கையொப்ப மிட்டுள்ளார்கள்.

கச்சத்தீவு பற்றிப் பல இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள் அனைத்திலும் கச்சத்தீவு சேதுபதி அரசர்க்கு உரியதென்றும், இராமேசுவரம் கிராமத்தைச் சேர்ந்தது என்றும் தவறாமல் குறிக்கப்பட்டுள்ளது. கச்சத்தீவு தமிழக மண்.

**இந்திய அளவைத் துறையினர்**

*1874* ஆம் ஆண்டுஇந்திய நில அளவைத் துறை உயர் அலுவலர் கர்னல் வாக்கர் அவர்களும், அவர் உதவியாளர் மேஜர் பிரான்ஃபீல்டு அவர்களும் இந்தியாவின் நில அளவைத் துறைக்காகச் சென்னை மாகாணத்தில் அளவை மேற்கொள்ளும்போது கச்சத் தீவையும் அளந்தனர். கச்சத்தீவுக்குக் கச்சத் தீவு தெற்கு, கச்சத் தீவு வடக்கு என்று பெயரிட்டனர்.

கச்சத்தீவு 285 ஏக்கர் 20 சென்ட் என்று அளந்து கூறினர். கச்சத்தீவுக்கு சர்வே எண்.1250 என்றும் குறித்தனர். அதை ஒரு கல்லிலும் பொறித்துக் கச்சத்தீவில் நட்டனர். அந்தோணியார் கோயில் முன்பும் அக்கல் நடப்பட்டது. அக்கல் இன்னும் உள்ளது.

இந்திய நில அளவைத் துறையினர் *1895, 1930* ஆகிய ஆண்டுகளில் மீண்டும் கச்சத்தீவு வந்தனர். அவர்கள் வரைந்த வரைபடங்களின் அடிப்படையில் *1952, 1956* ஆம் ஆண்டு வெளியீடுகளில் வெளியிட்ட அதில் கச்சத் தீவையும் குறித்தனர். இராமேசுவரத்தின் ஒரு பகுதி கச்சத் தீவு என்றும் குறிப்பிட்டனர்.

*1874* முதல் *1956* வரை நில அளவை ஆவணங்களில் கச்சத்தீவு இந்தியப் பகுதியாகவே காட்டப்பட்டுள்ளது.

கச்சத்தீவு சேதுபதியின் சீமை; தமிழகப் பகுதி; இந்தியாவின் பிரிக்க முடியாத அங்கம் என்றும் இவ்வளவு ஆவணங்கள் இருந்தும், கச்சத் தீவுக்குரிய ஆதாரங்களை ஆவணக் காப்பகங்கள் (இந்தியா, தமிழ்நாடு) பம்பாய் ஆகிய இடங்களில் தேடியதாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் வெளிப்படையாகக் கூறுகிறார்.

பிரதமர் இந்திரா அம்மையாரோ கச்சத் தீவு ஆவணங்கள் அடிப்படையில் இலங்கைக்கு அளிக்கப்பட வில்லை. வேறு அரசியல் காரணங்களுக்காகக் கொடுக்கப் பட்டது என்று கூறுகிறார்.

**இந்திய வழக்கு மன்றமும் கச்சத் தீவும்**

கீழக்கரை வாசுதேவன் செட்டியார் என்பவர் கச்சத்

*(4 ஆம் பக்கம்)*

# கச்சத் தீவில் ஆர்வம் காட்டாத இந்திய ஆட்சி!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீவிற்குச் சில பொருட்களைக் கொண்டு சென்றார். இந்திய அரசின் சுங்க இலாகாவினர் அவரைத் தடுத்தனர். பொருள்களைப் பறித்தனர். வழக்கு உச்சநீதிமன்றம் வரைச் சென்றது. விசாரணை செய்த நீதிபதிகள், "கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதியே. அங்கு சென்று வாணிகம் செய்ய ஒவ்வொரு இந்தியருக்கும் உரிமையுண்டு. இந்தியர் யார் வேண்டுமானாலும் அங்கு போகலாம்" என்று தீர்ப்பளித்தனர்.

ஒரு முறை கச்சத் தீவுப் பகுதியில் ஒருவர் முத்துக்குளித்து எடுத்து வைத்திருந்த சங்குகளை வேறொருவர் திருடிவிட்டார். சென்னை உயர்நீதிமன்றம் அவ்வழக்கை ஏற்று விசாரித்துத் தீர்ப்பளித்தது. இதனால் கச்சத் தீவுப் பகுதியில் சென்னை உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவைகளின் அதிகாரம் அமுல்படுத்தப்பட்டுள்ளது தெரிகிறது.

இந்திய அரசின் முன்னாள் வழக்கறிஞர் (அட்டர்னி ஜெனரல்) நிரேன்டே "அன்றும் சரி, இன்றும் சரி, கச்சத் தீவு இந்தியாவின் ஒரு பகுதியே" என்று கூறினார்.

மற்றொரு தீர்ப்பில் இராமநாதபுரம் துணை ஆட்சியர் இலங்கையின் தலைமன்னாருக்கு 5 கிலோ மீட்டர் மேற்கு வரை தன் அதிகாரத்தைச் செலுத்தியுள்ளார். பாம்பன் வந்த அரபுப் பயணிகளைக் கள்ளக்காரன் பெட்டியிலேயே இறக்கிவிட்ட இலங்கைப் படகோட்டிகள் மீது தொடரப்பட்ட வழக்கில் இலங்கைப் படகோட்டிகட்கு அபராதம் விதித்து மேற்கண்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

**அரசு அதிகாரிகளின் அலட்சியம்**

அ) 1972 ஆம் ஆண்டு சூலை மாதம் 15 ஆம் தேதி தமிழக அரசு ஆவணக் காப்பகத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்ட அரசு இதழின் திருத்திய புதுப்பதிப்பு வெளியிடப்பட்டது. அந்நூலின் தொடக்கத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தின் வரைபடம் அச்சாகியுள்ளது. அந்த வரைபடத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தின் பகுதியாகக் கச்சத்தீவு காட்டப்படவில்லை. அன்றைய தேதியில் இந்தியப் பகுதியான கச்சத்தீவை விட்டுவிட்டு எப்படி வரைபடம் வரைந்தார்களோ தெரியவில்லை. முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முன்னுரையையும் பெற்றுள்ளனர்.

ஆ) பத்தாண்டுகட்கு ஒரு முறை எடுக்கப்படும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மக்கள் குடியில்லாத ஊர்ப் பகுதிகள் கூடத் தவறாமல் குறிக்கப்படுவது வழக்கம். ஆனால் 1951, 1961, 1971 ஆண்டுகளில் ஆள் அற்ற பல இடங்களும் தீவுகளும் குறிக்கப்பட்டிருக்கக் கச்சத்தீவு விடுபட்டுள்ளது. இது தவறான செயல் ஆகும்.

இ) சென்னை மத்திய நில அளவை அலுவலகத்தின் எச்.2, 38482/81, நாள் 29.9.1981 மற்றும் சென்னை நில அளவைப் பதிவாளர் அவர்களது எச்.2, 38495/91 நாள் 11.9.1981 குறிப்பின்படி கச்சத்தீவை இராமநாதபுர மாவட்ட வரைபடத்திலிருந்து நீக்குவதற்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் இராமேசுவரம் கிராமப் புல எண்.1250 சர்க்கார் புறம்போக்கு கச்சத் தீவு ஆர்.சி.எப்.23, 75/83பி ஏ.சி. நாள் 6.2.1982 குறிப்பாணையின்படி உத்தரவிட்டார்.

இராமநாதபுரம் வட்டாட்சியரும் 118/82 நாள் 19.2.1982 மூலம் இராமநாதபுரம் மாவட்ட வரைபடத்திலிருந்து கச்சத் தீவை நீக்க டேராடுனிலிருக்கும் இந்திய வரைபட அலுவலகத் திற்குக் கடிதம் எழுதினார். அதன்படி இராமநாதபுரம் மாவட்ட வரைபடத்திலிருந்து கச்சத்தீவு நீக்கப்பட்டது.

**இந்திய அரசின் இமாலயத் தவறு**

சேதுபதி சீமை என்று இவ்வளவு ஆவணங்கள் இருக்க, இலங்கை அரசு கச்சத் தீவுக்கு ஏன் உரிமை கொண்டாடியது ? அது இந்திய அரசின் மெத்தனத்தினால்தான்.

1955, 1956 ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசு கச்சத் தீவில் போர்ப் பயிற்சி செய்தது. பயிற்சியைக் கண்டிக்காத மத்திய அரசு "தூதர்கள் பேசும்வரை பயிற்சியை ஒத்திப் போடுக" என்றது.

தொடர்ந்து பலமுறை கச்சத் தீவு தன்னுடையது என்று இலங்கை அரசு கூறியது. இந்திய அரசு ஒரு போதும் வன்மையாகக் கண்டிக்கவில்லை.

1971 முதல் 1974 ஆம் ஆண்டு வரை அந்தோணியார் விழாவின் போது இலங்கை முப்படைகளம் அங்கு முகாமிட்டன. இராணுவ ஹெலிகாப்டர் கச்சத் தீவில் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

போர்க் கப்பல் கஜபாகு கச்சத் தீவில் நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தியா கடுமையான எதிர் நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை; தன் படையையோ அதிகாரிகளையோ அனுப்பி உரிமையை நிலைநாட்டவில்லை. தன் நாட்டுத் தீவு என்ற அக்கறையே இல்லாமல் இருந்தது.

பாகிஸ்தான், சீனப் போரில் பல்லாயிரக்கணக்கான சதுர மைல் பூமிகளை அந்நாட்டிடம் இழந்து இன்னும் அதை மீட்க வக்கற்ற இந்திய அரசு - மேற்கு வங்கத்தின் பெருவாரியை வங்க நாட்டுக்கும், அந்தமான் நிக்போபர் அருகில் உள்ள கொக்கோ தீவை பர்மாவிற்கும் தானம் செய்த இந்திய அரசு அதுபோல் கச்சத் தீவைத் தாமாகவே இலங்கைக்குக் கொடுக்க முடிவு செய்து விட்டது. வினோபா பாவேயின் "பூமிதானம்" என எண்ணிவிட்டனர்.

இந்திய அரசு கச்சத் தீவைக் "கண்டுகொள்ளாததால்" இலங்கை எளிதாக ஆக்கிரமிப்புச் செய்தது. இந்திய மண்ணில் அடிக்கடி கால் வைத்தது.

"ஒரு நாட்டின் ஒரு பகுதியை மற்றொரு நாடு தன்னுடைய பகுதி என்று அறிவித்தால், அதனை உரிய நாடு வலிமையாக எதிர்க்காமல் அமைதியாக இருந்தால், அது ஆக்கிரமித்த நாட்டின் உரிமையை வாய்ச் சொல்லில் சொல்லாமல் ஒப்புக் கொண்டது என்றே பொருள்" - என்பதுதான் சர்வதேசச் சட்டமாகும்.

இலங்கை முப்படையினர் கச்சத் தீவில் முகாம் இட்டும் இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டதால் கச்சத் தீவ இலங்கைக்கு உரியது என்று ஒப்புக் கொண்டது என்பதே பொருளாகும். இது இந்திய அரசின் மாபெரும் தவறாகும். தமிழகம் அவற்றைக் கண்டு மவுனம் காத்தது அதைவிடப் பெரிய தவறு.

# தமிழக அரசே! தேர்வுகள் முடியும் வரையிலாவது மின்வெட்டை நிறுத்து!

*12 ஆம் வகுப்பு தேர்வுகள் தொடங்கிவிட்டன; 10 ஆம் வகுப்பு தேர்வுகள் தொடங்க உள்ளன; முதல் தலைமுறையாக படிக்க வந்து தேர்வுக்கு தயாராகும் தங்கைகளும், தம்பிகளும் பாடப் புத்தகத்தைப் படிக்க உட்கார்ந்தால் மின்சார வெட்டு!*

*ஆனால், கோடி கோடியாக தமிழ்நாடு வளத்தையும், பணத்தையும் வாரிச் சுருட்டும் பன்னாட்டு நிறுவனங்களுக்கோ, 24 மணி நேரமும் தடையில்லாத மின்சாரம்!*

*தேர்வுக் காலம் முடியும் வரையிலாவது - இந்த மின் தடையை, தமிழ்நாடு அரசு நிறுத்தி வைக்கக் கூடாதா?*

*பாதிக்கப்படும் ஏழை எளிய சமூகத்து மாணவச் செல்வங்களின் கல்வியை விட, பன்னாட்டு நிறுவனங்களின் நலன்தான், இந்த அரசுக்கு முக்கியமாகி விட்டதா?*

**தமிழக அரசே!**

- *பள்ளித் தேர்வுகள் முடியும் வரையிலாவது மின் தடையை அமுல் படுத்தாதே!*
- *இரவு 10 மணிக்கு மேல் கோயில் பண்டிகைகளில் ஒலி பெருக்கிகளை அலற வைத்து, மாணவர் படிப்பைக் கெடுத்து விடாதே! இது நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு எதிரானது!*

*நியாயமான இந்த சமூகநீதிப் போராட்டத்துக்கு, மாணவர்களே! பெற்றோர்களே ஆதரவு தாரீர்!*

*மார்ச் 5 - மின்வாரியங்கள் முன் போராட்டம்!*

*மாணவச் செல்வங்களின் வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றும் போராட்டம்!*

*ஆதரவு தருவீர்! போராட்டத்தில் பங்கேற்பீர்!*

**- பெரியார் திராவிடர் கழகம்**

# தருமபுரியில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம்




21.2.2011 அன்று மாலை 6.30 மணிக்கு தருமபுரி மத்திய பேருந்து நிலையம் இராசகோபால் பூங்கா அருகில் மாவட்ட கழகத்தின் சார்பில் பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடந்தது. முன்னதாக சமர்பா குழுவினரின் இன எழுச்சி இசை நிகழ்ச்சி எழுச்சியுடன் துவங்கியது. பொதுக் கூட்டத்திற்கு இளம்பரிதி தலைமை வகித்தார். நெ.த.அறிவுடைநம்பி வரவேற்புரையாற்றினார். சந்தப்பட்டி கணேசன், க. நஞ்சப்பன், இராசுகுமார், பரமசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருட்டிணகிரி மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி, தருமபுரி மாவட்ட அமைப்பாளர் வேடியப்பன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். கழகத் தலைவரின் உரை இரவு 10.45 மணி வரை தொடர்ந்தது. இடையில் மின் தடை ஏற்பட்டும், இன மொழி உணர்வாளர்கள் கலையாமல் உற்சாகத்துடன் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியில் வேலுபிரபாகரன் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 3rd March 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்ச் 10, 2011 | புரட்சி 10 | முழக்கம் 8 | விலை: ரூ.2.50


## மாணவர் தேர்வு நேரத்திலும் மின்வெட்டா?

# கழகம் ஆர்ப்பாட்டம்: கைது

*பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கு தடையின்றி மின்சாரம் வழங்கும் தமிழக அரசு, தேர்வுக்கு படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு மின்வெட்டு தந்து வரும் சமூக அநீதிக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம், மின்வாரியங்கள் முன் மார்ச் 5 ஆம் தேதி ஆர்ப்பாட்டங்கள் நடத்தியது. சென்னை, சேலம், கோவை, கிருட்டிணகிரி, வேலூர், தூத்துக்குடி, திண்டுக்கல், பொள்ளாச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.*

**சென்னை:** சென்னை அண்ணா சாலையில் தமிழ்நாடு மின்வாரியம் அலுவலகம் அருகே வடசென்னை மாவட்ட கழகத் தலைவர் கேசவன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. காயிதே மில்லத் கல்லூரி



வாயிலிலிருந்து கண்டன முழக்கங்களுடன் தோழர்கள் புறப்பட்டுச் சென்றபோது மின்வாரிய அலுவலக வாயில் அருகே பகல் 11 மணியளவில் 60 தோழர்கள் கைது செய்யப் பட்டனர். தென்சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி. குமரன், செயலாளர் உமாபதி, தோழியர்கள் தமிழ்ச் செல்வி (கைக் குழந்தையுடன்), அயனாவரம் தோழியர்கள் அலமேலு, ஜெயந்தி (கைக் குழந்தையுடன்) உள்ளிட்ட 60 தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள திருமண மண்டபத்தில் வைக்கப்பட்டு, பிற்பகல் விடுதலை செய்யப் பட்டனர்.

**கிருட்டிணகிரி:** கிருட்டிணகிரியில் பழையபேட்டை சாலை ரவுண்டானா அருகில் மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடந்தது. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆர்ப்பாட்டத்துக்கு தலைமை ஏற்றார். மாவட்ட தலைவர் தி. குமார், மாவட்ட செயலாளர் சோ. பிரேம்குமார், மாவட்ட அமைப்பாளர் பழனிச்சாமி முன்னிலை வகித்தனர். ம.தி.மு.க. மாவட்ட செயலாளர் ஈ.வி.கோ. இளங்கோ, நகர செயலாளர் கு. சந்திரன், ஒன்றிய செயலாளர் சீனிவாசன், தமிழர் தேசிய இயக்க மாவட்ட செயலாளர் முருகேசன் கண்டன உரையாற்றினர். மாவட்ட கழக மாணவரணி அமைப்பாளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

**சேலம்:** சேலம் நெத்திமேடு தமிழ்நாடு துணை மின் நிலையம் முன் கண்டன போராட்டம் நடைபெற்றது. கழக மாவட்ட துணை செயலாளர் ஏற்காடு பெருமாள் தலைமை தாங்கினார். தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, மனித உரிமை பாதுகாப்பு மையம் வழக்கறிஞர் மாயன், ம.தி.மு.க. ஆனந்தராஜ், தமிழ்நாடு மாணவர் கழகம் தீபக் மற்றும் சட்ட கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர். தமிழக அரசைக் கண்டித்து கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது. பின்னர் போராட் டத்துக்கு அனுமதி மறுப்பு எனக் கூறி கழகத் தோழர்கள் மற்றும் ஆதரவாளர்கள் 50 பேரை கைது செய்து மண்டபத்தில் அடைத்தது காவல்துறை. இரவு 7.30 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஜங்சன் தங்கராசு நன்றி கூறினார்.

**கோவை:** கோவையில் மாவட்ட மின்வாரிய அலுவலகம் முன் மாநில செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி தலைமையில் 5 ஆம் தேதி மாலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. 40 தோழர்கள் பங்கேற்றனர்.



**கொளத்தூர்:** 5.3.2011 அன்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கொளத்தூர் மின்வாரியம் முன்பு கண்டன போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்திற்கு நகர



செயலாளர் இராமமூர்த்தி தலைமை தாங்கினார். போராட்டத்தின் நோக்கம் குறித்து டைகர் பாலன் உரையாற்றினார். 42 பேர் கலந்து கொண்டனர். தமிழக அரசைக் கண்டித்து கண்டன முழக்கம் எழுப்பப்பட்டது. ஒன்றியத் தலைவர் சூரிய குமார் நன்றி கூறினார்.

**தூத்துக்குடி:** தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் மாணவர்களின் தேர்வு நேரங்களில் மின்வெட்டை ஏற்படுத்தும் மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 5.3.11 அன்று மாலை 5 மணியளவில் தூத்துக்குடியிலுள்ள பழைய நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்றது.

மாவட்ட செயலாளர் கோ. அகுமார் தலைமை வகித்தார். ஆழ்வை ஒன்றியத் தலைவர் பா. முருகேசன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தை ஆதித் தமிழர் பேரவையின் மாநில துணை பொதுச் செயலாளர் க. கண்ணன் தொடங்கி வைத்து உரையாற்றினார். தொடர்ந்து மாவட்ட அமைப்பாளர் ச.கா.பாலசுப்பிரமணியன், புரட்சிகர இளைஞர் முன்னணி சி. சுஜித், மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, ஆதித் தமிழர் பேரவை மாவட்டச் செயலாளர் ரா.வே. மனோகர், மாவட்ட தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு ஆகியோர் உரையாற்றினர். கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து விளக்கவுரையாற்றினார். இறுதியாக, தமிழ்நாடு மாணவர் கழகத்தின் வ. அகரன் நன்றி கூறினார்.

(உள்ளே - தலையங்கம்)

## பி.ஜே. தாமஸ் நியமனத்தின் பின்னணி யார்?

**ஊ**ழல் தடுப்பு கண்காணிப்பு ஆணையம் என்பது நாட்டின் உயர்மட்ட நிறுவனம். இதன் ஆணையர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுபவர். அப்பதவிக்கு நியமிக்கப்படுகிற நபரைப் பரிந்துரைக்கும் குழுவில் பிரதமர், உள்துறை அமைச்சர், எதிர்கட்சித் தலைவர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். இந்தப் பதவிக்கு பி.ஜே. தாமஸ் என்ற உயர் அதிகாரி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மீது ஏற்கனவே ஊழல் வழக்கு ஒன்று விசாரணையில் இருக்கிறது என்பதுதான் இதில் கவனிக்கப்பட வேண்டிய செய்தி.

1992 ஆம் ஆண்டில் கேரளாவில் கே. கருணாகரன் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சியின் போது வெளிநாடுகளிலிருந்து பாமாயில் இறக்குமதி செய்யப்பட்டபோது பெரும் ஊழல் நடந்தது. அப்போது உணவுத் துறை செயலாளராக இருந்தவர் இதே பி.ஜே.தாமஸ். இவர் மீதான ஊழல் வழக்கு இன்றும் உச்சநீதிமன்ற விசாரணையில் உள்ளது. அதுமட்டுமல்ல, இப்போது பரபரப்பாக பேசப்படும் 2ஜி அலைக்கற்றை ஊழல் ஒதுக்கீடுகள் நடந்த போதும் இதே தாமஸ்தான் மத்திய தொலைத் தொடர்பு அமைச்சகத்தின் செயலாளராக இருந்தவர். ஆணையர் பதவிக்கு இவர் பெயர் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த பா.ஜ.க.வைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சுஷ்மா சுவராஜ், தாமஸ் மீது பாமாயில் இறக்குமதி ஊழல் வழக்கு இருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், மன்மோகன்சிங்கும், ப. சிதம்பரமும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. பி.ஜே. தாமஸ் நியமனத்தை எதிர்த்து தொடர்ந்த வழக்கில் உச்சநீதிமன்றம் அவரது நியமனத்தை ரத்து செய்து மன்மோகன்சிங், ப. சிதம்பரம் முகத்தில் கரியைப் பூசியுள்ளது. இந்தப் பிரச்சினையில் சரியான முடிவு எடுக்காமல் தவறு செய்துவிட்டதாக மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் வருத்தம் தெரிவித்துள்ளார். பி.ஜே. தாமஸ் நியமனத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகள் வந்தபோது அவரைக் காப்பாற்றுவதற்காகவே பிரதமரும், உள்துறை அமைச்சரும் அரும்பாடுபட்டனர். இப்படி ஒரு நெருக்கடிக்கு பிரதமரும் உள்துறை அமைச்சரும் தள்ளப்பட்டது ஏன் ? இந்தக் கேள்விக்கு விடை தேடுவது கடினம் அல்ல.

மத்திய அரசில் நிர்வாக அதிகாரம் இன்று பார்ப்பனர்களிடமும், மலையாளிகளிடமுமே ஒப்படைக்கப்பட்டுவிட்டது. ஈழத்தில் இனப் படுகொலையை நடத்திடவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை முழுமையாக ஒழிப்பதற்குமான திட்டத்தை மலையாள அதிகாரிகள் குழுவிடம் தான் சோனியா நம்பிக்கையுடன் ஒப்படைத்திருந்தார். இனப் படுகொலைகளை 'வெற்றிகரமாக' நடத்தி முடித்து சோனியாவிடம் மலையாள அதிகார வர்க்கம் பாராட்டுகளைப் பெற்ற பிறகு சோனியா, மலையாளிகளையே தனது நம்பகத்துக்குரிய அதிகாரிகளாக பெரும் பதவிகளில் நியமிக்க தொடங்கி விட்டார். அப்படித்தான் மலையாளி பி.ஜே. தாமசுக்கும், இந்த உயர்ப் பதவி அவரது மடியில் வந்து வீழ்ந்தது. சோனியா ஆணையை கைகட்டி நிறைவேற்றியவர்கள் இப்போது உச்சநீதிமன்றம் தலையில் குட்டிய பிறகு நாடாளுமன்றத்தில் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள்.

தலையங்கம்

# சமூக நீதிக்கான ஆர்ப்பாட்டம்

பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக் காடாக இந்தியா மாற்றப்பட்டு விட்டது. தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை எளிய மக்களின் நலன்களைவிட பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பார்ப்பன ஆதிக்க சக்திகளைத் திருப்தி செய்து அவர்களிடம் பெறும் லஞ்ச ஊழல் பணத்தில் அரசியல் திருவிளையாடல்களை நடத்துவதிலேயே இந்நாட்டு அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றன. இதற்கான கொள்கைகளை காங்கிரஸ், பா.ஜ.க.வும் நாடாளுமன்றத்தில் அமுல்படுத்த துடிக்கின்றன. தி.மு.க.வானாலும், அ.தி.மு.க. வானாலும் இந்த சுரண்டலுக்கு பச்சைக் கொடி காட்ட தயாராகவே இருக்கின்றன.

சமூக நீதி, சாதி எதிர்ப்பு, தீண்டாமை ஒழிப்பு, ஏழை எளிய மக்களின் வாழ்வுரிமை - யானையின் காலில் மிதிபடும் மழலைகளாக நசுக்கப்பட்டு வருகின்றன. பெரியார் திராவிடர் கழகம் கடந்த 5 ஆம் தேதி தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின்சார வாரியங்கள் முன் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் மின்சாரத்தைத் தருவதாக உறுதி அளித்து, அதை நிறைவேற்றுவதில் தீவிரம் காட்டும் தமிழக அரசு, படிக்கும் மாணவர்கள் தேர்வு காலத்தில்கூட மின்வெட்டை அமுல்படுத்தி, அவர்கள் கல்வியில் மண்ணை அள்ளிப் போடுவது என்ன நியாயம் என்ற கேள்வியோடு இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

நாட்டின் பல்வேறு அடிப்படைத் துறைகளில் ஆட்சியாளர்கள் தனியார் சுரண்டலுக்கு கதவு திறந்து விட்டுவிட்டனர். அதில் ஒன்று மின்சாரத் துறை. 1990 ஆம் ஆண்டு நரசிம்மராவ் பிரதமராக இருந்த காலத்தில் நிதியமைச்சராக இருந்த மன்மோகன்சிங், நாட்டின் பொருளாதாரத்தை சர்வதேச சுரண்டலுக்கு திறந்து விட்டார். அதற்கு புதிய பொருளாதாரக் கொள்கை என்று ஒரு பெயரை சூட்டினார்கள். அப்போதிருந்த மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருந்த மின் நிலையங்களை தனியார் மயமாக்க வேண்டும் என்று உலக வங்கியும், சர்வதேச நிதி நிறுவனமும் வலியுறுத்தத் தொடங்கின. ஆண்டுக்கு ரூ.25000 கோடி மின்சாரத்துக்கு நிதி உதவி தருவதாகக் கூறி இந்த அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டபோது இந்தியாவின் பார்ப்பன அதிகாரவர்க்கம் அப்படி ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தது.

1991 ஆம் ஆண்டு புதிய மின்சாரக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டது. இந்தக் கொள்கையை படிப்படியாகத் திணிக்க திட்டமிடப்பட்டு முதல் கட்டமாக ஒரிசா, மராட்டியம் போன்ற மாநிலங்களில் மின்சாரத் துறை அரசிடமிருந்து தனியாருக்கு விற்கப்பட்டன. என்ரான் என்ற அமெரிக்க மின் நிறுவனம், முதன்முதலாக மராட்டியத்தில் கால் பதித்தது. இதற்கான அனுமதியை வழங்கியது, 13 நாட்கள் மட்டுமே பிரதமராக இருந்து, பிறகு பெரும்பான்மை பலத்தை நிரூபிக்க முடியாமல் பதவி விலகிய வாஜ்பாய் ஆட்சி. அந்த 13 நாட்கள் அதிகார காலத்தில் என்ரான் நிறுவனத்தை அழைத்து வந்தார். இதற்கு என்ரான் போட்ட முதலீடு 9000 கோடி. இதில் 40 சதவீத முதலீட்டை இந்திய வங்கிகளின் பார்ப்பன அதிகார வர்க்கமே கடனாகத் தர முன் வந்தன.

என்ரான் மின்சாரத்துக்கு மராட்டிய மாநில அரசு கொடுத்த விலை ஒரு யூனிட்டுக்கு ரூ.7. இழப்பு ஏற்பட்டால் இழப்பீட்டுத் தொகையையும் தருவதாக வாஜ்பாய் ஆட்சி உறுதி கூறியது. பெரும் சுருட்டலோடு அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தைத் தராமலே - என்ரான், அமெரிக்காவுக்கு ஓடி விட்டது. இதே என்ரான் நிறுவனம், அமெரிக்காவில் மோசடி செய்து திவால் ஆன போது, என்ரான் தலைமை நிர்வாகி, அங்கே கைது செய்யப்பட்டார். இங்கே என்ரானின் சட்ட ஆலோசகராக இருந்தவர் ப. சிதம்பரம். அவர் பின்னர் நிதியமைச்சரானபோது மராட்டியத்தில் திவாலாகிப் போன என்ரான் நிறுவனத்துக்கு ரூ.9000 கோடி மக்கள் பணத்தை அள்ளிக் கொடுத்து அரசுக்காக வாங்கிக் கொண்டார்.

2000 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் மின்சாரத்துக்கான சட்டம் ஒன்றை கொண்டு வந்தனர். மின்சாரத் துறை, தனியார் வணிக அமைப்புகளைப் போல செயல்பட வேண்டும் என்றும், மின்சார ஒழுங்கு முறை ஆணையம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட வேண்டும் என்றும், தனியார் துறையை அனுமதிக்கலாம் என்றும் அந்த சட்டம் கூறியது. இந்த சட்டத்தின்படி மாநிலத்தின் நிர்வாகத்தில் இருந்த மின் வாரியங்கள் கலைக்கப்பட்டு, உற்பத்தி, பகிர்வு, வழங்குதல் என்ற மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. மின்வாரிய ஊழியர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. டாட்டா, ரிலையன்சு நிறுவனங்கள் டெல்லியில் மின் உற்பத்தியில் இறங்கி, யூனிட் ஒன்றுக்கு ரூ.1.32 மின்சாரத்தை அரசிடமிருந்தே வாங்கி, அதையே அரசு நிறுவனங்களுக்கு ரூ.6.52க்கு இலாபம் வைத்து விற்று 2 ஆயிரம் கோடி பணத்தை சுருட்டினார்கள். ஒரிசாவில் அரசிடம் வாங்கிய மின்சாரத்துக்கே பணம் கட்டாமல், தனியார் நிறுவனங்கள் ரூ.3240 கோடியை ஏமாற்றினர்.

முரசொலி மாறன், இந்தியாவின் வணிக வரித் துறை அமைச்சராக இருந்தபோது கொண்டு வந்த சுரண்டல் திட்டம் தான் சிறப்பு பொருளாதார மண்டலம். தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதி இதற்கு தொழில் நுட்பப் பூங்கா என்ற பெயர் மாற்றினார். இந்த மண்டலத்தில் தொழில் தொடங்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஏற்றுமதி வரி, இறக்குமதி வரி, கலால் வரி, சேவை வரி, மத்திய விற்பனை வரி, மாநில விற்பனை வரி - என்று எந்த வரியும் கிடையாது. 100 சதவீத வருமான வரி விலக்கு. தமிழ் நாட்டில் முரசொலி மாறன் மகன் தயாநிதி மாறன் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருந்த போது, அந்நிய நிறுவனமான நோக்கியா செல் நிறுவனத்தைக் கொண்டு வந்தார்.

இந்த பன்னாட்டு நிறுவனங்களுக்கு 24 மணி நேரமும் தடையின்றி மின்சாரம் வழங்குவதாக தமிழக அரசு உறுதி அளித்து செயல்படுகிறது. நோக்கியா நிறுவனம் மத்திய அரசுக்கு கட்டும் 'வாட்' வரியை தமிழக அரசே நோக்கியாவுக்கே திருப்பி செலுத்துகிறது. இவ்வாறு 2005 முதல் இதுவரை ரூ.650 கோடியை நோக்கியாவுக்கு தமிழக அரசு வழங்கியிருக்கிறது. மக்களுக்குத் தெரியாமல் இப்படி ஒரு கொள்ளை நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிறுவனங்களில் தலைமை நிர்வாகிகளாக இருப்பது பார்ப்பன உயர்சாதி வர்க்கம் தான்.

மக்களுக்காக சேவை செய்வதாகக் கூறி ஓட்டுகளை பெற்று அதிகாரத்துக்கு வந்தவர்கள் பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் சேவகர்களாக செயல்படுவதை நாட்டு மக்களுக்கு விளக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. அந்த நோக்கத்துடனேயே சமூக நீதிப் பார்வையில் பெரியார் திராவிடர் கழகம் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளது.

# அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா!



தேர்தல் கூட்டணி ஒதுக்கீட்டில் 'காங்கிரசின் பேரத்துக்கு தி.மு.க. பணிந்து விடக் கூடாது' என்று 'மானமிகு சுயமரியாதைக் காரர்' கலைஞர் கருணாநிதிக்கு வேண்டுகோள் விடுத்து திராவிடர் கழகத் தலைவர் "தாய்"க் கழகத்தின் சார்பில் வெளியிட்ட அறிக்கை இது:

"குட்டக் குட்டக் குனியும் போக்குக்கு எங்கே இது ஆட்பட்டு விடுகிறதோ என்ற அச்சம் தமிழ் இன உணர்வாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையில், தேவையற்ற கூடுதல் பாரத்தை இறக்கிவிட்டு, அதன் மூலம் **நிரந்தர சுமைதாங்கியாகாமல் மரியாதையுடன் முடிவு எடுக்க வேண்டும்."**

இதைத் தொடர்ந்து மத்திய அமைச்சரவையிலிருந்து விலகிக் கொண்டு, பிரச்சினை அடிப்படையில் மட்டும் ஆதரவு என்று தி.மு.க. உயர் மட்டக் குழு முடிவு எடுத்தவுடன் "தமிழர் தலைவர்" கி. வீரமணி விடுத்த அறிக்கை இது:

"தமிழ் மானம், தன்மானம் இவற்றை காப்பதுதான் தி.மு.க.வின் அடிப்படை லட்சியம், குறிக்கோள் என்பதை பறைசாற்றிய இந்த முடிவு, உலகத் தமிழர் முதல், உள்ளூர் தமிழர்கள் வரை அனைவரும் வரவேற்கும் முடிவாக அமைந்துள்ளது. கட்சித் தோழர்கள், இன உணர்வாளர்கள், இலட்சிய வீரர்கள் **மகிழ்ச்சியை நிரந்தரமாக்கும்** வகையில் தி.மு.க.வின் தேர்தல் பணித் திட்டம் அமைய வேண்டும் என்பதே நமது அடக்கமான ஆசை."

தொடர்ந்து கலைஞரை சந்தித்து கி.வீரமணி பாராட்டி சால்வை போர்த்தினார். (மேலே உள்ள படம்)

அதைத் தொடர்ந்து 63 இடங்களை காங்கிரசுக்கு தர முடியாது என்று கூறி, கூட்டணி முறிவை அறிவித்த முதல்வர் கலைஞர் கருணாநிதி, டெல்லியில் சோனியாவிடம் பேசி, அதே 63 இடங்களை காங்கிரசுக்கு ஒதுக்க முன் வந்த பிறகு கலைஞர் வெளியிட்ட கருத்து:

"இடையிலே ஏதோ, 'இழுபறி', 'தயக்கம்' என்றெல்லாம் நிலை இருப்பதாக நம்முடைய அன்புக்குரிய பத்திரிகையாளர்கள் சில பேர் மிக மிகக் கேவலமாக ஆத்திரத்தோடு, பொறாமையோடு அசூசை மனப் பான்மையோடு இந்த அணி உருவாகக் கூடாது, உறவு ஏற்பட்டு விடக் கூடாது என்ற எண்ணத்தால் தவறான செய்திகளை திசை திருப்புகிற செய்திகளை நம்முடைய கழகத் தோழர்கள் களைப்படையக் கூடிய அளவுக்கு செய்திகளை வெளியிட்டார்களே - **அவர்களுக்கெல்லாம் நல்ல பதிலாக** இன்றைய நாள் நான் சொன்ன இந்த (உடன்பாடு) எண்ணிக்கை விவரம் அமைந்திருக்கிறது......... தி.மு.கழகம் எந்த அளவிற்கு விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோடு, தோழமை உணர்வோடு நட்பு நேசம் இவை களிலே நீங்காத பற்றுக் கொண்டவை என்பதற்கு எடுத்துக்காட்டாக தி.மு. கழகம் 121 இடங்களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்ற இடங்களில் காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட தோழமைக் கட்சிகள் போட்டியிடுகிற வாய்ப்பை வழங்கியிருக்கிறது."

தி.மு.க., காங்கிரஸ் தொகுதி உடன்பாட்டுக்குப் பிறகு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, இப்படி ஒரு அறிக்கை வெளியிடுவார் என்று உலகத் தமிழரிலிருந்து உள்ளூர் தமிழர் வரை எதிர்பார்த்துக் காத் திருக்கிறார்கள்:

"தமிழ்நாட்டின் சமதர்ம சகாப்தத்தை சாமான்ய மக்கள் சுவைத்து அன்றாடம் பயன்படும் ஒப்பற்ற ஆட்சி அடுத்த அய்ந்து ஆண்டுகளுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காக, இன எதிரிகள் பின்னிய சூழ்ச்சி வலையை முதல்வர் மாண்புமிகு, மானமிகு கலைஞர், அறுத்தெறிந்து, தனது இராஜ தந்திரத்தை மீண்டும் நிரூபித்து, தி.மு.க. தீரமிக்க தலைமை என்பதை நிலைநாட்டி விட்டார். தி.மு.க. சுதந்திர மாக முடிவெடுக்க வேண்டும் என்றும், குட்டக் குட்டக் குனிந்துவிடக் கூடாது என்றும் தாய்க் கழகம் என்ற முறையில் நாம் விடுத்த வேண்டு கோளையேற்று, காங்கிரசாருக்கு 63 இடங்களை வழங்கும் 'சுதந்திரமான' முடிவை கலைஞர் எடுத்ததற்காகவும், குட்டக் குட்டக் குனியக் கூடாது என்று நாம் கூறியதை ஏற்று, குட்டி முடித்த பிறகு குனிந்த தீர்க்கமான முடிவுக்காகவும் தாய்க் கழகத்தின் தொண்டருக்கு தொண்டன் என்ற முறையில் மாண்புமிகு - மானமிகு கலைஞர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். இதுவே உலகத் தமிழர்கள் உண்மைத் தமிழர்களின் உணர்வும் ஆகும். நெருப்பாற்றில் நீந்தி 'பீனிக்ஸ் பறவையாக' வெளிவந்துள்ள தீர மிக்க தி.மு.க. வின் இந்தக் கூட்டணியே அடுத்து ஆட்சியில் அமரப் போவது உறுதி! பகைவர் எங்கோ, ஓடி மறைந்தார், இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே."

(குறிப்பு: தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்காக தமிழர் தலைவர் பிரச்சாரத் திட்டம் தலைமைக் கழகத்தால் வகுக்கப்பட்டு வருகிறது; கருஞ்சட்டைத் தோழர்களே, தயாராவீர்! - தி.க. தலைமைக் கழகம்)

**- கோடங்குடி மாரிமுத்து**

# பெண்கள் மீது திணிக்கப்பட்ட கற்பிதம்

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇ
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தாழ்துழந்து அட்ட தீம்புளிப்பாகர்
‘இனிது’ எனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”

**(குறுந்தொகை : பாடல் 167)**

எவ்வளவு அழுக்கான ஆடையணிந்து புகை படிந்த கண்களோடும் தலைவி சமைத்துப் போட்டாலும் கணவன் அவள் சமையல் இனிது என்று பாராட்டுவதைக் கேட்டுத் தலைவி பிறர் அறியா வண்ணம் நுண்ணிதாக மகிழ்ந்தாள் என்று இப்பாடல் ஒரு காட்சியை விளக்குகிறது. ரொம்பப் புகழ் பெற்ற சங்கப் பாடல் இது. உண்மையில் இது மிகவும் ரசிக்கத்தக்க பாடல்தான். என்ன ஒரு ரசமான குடும்பக் காட்சி. ஆனால், மனைவி சமைத்துப்போட கணவன் பாராட்ட அதைக் கண்டு பெண் நாணிச் சிவக்க என்று குறுந் தொகைக் காலத்திலேயே இந்த ஆண்-பெண் வேலைப் பேதமும், உன் கை ருசியே தனிதான் என்று ஏமாற்றி அடுக்களையை அவளது சாம்ராஜ்ஜியமாகத் தலையில் கட்டியதும் வந்துவிட்டதே என்று நினைக்கையில் பாடல் வருத்தமளிக்கிறது.

தொல்காப்பியத்திலேயே,

“ஏனது சுவைப்பினும், நீ கைதொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்கு”

என்று பெண்கள் தலையில் மொளகா அரைக்கப்பட்டு விட்டதுதான்.

ஆனால், இங்கு நாம் அதுபற்றி விளக்கிப் பேசப் போவதில்லை. அது பற்றிப் பின்னர் பார்க்கலாம். முதல் வரியில் வரும் காந்தள் மெல்விரலை மட்டும் எடுத்துக் கொள்கிறோம். கெட்டித் தயிரைப் பிசைந்ததால் சிவந்து போன ஒரு பெண்ணின் கை விரல்களைப் பற்றி இந்த வரி பேசுகிறது. அவ்வளவு மென்மையான விரல்கள் என்று! இப்படியே ஆரம்பித்து “பெண்மையைவிட மென்மையான தலையணைகள்” என்று இன்று கம்பெனிகள் விளம்பரம் செய்கிறவரை வந்து நிற்கிறோம்.

மென்மை என்பது பெண்மையின் ஓர் அம்சம் என்கிற கருத்து காலம் காலமாக நம் மனங்களில் கட்டமைக்கப் பட்டுள்ளது. வெள்ளைக்காரனும் வெண்டைக்காய்க்கு லேடீஸ்பிங்கர் (பெண் விரல் என்று பேர்) வைத்து அங்கேயும் இதே கொடியை நாட்டி வைத்து நாங்களும் உங்களுக்குக் குறைஞ்சவங்க இல்லே என்ற சொல்லி விட்டான். மென்மையானவள் என்பதால் முரட்டு வேலைக்கு லாயக்கில்லாதவள் என்று சமூக உற்பத்தியின் பல தொழில்களிலிருந்தும் பெண் விலக்கி வைக்கப்படுகிறாள்.

சோசலிச சோவியத் யூனியனுக்குப் போய் வந்து தன் அனுபவங்களை எழுதிய ஏ.வி.மெய்யப்ப செட்டியார், “அங்குள்ள பெண்கள் எல்லா வேலைகளும் செய்கிறார்கள். ஆகவே அவர்களுடைய கைகளெல்லாம் முரடாக இருக்கின்றன. பெண்களுக்குரிய மென்மையை அவர்கள் இழந்துவிட்டார்கள்” என்று வருந்தி எழுதினார். எல்லா ஆண்களுக்குமே அப்படி ஒரு வருத்தம் இருக்கிறதுதான். கையைப் பிடித்தால் பஞ்சு மாதிரி மென்மையாக இருக்கணும் என்கிற எதிர்பார்ப்பு.

ஆனால், நாட்டின் பெருவாரியான உழைக்கிற பெண்களின் கைகள் முரடாகவும் உறுதிப்பட்டும்தான் இருக்கிறது. சங்க இலக்கியங்களும் உப்பு மூட்டைகள் சுமந்த உமணப் பெண்கள் பற்றிப் பேசுகிறது. தூத்துக்குடிக்குப் போனால் இன்றும் அதே உமணப் பெண்கள் உப்பளங்களில் பெட்டிகளை வைத்துத் தூக்கிச் சுமப்பதைக் காண முடியும். சாலைப் பணிகளில், கரும்பு வெட்டும் தோட்டங்களில் உயர்ந்து எழுகின்ற கட்டிடங்களுக்கு ஊடே என்று பெண்கள் அரிவாளும் மண்வெட்டியும் பிடித்துக் கடினமான வேலைகள் எல்லாம் செய்கிறார்கள். மென்மை, மெல்லியலாள் என்கிற புருடாக்கள் எல்லாம் மத்திய தர வர்க்கம் மற்றும் அதற்கு மேல் உள்ள பெண்களின் தலையில்தான் பெரிதும் சுமத்தப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரத்தில் கண்ணகியை “மண் மகள் அறியா வண்ணச் சீறடியாள்” என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவார். கண்ணகியும் மிக வசதியான வீட்டுப் பிள்ளைதான். கண்ணகியின் பாதங்கள் மண்ணிலேயே பட்டதில்லை என்று பெருமையாகப் பேசினாலும், இன்னொரு பக்கம் அவளை வீட்டை விட்டு வெளியே விடாமல் அப்படி அடைத்து வைத்திருந்தார்கள் என்றும் பார்க்க வேண்டி யுள்ளது. உள்ளேயே பூட்டி வைச்சிருந்தா காயும்கூட அவிந்து மென்மையான கனியாகி விடுவதில்லையா? அதுபோலத் தான் பெண்ணும், மென்மையாக்கப்பட்டிருக்கிறார்கள். இது இயற்கையான மென்மை இல்லை. பல்லாயிரம் ஆண்டு களாகப் பூட்டி வச்சுப் பழுக்க வைத்த மென்மை

**ச. தமிழ்ச்செல்வன்**

மென்மையின் இன்னொரு முகமாக அவள் பலவீனமானவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். வீக்கர் செக்ஸ் என்று ஆங்கிலமும் சொல்கிறது. ஆனால், அது அப்பட்டமான பொய். உடல்ரீதியாகவே பெண்தான் பலசாலி. ஆணின் உடலில் பருவத்தில் மீசை முளைப்பது போன்ற சிற்சில மாற்றங்களைத் தவிர வேறு எந்தச் சிக்கலும் சாகும் வரை ஏற்படுவதில்லை. ஆனால், பெண் மாதவிலக்கில் துவங்கி கருத்தரித்தல், குழந்தை பெறுதல், மெனோபாஸ் என உயிரைக் காவு கேட்கும் உதிரப் போக்கு நிறைந்த பல உயிரியல் ரீதியான மாற்றங்களைத் தன் உடம்பில் தாங்கியபடியே தன் வாழ்நாள் முழுவதையும் கடந்து கொண்டிருக்கிறாள். ஆண் சந்திக்கும் மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் இந்த உடல் பிரச்சினைகளோடு சேர்த்துக் கூடுதலாகச் சந்திக்கிறாள்.

உடல் ரீதியாகவும் சரி, மன ரீதியாகவும் சரி, பெண்தான் ஆணைவிடப் பலசாலி. ஆனால், நமது பொதுப் புத்தியில் நேர்மாறான புரிதல்தான் அழுத்தமாகப் பதிவாகியிருக் கிறது.

பெண்மையின் மென்மை என்றால் என்ன என்பதற்கு நாம் கொண்டுள்ள புரிதல் ஆணின் தன்மைக்கு எதிரானது என்பதுதான். கடுமை, கடினம், முரடு, வலிமை, உறுதி போன்றவை எல்லாம் ஆண் குணம். இவற்றுக்கு எதிராக மென்மை என்பதை நாம் பெண்ணுக்குரியதாக முன் வைக்கிறோம். ஆணையும் பெண்ணையும் பரஸ்பர எதிர்வுகளாக நிறுத்திப் பார்க்கும் கண்ணோட்டத்திலிருந்தே ஆணிடம் இல்லாது பெண்ணிடம், பெண்ணிடம் இல்லாதது ஆணிடம் என்று இதெல்லாம் இயற்கையின் படைப்பு போன்ற ஒரு தோற்றத்தை இயல்பானது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக வரலாற்றுப் போக்கில் உருவாக்கப் பட்டதுதான்.

பெண் ஆணுக்கு இணையாக முடியாது. மாறாக அவனிடம் இல்லாத சில பள்ளங்களை இட்டு நிரப்புபவளாக இருப்பதே இயற்கை, அவளுக்கு இட்ட கட்டளை என்கிற கண்ணோட்டத்திலிருந்தே இக்கருத்துகள் பிறக்கின்றன. சமூகம் இப்படியாக ஏற்றத் தாழ்வு மிக்கதாக, வர்க்க சமூகமாக உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்பதாக இருப்பது இயற்கையிலேயே நியாயம் என்பதை வலியுறுத்துகிற முக்கிய ஆதாரமாக இந்த ஆண் - பெண் பேதம் பயன்படுகிறது. காலம் காலமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் குணங்கள் என்பவை சும்மா வெறும் விவரணைகளாகவோ அலங்காரத்துக்கு ஏற்பட்டவையோ அல்ல. சமூகத்தில் ஆண் செய்வற்றையெல்லாம் பெண் செய்யக் கூடாது. பெண் செய்வதற்கென்று சில இருக்கின்றன. அவை சமூகத்தின் சட்டங்கள் மட்டுமல்ல, இயற்கையின் விதியே அப்படித்தான் என்று அழுத்தமாகச் சொல்வதற்காகச் செயற்கையாகக் கட்டமைக்கப்பட்டவை யாகும்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பன்வாரி தேவி என்கிற பெண்மணி இந்தக் கட்டுக்களையெல்லாம் தாண்டினார். ஒரு சமூக சேவகர் என்கிற முறையில் அங்கு அமுலில் இருக்கும் குழந்தைத் திருமணம் உள்ளிட்ட பல பிற்போக்கான பழக்க வழக்கங்களுக்கு எதிராக இயக்கம் நடத்தினார். உயர் சாதி ஆண்கள் சிலர் கூட்டாக அவரைப் பாலியல் பலாத்காரம் செய்தனர். அவரது சமத்துவ நடவடிக்கைகளை முடக்கு வதற்காகவே அவர் மீது அவ்வன்முறை தொடுக்கப்பட்டது. பொம்பளைக்கு இதெல்லாம் தேவையா? அவள் தன் எல்லையை மீறலாமா? மீறினால் இப்படித்தானே நடக்கும்? என்கிற கேள்விகளை மீண்டும் பொதுப் புத்தியில் எறிகிற சம்பவமாக அந்த வன்முறை நிகழ்த்தப்பட்டது.

ஆகவே, பெண்மை என்கிற பெயரில் அது பெண்மை, நளினம், தாய்மை, கருணை, தியாகம் என எதுவாகவும் இருக்கலாம். அக் குணங்கள் வெறும் அலங்காரத்துக்கும் ஆண் பெண் வேறுபாட்டைச் சும்மா காட்டுவதற்காகவும் ஏற்பட்டவை அல்ல. அவற்றுக்கு ஒரு சமூகக் கடமை இருக்கிறது. செயல்பாட்டுத் தன்மையோடு இணைப்பு இருக்கிறது.

ஒரு பெண் மீது சுமத்தப்படும் குணங்கள் (கவனிக்க: பெண்ணின் குணங்கள் அல்ல. பெண் மீது சுமத்தப்படும் குணங்கள்) பற்றி நாம் பேசுகையில் நாம் இரண்டு விதமாகப் பார்க்க வேண்டும். ஒன்று உயிரியல் ரீதியானது எவை என்கிற கேள்வி. இன்னொன்று பண்பாட்டு ரீதியாக அவள் மீது சுமத்தப்பட்டுள்ள குணங்கள் எவை என்கிற கேள்வி.

பிள்ளை பெற்றுக் கொள்வதும், பாலூட்டுவதும் உயிரியல் சார்ந்தவை. அது இயற்கையானது. இயல்பானது. அதைக் கேள்விக்குள்ளாக்க வாய்ப்பில்லை. அது நிச்சயமாக ஆணுக்குக் கிட்டாத வாய்ப்பு.

அதைத் தவிர தாய்மை, பெண்மை, மென்மை போன்ற ‘மை’கள் எல்லாம் யாரு வச்ச மை? என்று கேட்க வேண்டிய மைகள்தான். இவையெல்லாம் பண்பாட்டு ரீதியாக வரலாற்று ரீதியாக சமூக ரீதியாகப் பெண் மேல் சுமத்தப் பட்ட மைகள்தான். இவை அத்தனையும் நம் கேள்விக்கு உள்ளாகியே தீர வேண்டும். இவையாவும் உயிரியல் ரீதியானவைபோல, இயற்கையின் படைப்புபோல ஒரு புரிதல் நம் (ஆண்-பெண்) எல்லோருடைய மண்டைகளிலும் ஏற்றப்பட்டுள்ளன. அது பண்பாட்டின் வேலை.

உண்மையில் பண்பாடுதான் ஒரு பெண்ணைக் கட்டமைக்கிறது. பெண் பிறப்பதில்லை. பெண் கட்டமைக்கப் படுகிறாள் என்று சொல்வது இந்தப் பண்பாட்டுக் கட்டமைப்பைத்தான். இந்தப் பண்பாடு என்பது தான் என்ன? இது ஏன் இந்த மாதிரி வேலைகளையெல்லாம் செய்கிறது? அதைக் கேள்விக்குள்ளாக்கி மாற்ற முடியாதா? அதை யார் செய்வது? ஆண்களா? பெண்களா? இருவரும் சேர்ந்ததா?

**‘பெண்மை என்றொரு கற்பிதம்’ நூலிலிருந்து;**
**மகளிர் நாள் சிந்தனையாக....**

# கடாபியும் ராஜபக்சேயும்

லிபியா அதிபர் கடாபிக்கு எதிராக அந்நாட்டு மக்கள், ‘புரட்சி’ செய்து வருகிறார்கள். எதிர்ப்புக்கு அமெரிக்காவும் பின்புலமாக இருப்பதால் அய்.நா.வும், லிபியாவுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அய்.நா. மனித உரிமைக் குழுவில் இடம் பெற்றிருந்த லிபியா, அதிலிருந்து நீக்கப்பட்டு விட்டது. அய்ரோப்பிய ஒன்றிய கூட்டமைப்பு விரைவில் லிபியா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஆலோசனை நடத்தி வருகிறது. லிபியாவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுயேச்சையான விசாரணை நடத்திட அய்.நா. மனித உரிமை ஆணையம் முடிவு செய்துள்ளது. அப்பாவி மக்களைப் படுகொலை செய்வதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று அய்.நா.வின் பொதுச் செயலாளர் பான்கி மூன் அறிவித்துள்ளார். அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், அய்.நா.வின் தலைமையகமான ஜெனிவாவுக்கு சென்று, அங்கே மனித உரிமைக் குழு கூட்டத்துக்கு வரும் பல்வேறு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களை சந்தித்து லிபியாவுக்கு எதிராக கருத்துகளை விவாதித்துள்ளார்.

அமெரிக்காவின் போர்க் கப்பலும் விரைந்துள்ளது. அய்க்கிய நாடுகள் அவையின் வளர்ச்சித் திட்டப் பிரிவின் நல்லெண்ணத் தூதராக இடம் பெற்றிருந்த கடாபி தனது மகள் ஆயிஷாவை நியமித்திருந்தார். அவரையும் அப்பதவியிலிருந்து அய்.நா. நீக்கியுள்ளது. இதேபோல் தமிழ் ஈழத்தில் தமிழர்கள் மீது இலங்கை அரசு இனப்படுகொலைகளை நடத்தியபோது, அய்.நா.வும், சர்வதேச நாடுகளும் இனப் படுகொலைக்கு எதிராக அதை தடுத்து நிறுத்த எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்க முன் வரவில்லை. இந்தியாவே தமிழர்களுக்கு எதிராக போரை நடத்தியதால் உலக நாடுகள் ஒதுங்கிக் கொண்டன. ஈழத் தமிழர்கள் மீதான இனப் படுகொலையை சர்வதேச அளவில் கொண்டு செல்வதற்கான அரசியல் அமைப்புகள் ஈழத் தமிழர்களிடம் இல்லாமல் போனதும் ஒரு காரணம் தான். புலம் பெயர்ந்த தமிழர்கள் நடத்திய உறுதியான போராட்டங்கள் எந்த அசைவையும் உருவாக்க முடியாமலே போய் விட்டது.

லிபியாவின் அதிபர் கடாபியும் போர்க் குற்றவாளி ராஜபக்சேவுக்கும் நெருங்கிய குடும்ப உறவுகள் உண்டு. ஈழத் தமிழர்கள் மீது இனப் படுகொலைகளை ராஜபக்சே கட்டவிழ்த்துக் கொண்டிருந்தபோதே, கடாபியுடன் நெருக்கமாக இருந்தவர் ராஜபக்சே. இப்போது லிபியாவில் மக்கள் நடத்தும் போராட்டத்தை எதிர்த்து கடாபிக்கு ஆதரவாக இலங்கை பேரினவாத ஆட்சி அறிக்கை வெளியிட்டிருக்கிறது. ராஜபக்சே கடாபி குடும்ப உறவுகளுக்கு இணைப்பு சங்கிலியாக இருப்பர் மத்திய கிழக்கு நாடுகளில் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு பெரும்புள்ளி என்று ‘ஏர் லங்கா நியூஸ்’ இணையதளம் கூறுகிறது. மத்திய கிழக்கு நாடுகளுடன் இலங்கை அரசு மேற்கொள்ளும் வர்த்தக உடன்படிக்கைகள் இவர் வழியாகவே நடப்பதாகவும், ராஜபக்சேயின் ஆதரவு கடிதத்தை, கடாபியிடம் கொண்டு போய் சேர்த்தது, இந்த நபர்தான் என்றும், அந்த இணைய தளம் கூறுகிறது. கடாபி நாட்டை விட்டு வெளியேறும்போது அவருக்கு புகலிடம் அளிக்க இலங்கை தயாராக உள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ரூ.3,74,937 கோடி

- 2005-06 ஆம் ஆண்டிலிருந்து அய்க்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சி, பன்னாட்டு தொழில் நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்துள்ள வரி - **3,74,937 கோடி ரூபாய்.**

  (இது, 2ஜி அலைக்கற்றை ஊழல் தொகையைவிட 2 மடங்கு)

- இப்போது நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தாக்கல் செய்துள்ள நிதி நிலை அறிக்கையில் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்துள்ள வரி - **ரூ.88,263 கோடி.**

- இந்தியாவில் சராசரியாக ஒவ்வொரு நாளும் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு தள்ளுபடி செய்யப்படும் தொகை **ரூ.240 கோடி!**

- ஒவ்வொரு நாளும் இதே 240 கோடி ரூபாயும் சட்டவிரோதமாக, வெளிநாட்டு வங்கிகளுக்கு போய்க் கொண்டிருக்கிறது.

  (வாஷிங்டனில் உள்ள பொருளாதார ஆய்வு நிறுவனம் - Global Financial Integrity - இத்தகவலைத் தெரிவித்துள்ளது)

- இப்படி பெரும் தொகையை தொழில் நிறுவனங்களுக்கு ரத்து செய்த பிரணாப் முகர்ஜி, விவசாயத் துறைக்கான ஒதுக்கீட்டில் ரூ.5568 கோடியை வெட்டி விட்டார். பயிர்ப் பாதுகாப்புக்காக, விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தொகையில் மட்டும் குறைக்கப்பட்ட நிதி **ரூ.4,447 கோடி.**

- நிதிநிலை அறிக்கையில் பொருளாதார சேவைத் துறைகளிலேயே மிக அதிகமான பாதிப்பு விவசாயத் துறைக்குத் தான்.

  (தகவல்: டாட்டா சமூக ஆய்வு மய்யம் - Tata Institute of Social Science).

- பெரும் தொழில் நிறுவனங்கள் செலுத்த வேண்டிய தொகையை தள்ளுபடி செய்தது மட்டுமல்ல, இனி எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய சுங்கவரியைக் கட்டத் தேவையில்லை என்று அறிவிக்கப்பட்ட தொகை - **ரூ.48,798 கோடி!**

  (நாடு முழுதும் பொது விநியோகத் துறையான ரேஷன் கடைகளுக்கு ஓராண்டுக்கு செலவிடப்படும் தொகையில் இது பாதி)

- அப்பல்லோ போன்ற 'நட்சத்திர ஓட்டல்' தரத்தில் நடத்தப்படும் தனியார் மருத்துவமனைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து நவீன மருத்துவக் கருவிகளை இறக்குமதி செய்ய, இந்த நிதி நிலை அறிக்கையில் விலக்காக அளிக்கப்பட்டுள்ள சுங்கவரித் தொகை **ரூ.1,74,418 கோடி.**

  (இந்த மருத்துவமனைகளில் 30 சதவீத படுக்கைகளை ஏழைகளுக்கு இலவசமாக வழங்கி, சிகிச்சை அளிப்பதாக இந்த நிறுவனங்கள் பொய் கூறி அரசிடமிருந்து சலுகைகளைப் பெறுகின்றன. உண்மையில் அப்படி எந்த இலவச சிகிச்சையும் இங்கே வழங்கப்படுவது இல்லை.)

- இந்த நிதிநிலை அறிக்கையில் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு சலுகைகளாக அறிவிக்கப்பட்டுள்ள தீர்வை (Excise) வரி - **ரூ.1,98,291 கோடி.**

  **(கடந்த ஆண்டு - ரூ.1,69,121 கோடி)**

- தொழில் வருமான வரி, சுங்க வரி, தீர்வை வரி - ஆக பனியா - பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் செலுத்தத் தேவையில்லை என்று 2005-2006 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தமாக வழங்கப்பட்ட வரிச் சலுகை - **ரூ.21,25,203 கோடி.** (21 இலட்சத்து 25 ஆயிரத்து 203 கோடி)

  (2ஜி அலைக்கற்றை ஊழலைவிட 12 மடங்கு அதிகம்)

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வரிச் சலுகையும் அவர்களால் செலுத்தப்படாத வரித் தொகையும் அதிகரித்துக் கொண்டே போவதால் இதை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளது'' என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால், இந்த ஆண்டில் அதற்கான எந்த மாற்றமும் இல்லை. மேலும் மேலும் கூடுதலாக வரிச் சலுகைகள் வாரி வாரி வழங்கப்பட்டுள்ளன.

இப்படி கோடிகோடியாக தொழில் திமிங்கலங்களின் வயிற்றில் கொட்டும் பார்ப்பன - பனியா ஆட்சி தான். ஏழை மக்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்களை வழங்க நிதி இல்லை என்று கை விரிக்கிறது. உணவுக்காக வழங்கப்படும் நிதி உதவியை குறைக்கிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தனி மனிதர் ஒருவருக்கு சராசரியாகக் கிடைக்கும் உணவு தானியத்தின் அளவு 50 ஆண்டுகளுக்கு முன்பு 1955-59 காலத்தில் கிடைத்ததைவிட பாதியாகக் குறைந்துள்ளதாக அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின் பொருளாதார மதிப்பீட்டு அறிக்கையே கூறுகிறது !

பார்ப்பன - பன்னாட்டு வேட்டைக்காடா, இந்த நாடு ?

**(மார்ச் 7 ஆம் தேதி 'இந்து' ஏட்டில் பி.சாய்நாத் எழுதிய கட்டுரையிலிருந்து)**

# சேலம் மாவட்ட சார்பில் நடைபெற்ற கழக நிகழ்ச்சிகள்

**26.12.2010** அன்று தந்தை பெரியாரின் 37வது நினைவுநாளையொட்டி கொளத்தூர் ஒன்றிய கழக சார்பில் கிராமப்புற பிரச்சார பரப்புரை பயணம் நடைபெற்றது. இப்பிரச்சார பயணம் காலை 10 மணிக்கு கண்ணாமூச்சி கிராமம் பெரியார் நகரில் துவங்கி, கண்ணாமூச்சி புதூர், கண்ணாமூச்சி, உப்புக்கல்லூர், செ.செ.காட்டு வலவு, காவலாண்டியூர், செட்டியூர், நெடுஞ்செழியன் நகர், காந்தி நகர், மூலக்கடை, பூமணூர் ஆகிய ஊர்களில் பொது மக்களுக்கு துண்டறிக்கை வழங்கப் பட்டன. காவை. இளவரசன், டைகர் பாலன் ஆகியோர் உரையாற்றினார். கிளை கழக சார்பாக பயணத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு மதிய உணவு வழங்கப் பட்டது.

**2.1.2011** அன்று தந்தை பெரியாரின் 37வது நினைவுநாளையொட்டி கொளத்தூர் ஒன்றிய கழக சார்பில் இரண்டாம் கட்ட கிராமப்புற பிரச்சார பரப்புரை பயணம் நடைபெற்றது. இப்பிரச்சார பயணம் காலை 10 மணிக்கு அய்யம்புதூரில் துவங்கி தார்க்காடு காலனி, சின்ன தண்டா, பெரியதண்டா, நீதிபுரம், தார்க் காடு, கத்திரிப்பட்டி, கோரைப்பள்ளம், கோவிந்தப்பாடி, சத்யா நகர், காவேரிபுரம், வெடிக்காரனூர், கருங்கல்லூர், பண்ணவாடி, கொளத்தூர் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடந்தது. தோழர்கள் கி. முல்லைவேந்தன், காவை. இளவரசன், டைகர் பாலன் ஆகியோர் உரையாற்றினர். பயணத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு சென்னியப்பன் இல்லத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. இரண்டு நாள் பயணத்திற்கும் ஆட்டோ செல்வம் தனது ஆட்டோவை கொடுத்து உதவினார்.

**17.1.11** - காவலாண்டியூரில் கழக சார்பில் உழவர் திருநாளை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகள் பொது மக்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப் பட்டது. போட்டிகளை காவை சசிகுமார் முன்னின்று நடத்தினார்.

**18.2.11** - கொளத்தூர் இலக்கம்பட்டி கிளைக் கழக சார்பில் புதிய மற்றும் இளந் தோழர்களுக்கு 18.1.11 அன்று மாலை 5.30 மணி முதல் 8.30 மணி வரை பூ. இராசா தலைமையில் இராமசாமி வரவேற்புரையில் பெரியாரியல் பற்றி கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. இவ் வகுப்பில் 35 தோழர்கள் கலந்து கொண்டனர்.

**5.2.11** அன்று மாலை 6.30 மணிக்கு மல்லிகுந்தம் பேருந்து நிறுத்தத்தில் மாவட்ட செயலாளர் அ. சக்திவேல் தலைமையில் தந்தை பெரியார் - டாக்டர் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மேட்டூர் டி.கே.ஆர். இசை நிகழ்ச்சியை தொடர்ந்து காவை இளவரசனின் 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர்கள் கி. முல்லைவேந்தன், நங்கவள்ளி அன்பு ஆகியோர் உரைக்குப்பின், கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். மாரிமுத்து நன்றியுரை கூற இக்கூட்டம் முடிவுற்றது. தோழர்கள் அன்பகன், காமராசு, சிவக்குமார், பாலமுருகன், கார்த்திக், முருகேசன் ஆகியோர் முன்னின்று இக்கூட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

**6.2.11** அன்று காலை 10.30 மணி முதல் மதியம் 2 மணி வரை கழக மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பு சூரியகுமார் இல்லத்தில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாணவர்களிடையே உலகத் தோற்றம், ஆரியர் வருகை, பெரியாரியலின் தேவை ஆகிய தலைப்புகளில் வகுப்பு எடுத்தார். இதில் 21 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**22.2.11** - கொளத்தூர் கொசக்கரட்டில் மாலை 7 மணிக்கு தந்தை பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம், ஒன்றியத் தலைவர் சூரியகுமார் தலைமையில் நடைபெற்றது. டைகர் பாலன் தொடக்க வுரைக்குப் பின் காவை இளவரசன், 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். தொடர்ந்து கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். பன்னீர்செல்வம் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

**25.2.11** கொளத்தூர் மூலக்கடையில் மாலை 7 மணிக்கு தந்தை பெரியார் நினைவு நாள் பொதுக் கூட்டம் க. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. மேட்டூர் டி.கே.ஆர். இசை நிகழ்ச்சிக்குப் பின் காவை இளவரசன், 'மந்திரமல்ல தந்திரமே' நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். தொடர்ந்து கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். பழனிச்சாமி நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

# 'ஆரியச் சுரண்டல்' : கழகத்தின் புதிய வெளியீடு

விஷ்ணு கருடனிடம் சொன்னதாக சித்தரிக்கப்பட்டுள்ள கருட புராணம்; சிவ பெருமான் பெருமை கூறும் 'அருணாசல புராணம்' ஆகியவற்றின் புரட்டுகளை தோலுரித்துக் காட்டியுள்ளார் சிற்பி. ராசன்.

விஷ்ணு, கருடனிடம் கூறுகிறான்: "ஆடைகளை வெளுக்கும் வண்ணான்; தோல் தைப்பவன்; நாட்டியம் ஆடுபவர்; ஓடம் செலுத்துவோர்; கம்மாளர்; நுனைஞரும், வேடவரும் ஆகிய இவர்கள் சூத்திர சாதியைவிட கீழானவர்கள்.''

"எனக்கு பக்தனாகி, தொண்டு புரியும் பிராமணனுக்கு எந்தப் பொருள் கொடுக்கப்படவில்லையோ - அந்தப் பொருள், அதை உடையவனுக்கு சொந்தமல்ல.''

- இப்படி பார்ப்பனரை உயர்த்திக் கூறும் கருட புராணம், இறந்து போனவர்களுக்காக கருமாதி, திதி தருவதையும் தராவிடில் சந்திக்க வேண்டிய ஆபத்துகளையும் கூறி மக்களை மிரட்டுகிறது. இவற்றை ஆதாரங்களுடன் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் சிற்பி ராசன். மறைந்த கழகத் தோழர் கொளத்தூர் இளஞ்செழியன் நினைவாக நூல் வெளியிடப் பட்டுள்ளது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# நான் கடவுளை நம்பாதவன்

இந்தியாவின் புகழ் பெற்ற எழுத்தாளரும், பத்திரிகையாளருமான 'குஷ்வந்த் சிங்'குக்கு இப்பொழுது 90 வயதாகிறது. அண்மையில் குஷ்வந்த் சிங் 'தெஹல்கா' இணைய தளத்துக்குப் பேட்டி அளித்தார். அதிலிருந்து சில பகுதிகள்:

**நிருபர் கேள்வி :** உங்களிடமிருந்து வாழ்க்கை விடைபெறுகிறதா ?

**குஷ்வந்த் சிங் பதில் :** இரண்டு வருடங்களுக்கு முன்னால் என் முகம் தரையில்பட நான் கீழே விழுந்தபோது முடிவு நெருங்கி வருவதைக் கண்டு கொண்டேன். அரை மணி நேரம் எழுந்திருக்க முடியாமல் அப்படியே படுத்துக் கிடந்தேன். அப்பொழுது பிரார்த்தனை செய்யலாமா என்றுகூடத் தோன்றியது. அப்படிச் செய்தால் அது பொய்யாகிவிடும். "நான் கடவுளை நம்பாதவன்'' என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

**நிருபர்:** மரணத்துடன் இப்பொழுது உரையாடுகையில் மறு ஜென்மத்தில் நம்பிக்கை வருகிறதா ?


**குஷ்வந்த் சிங்:** அது அபத்தம். "கடவுளே இல்லை'' என்னும்போது மறுஜென்மமாவது !

**ஆதாரம் : "குமுதம்" வார இதழ் 2.3.2011**
**தகவல் : புலவர் சங்க. சங்கரபாண்டியன்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 11th March 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்ச் 17, 2011 | புரட்சி 10 | முழக்கம் 9 | விலை: ரூ.2.50

### மயிலாடுதுறை கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# 'திராவிடர்' என்பதன் உள்ளடக்கத்தைப் பாருங்கள்! அகராதியில் பொருள் தேடாதீர்!

*'திராவிடர்' என்ற சொல்லுக்கு, ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருப்போருக்கு பதிலளித்து மயிலாடு துறை கழகக் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார்.*

11.3.2011 வெள்ளிக்கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு மயிலாடுதுறை சின்னகடைவீதியில் கழகம் சார்பாக தமிழர்களை சுரண்டும் பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கொள்ளை விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் இர.ரசீத்கான் தலைமையில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டம், சமர் பா. குமரனின் இன எழுச்சிப் பாடல்களோடு துவங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தமிழர் உரிமை மீட்பு இயக்கம் இரா. முரளிதரன், சுப்பு மகேசு, ம.தி.மு.க. நகரச் செயலாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் உரையாற்றினர்.



பெரியாரின் கொள்கைகளை, அந்தந்த கால கட்டத்தின் தேவையை கருதி நாம் பல்வேறு போராட்டங்களை, பரப்புரைகளை நடத்தி வருகிறோம். பெரியார் தொடக்கக் காலத்தில் சாதி ஒழிப்பை முதன்மை இலக்காகக் கொண்டிருந்தார். 1926 முதல் பெண் விடுதலையைப் பற்றிப் பேசத் தொடங்குகிறார். 1928 இல் இருந்து பொது வுடைமை கொள்கைகளையும் இணைத்துக் கொள்கிறார். இதன் வளர்ச்சிப் போக்கில் 1938 ஆம் ஆண்டில் 'தனித்தமிழ்நாடு' என்ற முடிவுக்கு வருகிறார். (சாதி பேதமற்ற, பாலியல் பேதமற்ற, பொருளாதார பேதமற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்றால் அதற்கு தனித் தமிழ்நாடு தான் தீர்வு என முடிவு செய்கிறார்) இப்படிப்பட்ட கருத்துகளைக் கொண்ட பெரியாரியலை மக்கள் முன்னாள் எடுத்துச் செல்கின்ற நாங்கள், அதனுடைய ஒரு பகுதியாகத்தான், தமிழர்களை சுரண்டும் பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கொள்ளை விளக்கப் பரப்புரையை செய்து வருகிறோம் என்று உரையைத் தொடங்கிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இடஒதுக்கீடு சிக்கல்கள் பற்றியும், இன்று தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள் பல இருந்தாலும், அவைகளெல்லாம் நடைமுறைபடுத்தாமல் இருப்பது பற்றியும், ஏன் பழங்குடி மக்கள் எல்லாம் தாக்கப்படுகிறார்கள் என்றால், அவரவர்கள் தங்களுக்கு தேவையான வற்றை தாங்களே உற்பத்தி செய்து கொள்வதை தடுக்க வேண்டும். எல்லோரும் வணிக நிறுவனத்தை நம்பித்தான் இருக்க வேண்டும் என்றச் சூழலை உருவாக்குவதற்காக பழங்குடி மக்கள் எல்லாம் தாக்கப்படுகிறார்கள். இடப்பெயர்வுக்கு ஆளாக்கப் படுகிறார்கள் என்றும் பச்சைவேட்டை பற்றியும் விரிவாக பேசினார்.

தொடர்ந்து பேசிய அவர்... "பரப்புரைக் கூட்டங்களில் இந்துமத எதிர்ப்பு, மூடநம்பிக்கை ஒழிப்புப் பிரச்சாரம் மட்டுமே இல்லாமல், பொருளியல் சிக்கல்களை பற்றியும் மக்களிடையே விளக்க வேண்டியதும், அதற்கான விழிப்புணர்வை மக்கள் பெற்றிட, இந்திய தேசிய - பன்னாட்டு திட்டங்களுக்கு எதிராக மெல்ல மெல்லவாகிலும், கிளர்ந்து எழ வேண்டும் என்பதை நோக்கமாகவும் கொண்டுதான் இந்த பரப்புரையை நடத்தி வருகிறோம். பெரியார் இறுதியாக நடத்திய மாநாடு தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாடு... அதோடு இழிவு ஒழிப்புக்காக எடுத்துக் கொண்ட திட்டம்தான் தனித் தமிழ்நாடு பரந்த சந்தை வேண்டும் என்று விரும்புகிற பனியாக்களுக்கு - வியாபார கூட்டத்திற்கு - சொந்த நாடே இல்லாத பார்ப்பனர்களுக்கு - வசதியாகவும் இந்திய தேசியத்தை உருவாக்கிக் கொண்டார்கள்.

ஆனால், நாம் இழிவில் இருந்து விடுபடுவதற் கும், சுரண்டலில் இருந்து விடுபடுவதற்கும் இந்திய தேசியம் தடையாக இருக்கிறது. பார்ப்பன - இந்திய தேசியத்திற்கு எதிராகத்தான் திராவிடர்கள் என்ற அணியை பெரியார் உருவாக்கினார். "திராவிட நாடு வடநாட்டிலிருந்து பிரிந்து, தனியாக இருக்க விரும்பும் காரணம் கூட, இந்து மதத்தால் ஏற்பட்ட இழிவும், ஆரிய ஆதிக்கத்தில் இருக்கும் இழிவும், சுரண்டலும் ஒழிய வேண்டும் என்பதற்கும் ஆகும்" என்ற பெரியாரின் பேச்சு 1945 ஆம் ஆண்டு குடிஅரசில் இருக்கிறது. ஆரியர் திராவிடர் எல்லாம் கலந்து விட்டார்களே எப்படி பிரிப்பீர்கள் என்று அப்போது கேட்டார்கள். பெரியார் சொன்னார்... "அது எனக்கும் தெரியும். நான் இரத்த பரி சோதனை செய்து ஆரியர் - திராவிடர் என பிரிக்க வில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்கள், ஆச்சார அனுஸ்டானங்களைப் பார்த்துதான் பிரிக்கிறேன்" என்று கூறினார். சுத்தமான தமிழ் இரத்தம் ஏதாவது கலந்துவிட்டதா என்று இப் போது பல அறிஞர்கள்(?) பிரித்துக் கொண்டிருக் கிறார்கள். பெங்களூரில் கூட ஒரு அறிஞர் இருக்கிறார். இவர் தெலுங்கர், கன்னடர் என்று ஆய்வு அறிக்கை எல்லாம் போடுவார். ஆனால் பெரியார், இனத்தூய்மை பார்த்து யாரையும் பிரிக்கவில்லை. இழிவில் இருந்து விடுபடுவதற்கு, அதற்கு தடையாக இருக்கிற ஒரே மக்கள் கூட்டத்தைத்தான் பிரித்து வைத்தார். இன்னொரு பக்கம் இதற்கு எதிராக பேசியவர்கள் இருந்தார்கள். தமிழ்நாட்டில்கூட ம.பொ.சி. இருந்தார்.

ம.பொ.சி. ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார்...

"பிராமணர் அல்லாதார் இயக்கத்திற்கு காரணமா னோர் யாரோ, அவர்கள்தான் தமிழ்நாட்டில் தமிழரல்லாதார் ஆதிக்கம் செலுத்த நேர்ந்ததற்கும் காரணம் ஆவார்கள். திராவிட மாயையில் இருந்து விடுபட்டதாக கூறிக்கொண்டு (?) மலையாளிகள் ஆதிக்கத்தை எதிர்த்து புறப்பட்ட பெரியார் ஈ.வெ.ரா. முதலில் பிராமணர் – பிராமணரல்லாதார் கூச்சலுக்கு முற்றுப்புள்ளி வைக்கட்டும். அப்போது தான் தமிழர் அல்லாதாரின் ஆதிக்கத்தை எதிர்த்து தமிழர் வாழ்வு பெற முடியும்" என்று ம.பொ.சி. எழுதினார்.

ஆனால், பெரியார் இதில் மாறுபட்டார். யாரை இணைத்துக் கொண்டார், யாரை விலக்கி வைத்தார் என்பதுதான். பெரியாருக்கும் மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாடு திராவிடர் என்பதன் உள்ளடக்கம் என்னவாக இருக்கிறது என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, அகராதியில் பொருள் தேடக் கூடாது. அகராதியில் பார்க்கும் போது பலவற்றை தவறாக புரிந்து கொள்ள நேரிடும். எனது சிறுவயதில் நாங்கள் ஒரு நாடகம் நடத்தினோம். ஒருவர் ஆங்கிலத்தில் சொல்வார். அதை நான் தமிழில் மொழி பெயர்ப்பேன்... "லேடீஸ் அண்ட் ஜென்டில்மேன் என்பார். அதற்கு நான் "பெண்களே சாதுவான ஆண்களே" என்று மொழி பெயர்ப் பேன். "ஐ ஏம் கம்மிங் ப்ரம் கிரீன்லேண்ட்" என்பார். "நான் பச்சை நிலத்திலிருந்து வருகிறேன்" என்று மொழி பெயர்ப்பேன். "டூ யூ அண்டர்ஸ்டேண்ட்"

4 ஆவது பக்கம்

தலையங்கம்

## சனநாயகமும் சாதி நாயகமும்

சாதி அமைப்பு பார்ப்பனியத்தின் வெளிப்பாடு. சாதி அமைப்பு வலிமை பெறுகிறது என்றால் பார்ப்பனியத்தின் வலிமை உறுதியாகிறது என்பதே ஆகும். சாதியின் கட்டமைப்பு உடைய வேண்டுமானால், சாதியின் பெயரால் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுத்து, மக்களை சமத்துவமாக்கும் முயற்சிகள் தீவிரமாக்கப்பட வேண்டும். இதன் காரணமாகத் தான் சாதியின் பெயரால் உரிமை மறுக்கப்பட்ட அனைத்துப் பிரிவினருக்கும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்று பெரியார் காங்கிரசில் இருந்த காலத்திலிருந்தே போராடினார்.

உரிமைகள் மறுக்கப்பட்ட ஒவ்வொரு சாதிக் குழுவும் தங்கள் மீது சுமத்தப்பட்ட இழிவுகள், ஏற்றத் தாழ்வுகள் மற்றும் குலத் தொழில்களிலிருந்து விடுவித்துக் கொள்ளவும், சாதியற்ற மனிதர்களாக முன்னேறிச் செல்லவும், ஒன்று திரண்டு போராடுவதில் நியாயம் உண்டு. ஆனால், இப்போது தேர்தல் களத்தில் என்ன நடக்கிறது? ஜனநாயகம் என்பது சாதி நாயகமாக மாறிவிட்டது. சாதி அடிப்படையில் அரசியலில் மக்கள் அணி திரட்டப்படுகிறார்கள். ஒவ்வொரு சாதிக் குழுவும் அரசியல் பெயரை சூட்டிக் கொண்டு, ஓட்டு வேட்டைக்காக பயன் படுத்தப்படுகின்றன. நேரடியாக சாதி பெயரிலேயே உள்ள அரசியல் கட்சிகளும் வந்துவிட்டன. இந்த அரசியல் அணி திரட்டல் எதற்குப் பயன்படுகிறது? அந்தந்த சாதிக் குழுவில் ஒரு சில தலைவர்கள் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு மட்டுமே பயன் படுகிறது. இந்த சாதிக் கட்சிகளின் தலைவர்கள் அதிகாரத்துக்கு வந்த பிறகு தங்களையும், தங்கள் ஆதரவாளர்கள் சிலரையும், தங்கள் குடும்பத்தையும் வளர்த்துக் கொள்வதில் துடிப்புக் காட்டு கிறார்களே தவிர, தங்கள் சமூகத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்காக அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

ஓட்டு வங்கிகளுக்கு மட்டுமே இந்த சாதிக் குழுவினர் பயன்படுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பிரிவில் பெரும்பான்மை மக்கள் சமூக, பொருளாதார நிலையில் பின் தங்கியே வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டுகளைக் கைப்பற்றுவதற்கு சொந்த சாதி மக்களை திரட்டும் இவர்கள், அவர்களை மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கும் சமூக–அரசியல்–பொருளாதார அமைப்புகளை மாற்றியமைத்திட வேண்டும் என்று போராடுகிறார்களா? உள்ளத்தைத் தொட்டு பதில் சொல்லட்டும்!

இந்தியாவில் அதிகார வட்டத்துக்குள் போட்டி போட்டுக் கொண்டு நிற்கும் அரசியல் கட்சிகள், அது மாநிலக் கட்சிகளானாலும் சரி; தேசியக் கட்சிகளானாலும் சரி; பார்ப்பன பன்னாட்டு நிறுவனங்களின் பிடிகளில்தான் உள்ளன. கடந்த 20 ஆண்டு காலமாக சமூக பொருளாதார அரசியலை கவனித்தாலே இந்த உண்மை புரியும். இந்து மதத்துக்கு தலைமையை ஆக்கிரமித்துக் கொண்டு விட்ட பார்ப்பனர்கள், தங்கள் மேலாதிக்கத்துக்கு வெகு மக்களை அடிமைப் படுத்தி, தங்களின் மத அதிகாரத்தின் பிடிக்குள் அவர்களைக் கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார்கள்.

சாதி, அரசியல் அணிகளுக்கு தலைமையேற்றவர்களும், தங்கள் வளர்ச்சியை மட்டுமே முன்னிறுத்திக் கொண்டு தங்களது சமூக மக்களின் விளிம்பு நிலை வாழ்வு பற்றிக் கவலைப்படாமல், வாக்கு வங்கியாக மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

இரண்டிலுமே மேலோங்கி நிற்பது சுய நலமும், சுரண்டலும் தானே! இது பார்ப்பனியத்தின் மற்றொரு வடிவம் தானே!



## அரசு சுகாதார நிலையத்தில் கிடா வெட்டி பரிகாரமா?

**அரசு சுகாதார நிலையத்திலே இந்த மூடச் சடங்கு நடந்ததற்கு கொளத்தூர் பெரியார் திராவிடர் கழகம் எதிர்ப்பு தெரிவித்து, மாவட்ட சுகாதாரத் துறைக்கு கடிதம் எழுதியுள்ளது. அரசு அலுவலகங்களில் கடவுள் – மதம் தொடர்பான படங்களை மாட்டக் கூடாது என்று பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை இணைத்து மாவட்ட சுகாதாரத் துறை துணை இயக்குனருக்கு கொளத்தூர் ஒன்றிய கழக செயலாளர் ஈசுவரன் 10.2.2011 அன்று கடிதம் எழுதியுள்ளார்.**

சேலம் மாவட்டம், கொளத்தூர் சத்யா நகரில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. சுகாதார நிலையத்தில் மாதந்தோறும் சராசரியாக 25 பிரசவம் நடந்தது. சேலம் மாவட்டத்தில் சிறந்த ஆரம்ப சுகாதார நிலையமாக சத்யா நகர் சுகாதார நிலையம் திகழ்ந்தது. ஒகேனக்கல், ஊட்டமலை பகுதியை சேர்ந்த பிரபு மனைவி பிரியா (20), கர்ப்பிணியான அவர், பிரசவத்துக்காக சத்யாநகர் அடுத்த கோட்டை யூரில் உள்ள தாய் வீட்டில் தங்கினார். கடந்த நவம்பர் 30 ஆம் தேதி சத்யா நகர் ஆரம்ப சுகாதார நிலையத் தில் பிரசவத்துக்கு அனுமதிக்கப்பட்ட பிரியா, டிசம்பர் 1 ஆம் தேதி அதிகாலை பிரசவம் முடிந்த வுடன் இறந்து போனார்.

அவரது உடலை உறவினர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டனர். அதன் பின்னர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆவி உலா வரக்கூடும் என கருதி, சுற்றுப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான கர்ப்பிணி பெண்கள் பிரசவத்துக்காக கொளத்தூர், மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு செல்ல துவங்கினர்.

எனவே, சத்யாநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முந்தைய மாதங்களைவிட பிரசவ விகிதம் குறைய துவங்கியது. இரவு நேரத்தில் பிரசவ வார்டு, சுகாதார நிலைய வளாகம் ஆகிய இடங்களில் ஆவி நடமாட்டம் இருப்பதாக, ஊழியர்களும் பயந்தனர். இரவு பணி நர்ஸ்களும் பீதியோடு பணி புரிந்தனர்.

பிரசவ விகிதம் சரிவுக்கு திருஷ்டியே காரணம் என ஊழியர்கள் நம்பினர். சுகாதார வளாகத்தில் ஆவிகள் நுழைய விடாமல் தடுக்கவும், திருஷ்டியை போக்கவும் சுகாதார வளாகத்தில் ஓமகுண்டம் வளர்த்து சிறப்பு யாகம் நடத்தப்பட்டது. திருஷ்டி போக்கவும், துஷ்ட சக்திகளை விரட்டி யடிக்கவும் பிரசவ வார்டு, சுகாதார நிலைய வளாகத் தில் புனித நீர் தெளிக்கப்பட்டது. பின், சுகாதார நிலைய வாயிலில் ஆட்டுகிடா வெட்டி பரிகார பூஜை நடந்தது. கிடாவின் ரத்தம் மருத்துவமனை நான்கு மூலைகளிலும் தெளிக்கப்பட்டது. யாகம் மற்றும் பரிகார பூஜைகளில் மருத்துவமனை ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கருணைக் கொலையும் தூக்கு தண்டனையும்

மும்பை தனியார் மருத்துவமனையில் செவிலியராகப் பணியாற்றிய அருணா சென்பக் 37 ஆண்டுகளுக்கு முன்பு மருத்துவமனை ஊழியர் ஒருவரால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, நாய்ச் சங்கிலியால் கொடூரமாக தாக்கப்பட்டதிலிருந்து கோமா நிலைக்கு தள்ளப்பட்டு செயலிழந்து விட்டார். உயிருக்கு போராடும் அவரை, மருத்துவமனை ஊழியர்கள் ஒவ்வொரு நாளும் காப்பாற்றி அதைக் கடமையாக ஏற்று செயல்படுத்தி வருகின்றனர். அவரைக் கருணைக் கொலை செய்து விடலாம் என்று பெண் வழக்கறிஞர் ஒருவர் கோரிய மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்தியாவில் ‘கருணைக் கொலை’ செய்வதற்கான சட்டம் இல்லை. நெதர்லாந்து, பெல்ஜியம், சுவிட்சர்லாந்து, லக்சம்பர்க் மற்றும் அமெரிக்காவில், ஓரிகான் வாஷிங்டன் மாநிலங்களில் கருணைக் கொலை சட்டரீதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் கருணைக் கொலை அனுமதிக்கும் சட்டம் இந்தியாவில் இல்லாத நிலையில் அவர் உயிர் பிழைத்திருக்க அளிக்கப்படும் மருத்துவ முறைகளை நிறுத்தி அமைதி வழி மரணத்துக்கு அனுமதிக்கலாம் (A passive euthanasia) என்று நீதிபதிகள் கருத்து தெரிவித்துள்ளனர். இதைக்கூட அந்தப் பெண்ணைப் பாதுகாத்து வரும் மருத்தவர்கள் சார்பில் முன்மொழியப்பட்டால், நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் நிறைவேற்றலாம் என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். அருணாவை 37 ஆண்டுகளாக ஒவ்வொரு நாளும் பாதுகாத்து வரும் அந்த மருத்துவமனை பெண் தாதியர்கள் அருணாவைத் தொடர்ந்து காப்பாற்றுவோம்; மரணிக்க அனுமதியோம் என்று மறுத்து விட்டதோடு உச்சநீதிமன்றம் தங்கள் உன்னதமான சேவைக்கு வழங்கியுள்ள பாராட்டை மகளிர் நாள் வெற்றிச் செய்தியாக அறிவித்து இனிப்பு வழங்கிக் கொண்டாடியுள்ளனர்.

ஒவ்வொரு நாளும் மரணத்தோடு போராடுகிற ஒருவரை அந்தத் துயரத்திலிருந்து மீட்க மரணமடையச் செய்து விடுவதே நல்லது என்ற கருத்து மனித உரிமை கண்ணோட்டத்தில் முன் வைக்கப்படுகிறது. ‘பிறப்பும் இறப்பும் ஆண்டவனிடம் தான் இருக்கிறது’ என்ற மதக் கோடுபாடுகளுக்கு இது எதிரானது. கணவன் இறந்தவுடன் மனைவியும் சாக வேண்டும் என்று ‘இந்து’ மதம் கூறியதாகக் கூறி, பல பெண்கள் கணவர்களோடு உடன்கட்டை ஏற்றப்பட்டார்கள். அவை கருணையற்ற கொடூர கொலைகள். இப்போதும் பட்டினி கிடந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் ‘தற்கொலை’ முறை சமண மதத்தின் பெயரில் நடக்கிறது. இப்படி கடவுள் மதங்களின் பெயரால் மனிதர்களின் உயிர் வாழும் உரிமைகளைப் பறிப்பதை நாகரிக சமூகம் ஏற்காது.

இந்தியாவில் தற்கொலைக்கு முயல்வதே குற்றம். எனவேதான் தற்கொலைக்கு முயன்று உயிர் பிழைத்தவர்கள் மீது தற்கொலக்கு முயன்றதாக வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. அருணா வழக்கில் தீர்ப்பளித்துள்ள உச்சநீதிமன்றம் தற்கொலைக்கு முயலுவதை குற்றமாகக் கருதும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 309வது பிரிவை திருத்துவதற்கான காலம் வந்து விட்டது என்று கூறியிருக்கிறது. விரக்தியில் தற்கொலைக்கு தள்ளப்படும் ஒருவருக்கு தேவை ஆதரவே தவிர, தண்டனையல்ல என்று உச்சநீதிமன்ற நீதிபதிக மார்க்கண்டேய கட்ஜீ மற்றம் கியான் சுதாமிஸ்ரா ஆகியோர் இத் தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். இதே கண்ணோட்டத்தில் தூக்குத் தண்டனையையும் மறு பரிசீலனை செய்யப்பட வேண்டும். கருணைக் கொலையிலும் தற்கொலை முயற்சியிலும் செலுத்தப்படும் புதிய கண்ணோட்டத்தை, ஏன் தூக்குத் தண்டனையை ஒழிப்பதிலும், நீதிமன்றங்களும் அரசுகளும் செலுத்தக் கூடாது?

உலகம் முழுதும் தூக்குத் தண்டனைக்கு நாடுகள் விடை கொடுத்து வரும் சூழலில், இந்தியாவில் மட்டும், சர்வதேசக் குரலுக்கு எதிரான தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்தில் வைத்துக் கொண்டிருக்கலாமா?

## பாடியில் பரபரப்பான வழக்காடு மன்றம்

வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் சிந்தனை சிற்பி ம.பெ. சிங்காரவேலர் 151 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு சென்னையிலுள்ள பாடி யாதவர் தெருவில் 19.2.2011 சனிக்கிழமை மாலை வழக்காடு மன்றம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மு.கனகராஜன் தலைமை வகித்தார். கழகத் தோழர்கள் சு. ஜெயசங்கர், பா.கர்ணன், திருமலை ஆகியோர் முன்னிலை வகிக்க மூடநம்பிக்கைகளுக்கு அறிவியல் முலாம் பூசுபவர்கள் குற்றவாளிகள் என்று கழக பேச்சாளர் திண்டுக்கல் துரை. சம்பத் வழக்கு தொடுத்தார். தனது வழக்குரையில் சேது சமுத்திர திட்டம் மூடநம்பிக்கைகளால் தடைப்பட்டு கிடப்பதையும் மனிதன் அன்றாட வாழ்வில் கடைபிடிக்கும் மூடநம்பிக்கைகளைப் பட்டியலிட்டு அதனை எப்படி அறிவியல் ஆக்குகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுப் பேசினார். வழக்கினை மறுத்த கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், மூடநம்பிக்கைகளை அறிவியல் ஆக்குவதின் பின்னணியில் இருக்கும் சக்திகள் யார் யார் என்று விளக்கி, அவர்களும் குற்றவாளிகளே என்று வழக்கினை மறுத்தார்.

இறுதியாக தீர்ப்பளித்த கழக துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், புராண கதாபாத்திரங்களின் ஆபாசம், அதை இன்றைக்கு அரசியல் என்று எவ்வாறு ஏமாற்றுகிறார்கள் என்பதை விளக்கி மூடநம்பிக்கைகளுக்கு அறிவியல் முலாம் பூசுபவர்கள் குற்றவாளிகள் என்பதோடு, அதை ஊக்குவிப்பவர்களும் குற்றவாளிகளே என்று தீர்ப்பளித்தார். இரா. பரத் நன்றியுரையாற்றினார். பெருமளவில் பொதுமக்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தின் தொடக்கத்தில் தோழர்கள் சி. அருள்தாஸ், நாத்திகன், டேவிட் பெரியார் ஆகியோர், கே. திலீபன் இசைக்கேற்ப பகுத்தறிவு இன எழுச்சிப் பாடல்களை பாடினர். நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு அருகில் வி. ஜனார்த்தனன், அறிவியல் விளக்கக் கண்காட்சியினை ஏற்பாடு செய்திருந்தார்.

# பா.ஜ.க.வின் பொய்ப் பிரச்சாரம்

# இந்துக்களுக்கு இலவச உதவிகள் இல்லையா?

முஸ்லீம்கள், கிருத்தவர்கள், சீக்கியர் உள்பட சிறுபான்மையினருக்கு மத்திய அரசு கல்வி உதவி வழங்கி வருகின்றது. இந்துக்களுக்கு கல்வி உதவி வழங்கப்படாமல் சிறுபான்மையினருக்கு கல்வி உதவி வழங்கப்படுவதாக பொய் பிரச்சாரம் செய்து வருகின்றது பா.ஜ.க.

இந்தியாவில் உள்ள அனைத்து சமுதாய மக்களை விடவும் முஸ்லீம்கள் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின் தங்கி உள்ளார்கள் என்ற உண்மையை வெளியிட்ட நீதிபதி சச்சார் அறிக்கையின் அடிப்படையிலேயே மத்திய அரசு ஒரு சிறு தொகையை (தமிழகத்துக்கு ரூ.35 கோடி) குறிப்பிட்ட எண்ணிக்கையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து கல்வி உதவியாக வழங்குகின்றது. 2010 ஆம் ஆண்டு தமிழகத்தில் முஸ்லீம்களில் தொழில் கல்வி படிப்பிற்கு 1383 பேர். பிற பட்ட படிப்புகள் - 3202 பேர். பள்ளி படிப்பிற்கு - 36600 பேர்களுக்கு மட்டுமே அரசு வழங்குகின்றது. விண்ணப்பிக்கும். அனைவருக்கும் இந்த தொகையை அரசு வழங்குவதில்லை.

இந்தக் கல்வி உதவித் தொகையை பெறுவோர் வேறு எந்த மத்திய, மாநில அரசின் உதவி தொகையை பெற முடியாது. இந்த கல்வி உதவி தொகை எல்லா சிறுபான்மையினருக்கும் கொடுக்கப்படுவது கிடையாது. பொருளாதாரத்தில் பின் தங்கிய சிறுபான்மையினருக்கே வழங்கப்படுகின்றது. விண்ணப்பித்த எவ்வளவோ முஸ்லிம் மாணவர்களுக்கு கிடைக்கவில்லை. இதிலும் அரசு அதிகாரிகளின் முஸ்லீம் விரோத போக்கினாலும், ஊழலினாலும் அரசு தரும் பணமும் முழுமையாக முஸ்லீம்களுக்கு போய் சேர்வதில்லை.

அதே நேரத்தில் இந்துக்களுக்கும் மத்திய அரசு கல்வி உதவி தொகை வழங்கப்பட்டே வருகின்றன.

1. பொருளாதாரத்தில் பின் தங்கிய இந்துக்கள் உட்பட அனைவருக்கும் கல்வி உதவி தொகையாக மத்திய அரசு மாதம் ரூ.1000 வழங்குகின்றது. சிறுபான்மை கல்வி உதவித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் சிறுபான்மையின மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தில் உதவி கிடைக்காது. எனவே, இது இந்துக்களுக்கே உள்ளது. இந்த கல்வி உதவித் திட்டத்தின் முழு விவரமும் மத்திய அரசின் உயர் கல்வித் துறை இணைய தளத்தில் www.education.nic.in உள்ளது.
2. இந்தியை விருப்ப மொழியாக தேர்ந்தெடுக்கும் மாணவர்களுக்காக கல்வி உதவித் தொகை திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்துகின்றது. இதன் மூலம் வருடத்திற்கு ரூ.3500 முதல் ரூ.12000 வரை மத்திய அரசு வழங்குகின்றது. சிறுபான்மை கல்வி உதவித் திட்டத்தின் கீழ் பயன் பெறும் சிறுபான்மையின மாணவர்களுக்கு இந்தத் திட்டத்தில் உதவி கிடைக்காது. எனவே இது இந்துக்களுக்கே உள்ளது. இந்த கல்வி உதவித் திட்டத்தின் முழு விவரமும் www.education.nic.in இணையதளத்தில் உள்ளது.
3. இது தவிர எஸ்.சி./எஸ்.டி. சமுதாயத்தினருக்காக சிறப்பான கல்வி உதவித் திட்டத்தை மத்திய அரசு நடைமுறைபடுத்தி வருகின்றது. இதை இந்துக்களை தவிர றேு யாரும் வாங்க இயலாது. இந்தக் கல்வி உதவித் திட்டத்தின் முழு விவரமும் www.education.nic.in இணையதளத்தில் உள்ளது.

இது தவிர இந்துக்களுக்கு மாநில அரசு வழங்கும் உதவித் தொகை:

1. தலித் சமுதாயத்தினரின் கல்விக்காக மட்டும் இந்த வருட 2011 தமிழக நிதிநிலை அறிக்கையில் ரூ.360 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதை இந்துக்களை தவிர வேறு யாரும் வாங்க இயலாது.
2. மேலும் பிற்படுத்தப்பட்ட நலத்துறை சார்பாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு வருடா வருடம் தமிழக அரசு உதவித் தொகை வழங்கி வருகின்றது.

எனவே, இந்துக்களுக்கு கல்வி உதவி வழங்காமல், சிறுபான்மையினருக்கு மட்டும் அரசு கல்வி உதவித் தொகை வழங்குகின்றது என்று கூறி, பா.ஜ.க. நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் உண்மையில்லை!

**– 'உணர்வு'**

# பிரசாதம் தயாரிப்பு உரிமை: பார்ப்பனர்களுக்கு மட்டும் தானாம்!

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று தி.மு.க. ஆட்சி பதவி ஏற்றவுடன் இரண்டாவது முறையாக பிறப்பித்த உத்தரவை, பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் முடக்கிவிட்டனர். அதை நீக்குவதற்கு தி.மு.க. ஆட்சி எந்த முயற்சியும் எடுக்காமல், அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பயிற்சி தரும் பள்ளிகளைத் தொடங்கியது. தி.க. தலைவர் கி.வீரமணி, கலைஞரின் இந்த நடவடிக்கை 'ராஜதந்திரம்' நிறைந்தது என்று வழக்கம் போல புகழ்ந்து அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். பயிற்சி முடித்த தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சுமார் 300 இளைஞர்களும் எந்தக் கோயிலிலும் அர்ச்சகராகப் பணி புரிய முடியாமல் வேறு வேலைகளுக்கு சென்று விட்டனர்.

இந்நிலையில் திருவண்ணாமலையிலுள்ள அருணாசல ஈசுவரன் கோயிலில் பிரசாதம் தயாரித்தல்; அபிஷேகம் செய்தல் போன்ற பணிகளுக்கு விண்ணப்பம் கோரி, இந்து அறநிலையத் துறை பத்திரிகைகளில் விளம்பரம் செய்தது. பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்ற அரசு விளம்பரம் கூறியது. ஆனாலும் அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற பார்ப்பனரல்லாத இளைஞரான அரங்கநாதன் மனு செய்தார். அறநிலையத் துறை அவரது மனுவை ஏற்க மறுத்துவிட்டது. அரங்கநாதன் உயர்நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்கு தொடர்ந்தார். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற அரசாணையையும் அரசு தொடங்கிய அர்ச்சகர் பயிற்சி வகுப்பை முடித்த கல்வித் தகுதியையும் சுட்டிக் காட்டியிருந்தார். பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்ற இந்து அறநிலையத் துறை ஆணையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்தார். வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி ஜோதிமணி, பார்ப்பனர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் என்று அரசு விதித்துள்ள நிபந்தனையை ரத்து செய்ய முடியாது என்று கூறி, மனுவை தள்ளுபடி செய்துள்ளார். தமிழக அரசு வழக்கறிஞரும் பார்ப்பனர் மட்டுமே அபிஷேகம் செய்தல் மற்றும் பிரசாதத் தயாரிப்பில் ஈடுபட முடியும் என்று வாதிட்டுள்ளார்.

நவீன விஞ்ஞானக் கருவிகள், படம் பிடிக்கும் காமிராக்கள், குளிர் சாதனக் கருவிகள், இணையத் தளத் தொடர்புகள் எல்லாம் கோயில் நிர்வாகத்தில் பயன்பாட்டுக்கு வந்துவிட்டன. ஆனால், 'சாமி'யிடம் நெருங்குவதற்கு மட்டும் பார்ப்பனரர்களுக்கு மட்டுமே உள்ள பிறவி உரிமைகளை அசைக்க முடியவில்லை. பார்ப்பனரல்லாதவர்கள் கர்ப்பக்கிரகத்துக்குள் நுழையக் கூடாத 'தீண்டப்படாதவர்களாக' அரசு ஆணைகளும் நீதிமன்றத் தீர்ப்புகளும் கூறும் அவலங்கள் தொடருகின்றன.

ஆனால், தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் புரட்சியை முதல்வர் கலைஞர் கருணாநிதி நிறைவேற்றி முடித்துவிட்டதாக பெரியார் நினைவிடத்தில் தி.க. தலைவர் கி.வீரமணி, கல்வெட்டு வைத்துவிட்டார். இந்த வரலாற்று மோசடியாளர்களை வரலாறு மன்னிக்காது!

**வரப்பெற்றோம்**

## "தாசிகள் மோச வலை அல்லது மதி பெற்ற மைனர்"

1936 ஆம் ஆண்டில் திராவிடர் இயக்க முன்னோடிகளில் ஒருவரான மூவலூர் இராமமிர்தத்தம்மாள் எழுதிய நாவல் "தாசிகள் மோசவலை அல்லது மதிபெற்ற மைனர்". இந்நாவலுக்கு தன்னுரை எழுதிய இராமமிர்தத்தம்மாள் இவ்வாறு கூறுகிறார்:

"இந்நாவல் புழுங்கிய மனதில் தோன்றிய எனது உணர்ச்சியின் பயனாக எழுந்ததொன்றாகும். அவர்களால் கூடா ஒழுக்கத்தில் ஈடுபட்டுத் தங்கள் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வதோடு, மனைவி மக்களையும் திண்டாடச் செய்யும் வாலிபர்களின் வாழ்க்கை சிறந்து விளங்க வேண்டும்" என்பதே, இந்நாவலின் குறிக்கோள். 'தமிழ்க் குடி அரசு' பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

பக்: 320; விலை: ரூ.150

வெளியீடு: தமிழ்க் குடி அரசு பதிப்பகம், 14/12, மியான் முதல் தெரு, சேப்பாக்கம், சென்னை-600 005.

# லண்டனில் மாட்டுக்கறி சாப்பிட்ட வ.வே.சு. அய்யர்

7.3.2011 திங்கட்கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு சேலம் மாவட்டம் ஓமலூர் பேருந்து நிலையம் அருகே தொல்குடி மக்களின் பாரம்பரிய பண்பாட்டு மாட்டுக்கறி உணவு திருவிழா விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க மாவட்டச் செயலாளர் இளமாறன் தலைமையேற்றார். தாய்மண் கல்வி பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் வழக்கறிஞர் நெப்போலியன், மாட்டுக் கறியின் பயன்கள் பற்றியும், மாட்டுக்கறி எல்லோரும் சாப்பிட ஆரம்பித்தால், பார்ப்பனர்களுக்கு பால் கிடைக்காது என்பதால் தான் வணங்கச் சொல்கிறார்கள். பசுவதை தடை கேட்பவர்கள்தான், கோமாதா யாத்திரை என்ற பெயரில் மாட்டை வெய்யிலில் இழுத்து வந்து வதை செய்கிறார்கள் என்று பேசினார். அண்ணல் அம்பேத்கர் அமைப்புச் சாரா தொழிலாளர் சங்கத் தலைவர் அரங்க செல்லதுரை, "பார்ப்பனர்கள் மாட்டுக்கறி உண்ணும் பழக்கம் உள்ளவர்கள். புத்தர் பவுத்த மதத்தை பரப்பும் போதுதான், பார்ப்பனிய வீழ்ச்சியைத்தடுக்க, கறி சாப்பிடுவதை நிறுத்தும் நிலை ஏற்பட்டது" என்று பேசினார். ஸ்பீடோ அமைப்பின் தலைவர் சார்ப் முரளி, "நமக்குள்ளே தாழ்த்தப்பட்டவர் – பிற்படுத்தப்பட்டவர் என்ற பிரிவினையை உண்டாக்கிய பார்ப்பனர்கள், எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தலைமை பொறுப்புகளில் இருந்து கொண்டு இந்த அரசையே இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். பாபர் மசூதி அரசியல் செய்தவர்கள் இப்போது மாட்டுக்கறி அரசியல் செய்ய புறப்பட்டு விட்டார்கள்" என்று பேசினார்.

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாட்டுக்கறியின் அரசியல் என்ற தலைப்பில் பேசினார். எருமை, ஆடு, கோழி, பன்றி, மீன் கொல்லப்படுவதைப் பற்றிக் கேள்வி கேட்காத பார்ப்பனர்கள், பசுவுக்கு மட்டும் பதறுவது ஏன் என்று கேட்ட அவர், இது பற்றி விவேகானந்தர் கூறிய கருத்தையும் சுட்டிக் காட்டினார். ஒரு முறை பசு பாதுகாப்பு இயக்கத்தைச் சார்ந்தவர்கள், விவேகானந்தரின் ஆதரவு கேட்டு வந்தனர். பீகாரில் பஞ்சம், பூகம்பத்தால் மக்கள் பாதிக்கப்படுவது பற்றி கவலைப்படாமல், பசுவைப் பாதுகாப்பது தானா உங்களுக்கு முக்கியம் என்று விவேகானந்தர் திருப்பிக் கேட்டார்.

"சர்க்கரை நோயாளிகளுக்கு ஊசி வழியாக செலுத்தப்படும் 'இன்சுலின்' மருந்தே மாட்டின் கணையத்திலிருந்துதான் தயாரிக்கப்படுகிறது. அதற்காக எத்தனை பார்ப்பனர்கள், 'இன்சுலின்' போட மறுக்கிறார்கள்?" என்று கேட்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பார்ப்பனர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டதையும், சோமபானம் குடித்ததையும் வேதங்கள் கூறுவதையும் சுட்டிக்காட்டினார். சேரன்மாதேவியில் காங்கிரஸ் கட்சிப் பணத்தில் குருகுலம் நடத்திய வ.வே.சு. அய்யர், அங்கே பார்ப்பன மாணவர்களுக்கும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கும் தனித்தனி இடத்தில் தனித்தனியான தரத்தில் உணவு வழங்கியதை எதிர்த்து பெரியார் போர்க் கொடி உயர்த்தினார் என்ற வரலாறுகளை படிக்கிறோம். அப்படி 'வர்ணாஸ்ரமத்தை' செயல்படுத்திய இதே வ.வே.சு.அய்யர், லண்டனில் படித்த போது, அங்கே விலை குறைவாகக் கிடைக்கும் உணவு என்பதற்காக மாட்டுக் கறியைத்தான் சாப்பிட்டுள்ளார். லண்டனில் இருக்கும் வரை மாட்டுக்கறிச் சாப்பிடுவதில் எந்தத் தவறும் இல்லை என்று சக பார்ப்பன மாணவருக்கு அவர் எடுத்துக் கூறியிருக்கிறார் என்பதையும் கழகத் தலைவர் தமது உரையில் சுட்டிக் காட்டினார்.

## முத்தமிழ் அறிவியல் மன்றம் கேள்வி

# சென்னை பல்கலையில் பெரியாரியல் பாடம் நீக்கப்பட்டது ஏன்?

நாகை மாவட்டத்திலுள்ள குத்தாலத்தில் இயங்கி வரும் முத்தமிழ் அறிவியல் மன்றம் இந்துஅறநிலையத் துறை என்ற பெயரிலுள்ள 'இந்து' என்ற சொல்லை நீக்கிவிட்டு, 'தமிழர் சமயத் துறை' என்று பெயர் மாற்றம் செய்யக் கோரி, ஜன.23 ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றி அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு அனுப்பி வைத்தது. இதற்கு ஆணையர் பதிலளித்துள்ளார். இந்து சமயம் என்பது பொதுவான சொல் என்றும், தமிழர் சமயம் என்று மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் அப்படி மாற்றுவதனால் என்ன பயன் என்பது பற்றி தீர்மானத்தில் விளக்கமில்லை என்றும் பதில் அனுப்பினார். அதற்கு முத்தமிழ் அறிவியல் மன்றம் அனுப்பிய பதிலில்,

"இந்து வேதத்தில் சூத்திரன், தஸ்யூ, தாசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சூத்திரன் என்றால் இழிமகன் என்றும், தஸ்யூ என்றால் கொள்ளை அடிப்பவன் என்றம், தாசன் என்றால் அடிமை என்றும் பொருள் கூறப்பட்டுள்ளது. இந்து மதம் பிறப்பால் ஏற்றத் தாழ்வுகளை வலியுறுத்துவதால் தமிழர் சமயம் என்று பெயர் மாற்றக் கோருகிறோம்" என்று ஆணையருக்கு பதில் அனுப்பப்பட்டது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராவதற்கான தடையை நீக்கும் முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் முத்தமிழ் அறிவியல் மன்றம் வலியுறுத்தியுள்ளது. அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற அரசாணையை 23.5.2006 இல் வெளியிடப்பட்டது. அர்ச்சகருக்கான பயிற்சி வகுப்புகள் 14.5.2007 இல் தொடங்கப்பட்டன. தாழ்த்தப்பட்டவர்கள் 34 பேரும், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் 55 பேரும், பிற்படுத்தப்பட்டோர் 76 பேரும், இதரர் 35 பேரும், ஆக 200 பேர் பயிற்சிப் பெற்றனர். பயிற்சி முடித்தும் 3 ஆண்டுகளாகியும் பயிற்சி முடித்தவர்கள் அர்ச்சகராக முடியாமல் தவிக்கின்றனர். தமிழக அரசு தடையை நீக்க முன் வரவேண்டும் என்று மற்றொரு தீர்மானம் சுட்டிக் காட்டுகிறது.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் தோழர் வே. ஆனைமுத்து எழுதிய 'பெரியாரியல்' எனும்நூலை கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்ற தீர்மானத்தையும் முத்தமிழ் அறிவியல் மன்றம் தீர்மானம் மூலம் வலியுறுத்தியுள்ளது. சென்னை பல்கலைக் கழகத்தில் இந்த நூலை 2003-2004 முதல் தமிழ் பட்ட மேற்படிப்புக்கு அஞ்சல் வழியில் படிப்போருக்கு மட்டும் மூன்று விருப்பப் பாடங்களில் ஒன்றாக தேர்வுக்குரிய பாடமாக வைக்கப்பட்டிருந்தது. தற்போது அது நீக்கப்பட்டுவிட்டது.

சேலம் பெரியார் பல்கலைக்கழகம் தனது ஆளுகைக்குரிய அனைத்து கல்லூரிகளிலும் தமிழ் பட்ட மேற் படிப்பில் 'பெரியாரியல்' நூலை 2004-05 முதல் கட்டாயப் பாடமாக்கி யுள்ளது.

இதுபோல் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பெரியாரியல் நூலை கட்டாயப் பாட மாக்க வேண்டும் என்று வலியுறுத்தி யுள்ளது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

முதல் பக்கத் தொடர்ச்சி

என்பார். அதற்கு நான், "நீ அடியில் நிற்கிறாயா" என்பேன். "வெண்டைக்காயும் முருங்கைகாயும் சாப்பிடு" என்ற பொருளில், "ஈட் லேடீஸ் பிங்கர் அண்ட் டரம்ஸ்டிக்" என்பார். "பெண்கள் விரல்களையும் தப்பட்டை குச்சிகளையும் சாப்பிடுங்கள்" என்று மொழி பெயர்ப்பேன். அகராதியில் பார்த்தால் தவறாக இப்படித்தான் மொழி பெயர்க்க முடியும்.

"ஆட்டம்" (atom) என்ற சொல்லுக்கு லத்தீனில் பிளக்க முயாதது என்று பொருள். Dalton's Atomic Theory சொல்கிறது... Atom is indivisible (அணு என்பது பிளக்க முடியாதது) என்பதுதான். அப்போது நிலவிய விஞ்ஞான கொள்கை. ஆனால், இப்போது அதை புரோட்டான், எலக்ட்ரான், நியூட்ரான் என பிரிக்க முடியும் என்பதும், பிளக்கும் போது வெளிப்படும் ஆற்றலில் (அணு சக்தியில்) இருந்து பல்வேறு ஆக்க வேலைகளையும், அழிவு வேலைகளையும் செய்ய முடியும் எனக் கண்டுபிடித்துவிட்டார்கள். அணுவை பிளக்க முடியாது என்று கருதிக் கொண்டிருந்த காலத்தில், பிளக்க முடியாதது என்ற பொருளுள்ள 'ஆட்டம்' என்ற சொல்லை மாற்றிவிடவில்லை. பிளக்க முடியும் என தெரிந்த பின்னாலும் 'ஆட்டம்' என்பதை மாற்றவில்லை . ஒரு சொல்லில் ஏற்றப் பட்டிருக்கும் உள்ளடக்கம் தான் முக்கியம் அப்படித்தான் பெரியார், திராவிடர் என்ற சொல்லிற்கு ஒரு உள்ளடக்கத்தை கொடுத்துள்ளார்.

மக்களை பலவற்றிற்காக பிரிக்கலாம். பள்ளியில் மாணவர்களை பாட தெரிந்தவர் - பாட தெரியாதவர் என ஆசிரியர் பிரிப்பார் நாடகம் போடு வதற்காக! விளையாட்டு ஆசிரியர், உயரமானவர்கள் - உயரம் குறைந்தவர்கள் எனப் பிரிப்பார் கூடை பந்து விளையாட்டிற்கு! இரண்டு ஆசிரியர்களுக்கும் நோக்கம் வேறு. அதைப் போலதான் பெரியாரின் நோக்கம் இழிவு ஒழிப்பு. அதாவது சாதி ஒழிப்பை நோக்கமாகக் கொண்டு பிரிக்கப்பட்ட பிரிவினைதான் ஆரியர் - திராவிடர். அந்த நோக்கம் இல்லாதவர்கள் மொழி வழியாக நாட்டை மட்டும் பிரித்துக் கொண்டால் போதும் என்று கருதுபவர்கள், இந்த மொழி பேசுபவர்கள், வேறு மொழி பேசுகவர்கள் என்று பிரித்துப் பார்க்கிறார்கள். பெரியாருக்கு தமிழர் என்று மொழி வாரியாக அடையாளப்படுத்துவதைவிட, 'மனிதர்' என்று எல்லோரையும் சமப்படுத்துவது தான் நோக்கம். இழிவை நீக்குவதற்கு தேவையான அடையாளங்களைப் பார்த்து பிரித்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது காங்கிரஸ்காரர்கள் எல்லாம் சொன்னார்கள்... உன் மொழி வேறு - என் மொழி வேறு. உன் பழக்க வழக்கம் வேறு - என் பழக்க வழக்கம் வேறு. உன் உடை வேறு - என் உடை வேறு. உன் உணவு முறை வேறு - என் உணவு முறை வேறு, உன் கலாச்சாரம் வேறு - என் கலாச்சாரம் வேறு. ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ளவர்களா எங்களை ஆள்வது? என்று.

இந்திய நாட்டு விடுதலைக்குப் பிறகு ஆறாயிரம் மைல் இரண்டாயிரம் மைல்களாக குறைந்திருப்பதை தவிர மற்றவை எல்லாம் அப்படியே தானே இருக்கிறது என்று பெரியார் கேட்டார். மைல்கள் குறைந்திருக்கிறதே தவிர, கேள்விகள் அப்படியேதான் இருக்கிறது. உன் மொழி வேறு - என் மொழி வேறு. உன் பழக்க வழக்கம் வேறு - என் பழக்க வழக்கம் வேறு. உன் உடை வேறு - என் உடை வேறு. உன் உணவு முறை வேறு - என் உணவு முறை வேறு, உன் கலாச்சாரம் வேறு - என் கலாச்சாரம் வேறு. நமது அடிமைத்தனம் அப்படியே தான் தொடர்கிறது. நமது அடிமைத்தனத்தை, பன்னாட்டுச் சுரண்டல், பன்னாட்டு சுரண்டலுக்கு துணையாக இருக்கிற பார்ப்பனர்கள் ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்து பார்க்க வேண்டியிருக்கிறது. சாதி அடிமட்டத்தில் இருக்கிற, எந்த மக்களை பெரியார் உயர்த்த வேண்டும் என விரும்பினாரோ, அந்த மக்களை உயர்த்துவதற்கு, அந்த மக்களை பாதுகாப்பதற்கு - அந்த மக்களின் பொருளியல் வளங்களை பேணுவதற்கு - நமக்கான நாட்டை உருவாக்கிக் கொள்வோம். நமக்கான பொருளாதாரத்தை கட்டமைக்க முயல்வோம். அதுவரை இந்த பொருளாதார சுரண்டல்களை - பார்ப்பன - இந்திய தேசிய - பன்னாட்டுக் கொள்ளையை தடுப்பதற்கு நாம் இணைந்து நிற்போம்" என்ற வேண்டுகோளோடு உரையை நிறைவு செய்தார்.

## திருச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்




தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மின்வெட்டு அளித்துவிட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்கு தங்கு தடையில்லாமல் மின்சாரம் வழங்கும் தமிழக அரசைக் கண்டித்து தமிழகத்தின் முக்கிய நகரங்களில் பெரியார் திராவிடர் கழகம் கண்டன ஆர்ப்பாட்டங்களை மார்ச் 5 ஆம் தேதி நடத்தியது. திருச்சியில் தொடர்வண்டி சந்திப்பு முன் மாவட்டக் கழகத் தலைவர் எஸ்.எஸ்.முத்து தலைமையில் நடந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் இளந்தாடி துரைராசன், தங்கராசு, புதியவன் (மாவட்ட இணை செயலாளர்), பொன்னுச்சாமி, ஆறுமுகம், குணா, திருவரங்கம் நகர செயலாளர் அசோக், அபிமன்னன், அன்பரசன் (பெரியார் பாசறை) உள்ளிட்ட கழகத்தினரும், பள்ளி மாணவர்களும் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர் கந்தவேல் குமார் நன்றி கூறினார்.

## பெரியார் பெருந்தொண்டர் கி.இராசமாணிக்கம் அறக்கட்டளை சார்பாக நன்கொடை

மயிலாடுதுறை பெரியார் பெருந்தொண்டர் கி.இராசமாணிக்கம் அறக் கட்டளை சார்பாக நாகை மாவட்டக் கழகத் தலைவர் இரசீத்கான், கழக வளர்ச்சிக்கு ரூ.5000-மும், கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்துக்கு ரூ.5000-மும், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் வழங்கினார்.


## தங்கமாபுரிபட்டிணத்தில் முருகேசன்-திலகவதி இல்லத் திறப்பு

மேட்டூர் அணை தங்கமாபுரிபட்டிணத்தில் கழகத் தோழர்கள் முருகேசன்-திலகவதி புதிய இல்லத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி 13.3.2011 நண்பகல் 12 மணியளவில் திறந்து வைத்தார். அனைவருக்கும் புலால் உணவு விருந்து வழங்கப் பட்டது. புதிய இல்லத் திறப்பின் மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.2000 நன்கொடை வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted on: 17th March 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்ச் 24, 2011 | புரட்சி 10 | முழக்கம் 10 | விலை: ரூ.2.50

## தேர்தல்: பதவி பற்றி பெரியார்

நாம் பதவியை மறுத்தது பெருமைக்காகவோ பதவி பெறுவது கூடவே கூடாது என்கின்ற வீம்புக்காகவோ அல்ல. மற்றெதற்காக வென்றால் நம் கட்சி எதை உத்தேசித்துப் பதவிகளைக் கைப்பற்ற வேண்டியது அவசியமானது என்ற கொள்கை கொண்டிருக்கிறதோ அதற்கு அப்பதவி பயன்படுமா என்று கருதிப் பார்த்துப் பயன்படாது என்று அன்று கண்டதாலேயே ஆகும். அதே நிலைமை இன்றும் இருக்குமானால் நாம் கண்டிப்பாகப் பதவிகளை வெறுத்தே ஆக வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்.

(விடுதலை 23.8.1940)

பதவியில் இருப்பது என்பது, எப்போதும் பதவியில் இல்லாமல் இருப்பவர்களைவிட இருப்பவர்களுக்குச் சற்றுப் பலம் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் பதவியில் இல்லாதவர்கள் கட்டுப்பாடற்றவர்களாய், கோழைகளாய், தனிப்பட்ட சுயநலக்காரர்களாய் இருப்பார்களானால் பதவியில் இருப்பவர்களுக்குத்தான் அதிகப் பலம் என்று சொல்ல வேண்டும். ஆதலால் நம் எதிரிகள் பதவியில் இருக்கும் போது நாம் கட்டுப்பாடும் மான உணர்ச்சியும் கொண்டு வீரர்களாக, தன்னலமற்றவர்களாக இருப்போமானால் எதிரிகளை வீழ்த்துவது வெகு எளிதான காரியமாகும்.

(விடுதலை 19.1.1946)

நாட்டில் ஒரே ஒரு கட்சியைத் தவிர வேறு கட்சி இல்லவே இல்லை. வேறு கட்சி முளைக்கவும் இடம் இல்லை. பல கட்சிகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டாலும் அவை எல்லாம் ஒரே கொள்கையும் ஒரே நோக்கமும் கொண்டவைகளாகவே மக்களை ஏய்க்கப் பல பெயர்களால் இருந்து வருகின்றன. அதாவது பொறுக்கித் தின்று வயிறு வளர்க்க வேண்டும்; பதவி வேட்டையாடிப் பெரு வாழ்வு வாழ வேண்டும் - இவை இரண்டும்தான் கொள்கையும் நோக்கமுமாக இருந்து வருகின்றன. அரசியல் சடடத்தையோ ஆட்சி முறையையோ தவறு என்று சொல்ல அரசியலின் பேரால் கட்சியே இல்லாமல் போய்விட்டது. இது மாத்திரமல்லாமல் நடப்புத் திட்டத்தைக் குறை கூறக்கூட நம் நாட்டில் கட்சிகள் கிடையாது. இதனால் அரசாங்கம் எதேச் சாதிகார அரசாங்கமாக இருக்க நேரிட்டுவிட்டது.

(விடுதலை 15.9.1957)

முன்பெல்லாம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் அசுரர்களைக் கொல்லத் தேவர்கள், பார்ப்பனர்களுக்கு ஆபத்து என்றால் உடனே மோகினியை விடுவார்கள். அதே மோகினிகள்தான் எம்.எல்.ஏ., எம்.பி. பதவியும் பர்மிட் வழங்கும் அதிகாரமும்; வேறொன்றுமே இல்லை.

(விடுதலை 4.10.1958)

யார் ஒருவன் நல்லவன் ஒழுக்கசீலன் யோக்கியன் என்று போற்றப்படுகிறானோ, அவனை அயோக்கியனாக்க வேண்டுமென்றால் அவனைச் சட்டசபைக்கு அல்லது லோக்சபைக்கு அனுப்பினால் போதும். அவன் எப்பேர்ப்பட்ட அறிவாளியாகவோ புத்திசாலியாகவோ யோக்கியனாகவோ இருந்தாலும் தேர்தலில் பிரவேசித்தவுடனேயே அவன் அயோக்கியத்தனங்களுக்கு ஆளாகாமல் இருக்க முடியாது. தேர்தல் ஆசை வந்து விட்டால் அன்று முதல் அவன் பித்தலாட்டத்தைக் கற்றுக் கொள்கிறான். போக்கிரித்தனம், மகாபித்தலாட்டம் இவைகளைக் கற்க வேண்டியது அவசியமாகிறது. ஏனெனில் நம் நாட்டு அரசாங்க முறை அப்படி அமைந்து விட்டது. (விடுதலை, 25.12.1955)

அரசியலும், பொருளாதாரமும் சமூக அமைப்பு பெற்ற பிள்ளைகளே தவிரத் தனித்தனி விசயங்களல்ல. சமூக அமைப்பை எப்படி மாற்றி அமைக்கின்றோமோ, எப்படி உடைத்தெறிகின்றோமோ அதைப் பொறுத்தே அரசியலும் பொருளாதாரமும் தானாகவே மாறுபாடு அடைந்துவிடும்.

(குடிஅரசு 29.12.1935)

இந்தியாவின் அரசியல் கொள்கை சரியானபடி வளராதிருப்பதற்கு மூலக் காரணம் சமுதாயத்திலிருந்து வரும் கோளாறு என்றே கூறுவோம். சமுதாயத்திலிருந்து வரும் தாரதன்மை, வித்தியாசம் ஒழியாதவரை இந்நாட்டில் எத்தகைய அரசியல் கொள்கையும் நிலைத்திருக்க முடியாது.

(குடிஅரசு 8.8.1937)

### இரு அணிகளுக்கும் ஆதரவு இல்லை

# தேர்தலை புறக்கணிக்க கழகம் முடிவு

எதிர் வரும் 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை புறக்கணிப்பது என்று பெரியார் திராவிடர் கழகத்தின் தலைமை செயற்குழு முடிவு செய்துள்ளது. பெரியார் திராவிடர் கழகத்தின் தலைமை செயற்குழு 20.3.2011 அன்று சென்னையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடியது. அப்போது, தேர்தல் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு தூண்டுகோலாக இருந்த காங்கிரஸ் அதற்கு துணை நின்ற தி.மு.க. கூட்டணிக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் முனைப்புடன் பரப்புரை செய்து, எதிர்த்து வாக்களித்தது. எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில், அதே தமிழின விரோத சக்தியான காங்கிரசுடன் தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளது. அ.இ.அ.தி.மு.க.வோ, காங்கிரசுடன் கூட்டணிக்காக காத்திருந்து அதன் ஆதரவு கிடைக்காத நிலையில் எதிர்காலத்தில் காங்கிரசுடன் கைகோர்க்கும் எதிர்பார்ப்புடன் களமிறங்கியுள்ளது. தமிழின பகைவர்களான பார்ப்பனர்கள் முழுமையாக அ.இ.அ.தி.மு.கவை ஆதரிக்கிறார்கள். இரு அணிகளுமே தமிழின விரோத சக்திகளுடன் கைகோர்த்து நிற்பதால், இரண்டு அணிகளுக்குமே ஆதரவு தெரிவிக்காமல், இந்தத் தேர்தலைப் புறக்கணிக்க, பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது.

புதுவை மாநிலத்தில் காங்கிரஸ் போட்டியிடும் தொகுதிகளில் மட்டும் எதிர்த்து நிற்கும் காங்கிரசை வீழ்த்தக் கூடிய வலிமையான வேட்பாளருக்கு வாக்களிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## பசுவதைக்கு தூக்கு தண்டனையாம்! மதவெறியை தூண்டும் பாபா ராம்!

சென்னையில், மார்ச் 20 ஆம் தேதி பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

பாபா ராம் தேவ் என்ற இந்து மதவெறியாளர் ‘பாரத் ஸ்வாபிமான் யாத்ரா’ என்ற பெயரில் யோகாப் பயிற்சி என்ற போர்வையில் நாடு முழுதும் சுற்றுப் பயணம்செய்து ‘பசுவதை’ செய்வோருக்கு தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும் என்றும், சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்து 3 மாதத்துக்குள் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்றும் பேசி வருகிறார். ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் புரதச் சத்து உணவு மாட்டுக்கறி. இதில் ‘பசுவை கொல்வது பாவம்’ என்ற பார்ப்பன சிந்தனையைப் புகுத்தி, மாட்டிறைச்சி உண்ணும் ஏழை எளிய மக்களை ‘தூய்மையற்றவர்கள்’ என்று இழிவுபடுத்துவதோடு மாட்டுக்கறி உண்ணும் இஸ்லாமியர்களுக்கு எதிராக பகை உணர்வுகளைத் தூண்டி வருகிறார். இந்த ராம் தேவ் பாபா நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும், மாட்டுக்கறி உணவை மத அரசியலாக்கும் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தி, பெரியார் திராவிடர் கழகம் இயக்கம் நடத்துவது என்றும் செயற்குழு தீர்மானித்தது.

## கழகத் தலைவர் – பொதுச் செயலாளர்கள் பங்கேற்கும் மாவட்டக் கழகக் கூட்டங்கள்

கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் கோவை இராமகிருஷ்ணன், விடுதலை இராசேந்திரன் தமிழகம் முழுதும் சுற்றுப் பயணம் செய்து மாவட்டக் கழகக் கூட்டங்களில் தோழர்களுடன் பேசுகிறார்கள். சென்னையில் கூடிய மாநில செயற்குழுவில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சுற்றுப் பயண திட்டமும் வகுக்கப்பட்டது. சுற்றுப்பயண விவரம்:

ஏப்.16 - கோவை
17 - திருப்பூர்
23 - சென்னை
24 - ஈரோடு, நாமக்கல்
30 - திண்டுக்கல் (தேனி, மதுரை மாவட்டங்கள்)
மே 1 - தூத்துக்குடி
7 - திருச்சி (கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்கள்)
8 - மயிலாடுதுறை

பிற மாவட்டங்களுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

**– தலைமைக் கழகம்.**

தலையங்கம்

# கொள்கையற்ற கூட்டணிகள்

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வும், அ.இ.அ.தி.மு.க.வும் கூட்டணிகளோடு தேர்தல் களத்துக்கு வந்துள்ளன. 121 தொகுதிகளில் மட்டுமே போட்டியிடும் தி.மு.க., 63 தொகுதிகளை காங்கிரசுக்கு ஒதுக்க வேண்டிய 'நெருக்கடிகளுக்கு' உள்ளாக்கப்பட்டுள்ளது. எனவே மீண்டும் தி.மு.க. அணியே வெற்றி பெற்று வந்தாலும் முழுமையான பலத்துடன் தி.மு.க. மட்டுமே ஆட்சியமைக்க முடியாது. ஆட்சி அதிகாரத்தில் காங்கிரசுடன் பங்கு போட வேண்டிய கட்டாயத்தை காங்கிரசார் உருவாக்கி விட்டார்கள். தமிழ்நாட்டில் மக்களோடு தொடர்பில்லாத வேரற்றுப் போன கட்சி காங்கிரஸ், ஈழத் தமிழர்களின் இனப் படுகொலையை திட்டமிட்டு நடத்தியது. அக்கட்சி, முள்ளி வாய்க்காலில் கொடூரமான ஈழத் தமிழினப் படுகொலை நடந்தபோது விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைக் காப்பாற்ற அய்ரோப்பிய நாடுகள் ஆர்வம் காட்டிய போது, அதைத் தடுத்து நிறுத்தியது இந்தியா தான் என்று இப்போது 'விக்கி லீக்ஸ்' இணையதளம் வழியாக அம்பலமாகியுள்ளது. தமிழினப் படுகொலையை நடத்தி முடித்த காங்கிரஸ் கட்சி, சட்டமன்றத்தில் தி.மு.க.வுடன் இணைந்து தேர்தல் களத்துக்கு வந்துள்ள நிலையில் தமிழின உணர்வாளர்கள் துரோகிகளையும் அதற்கு துணை நின்றவர்களையும் ஆதரிக்க முன் வர மாட்டார்கள்.

ஜெயலலிதாவோ பார்ப்பன உணர்வோடு 'இந்துத்துவா'ப் பண்புகளில் ஊறிப் போய் நிற்பவர். அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தியதோடு சேது சமுத்திரத் திட்டத்தையும் 'இந்துத்துவ' உணர்வோடு எதிர்த்தவர். ஈழத் தமிழர்களுக்கும் ஈழப் போராளிகளுக்கும் ஆதரவாக பேசியவர்களை அடக்குமுறை சட்டங்களைக் கொண்டு சிறையில் அடைத்தவர். இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிக்கு முயன்று தோல்வி அடைந்த நிலையில் இடதுசாரிகள் மற்றும் தே.மு.தி.க.வோடு தேர்தல் உடன்பாடு கொண்டு களத்தில் இறங்கியுள்ளார். ஈழத் தமிழர்களுக்கு உறுதியாக குரல் கொடுத்து வந்த ம.தி.மு.க.வையும் அவமானப்படுத்தி, தமது கூட்டணியில் தொடர்ந்து நீடிக்க விடாமல் செய்துவிட்டார்.

தேர்தல் முடிவுக்கு பிறகு ஜெயலலிதா அணி வெற்றி பெற்றால், காங்கிரசின் ஆதரவு தேவைப்பட்டால், காங்கிரசோடு அவர் அணி சேரவும் தயங்கமாட்டார். காங்கிரசும் அதற்கு தயாராகவே இருக்கும். காஞ்சி ஜெயேந்திரன் எனும் பார்ப்பன சங்கராச்சாரியை கொலை வழக்கில் கைது செய்த ஜெயலலிதாவின் துணிவை நாம் பாராட்டத் தான் வேண்டும். ஆனால், தி.மு.க.வோ, காஞ்சி ஜெயேந்திரன் மீதான கிரிமினல் வழக்கை நீர்த்துப் போகச் செய்து விட்டது. ஆனாலும் கூட பார்ப்பனர் சங்கம் ஜெயேந்திரனை கைது செய்த ஜெயலலிதா வுக்கே ஆதரவு தெரிவித்துள்ளது, பாரதிய ஜனதா கட்சியின் தீவிர ஆதரவாளரான துக்ளக் சோ - பார்ப்பனர், பா.ஜ.கவை ஆதரிப்பது வீண் முயற்சி என்று கருதி ஜெயலலிதாவையே ஆதரிக்கிறார்.

இப்படி பார்ப்பனர்கள் தெளிவாக இருந்தும் தி.மு.க.வோ, பார்ப்பன எதிர்ப்பில் சமரசத்துக்கும் தடுமாற்றத்துக்கும் உள்ளாகி, காங்கிரசின் மிரட்டலுக்கு அடிபணிந்து விட்டது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலின்போது ஈழத்தில் உச்சகட்டமான இனப்படுகொலைக்கு காங்கிரஸ் ஆட்சி சிங்கள அரசுக்கு திட்டங்களைத் தீட்டித் தந்து கொண்டிருந்தது. அப்போதைய தேர்தலில் காங்கிரஸ் அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்டால் தமிழினப் படுகொலையை நிறுத்தும் வாய்ப்புகள் உண்டு என்று கருதி காங்கிரசுக்கு எதிராக பெரியார் திராவிடர் கழகம் களத்தில் இறங்கியது. அதற்காக கடுமையான அடக்குமுறைகளை சந்தித்தது. எதிர்த்துப் போட்டியிட்டவர் அ.இ.அ.தி.மு.க.வாக இருந்தாலும் சரி, காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கத்துக்காக, அ.இ.அ.தி.மு.கவை ஆயுதமாகப் பயன்படுத்தி வாக்களிக்க பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்தது.

ஆனால், இந்த சட்டமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. ஆயுதமாக இல்லை; அரசியல் அதிகார சக்தியாக களத்தில் நிற்கிறது. எனவே நாடாளுமன்றத்தில் மேற்கொண்ட அதே பார்வையோடு சட்டமன்றத்தில் செயல்பட முடியாது. இந்த நிலையில்தான் இரண்டு அணிகளுக்குமே ஆதரவில்லை என்று முடிவெடுத்து, இந்தத் தேர்தலில் தேர்தலைப் புறக்கணிக்க, பெரியார் திராவிடர் கழகத்தின் செயற்குழு முடிவு செய்துள்ளது. புதுவை மாநிலத்தில் மாறுபட்ட அரசியல் சூழல் நிலவுகிறது. எனவே அங்கு காங்கிரஸ் வேட்பாளர் போட்டியிடும் தொகுதிகளில் மட்டும், அவர்களை வீழ்த்தக் கூடிய வலிமையான வேட்பாளருக்கு வாக்களிக்க கழகம் முடிவு செய்துள்ளது.

தேர்தல் அரசியலில் கொள்கைகளுக்கு இடமேயில்லை. கொடுக்கப்படும் இடங்களின் எண்ணிக்கைகளே கொள்கைகள் என்ற நிலை வந்து விட்டது. 'இலவசங்கள் - பணம்' இரண்டுமே ஜனநாயகத்தின் தூண்களாகி விட்டன. கொள்கையே இல்லாத தேர்தல் களத்தில் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கான வாய்ப்புகளே இல்லாத நிலையில் தேர்தல் புறக்கணிப்பைத் தவிர வேறு வழி இல்லையே!

# இசைக் கல்லூரியில் புறக்கணிக்கப்படும் தலித் ஆசிரியர்கள்

தமிழகத்தில் சென்னை அடையாறில் உள்ள கல்லூரி உள்ளிட்ட 4 அரசு இசைக் கல்லூரிகள் உள்ளன. இவற்றின் ஆசிரியர்களில் ஒருவர்கூட தலித் சமூகத்தைச் சேர்ந்தவராக இல்லை. அதேபோல் 17 மாவட்டங்களில் அரசு இசைப் பள்ளிகள் உள்ளன. இவற்றிலும் ஒரு தலித் ஆசிரியர் கூட இல்லை. இந்தக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தலித் ஆசிரியர்கள் இல்லாததற்குக் காரணம் தலித்துகளில் இதற்கான தகுதியுள்ளவர்கள் இல்லை என்பதல்ல; மாறாகத் தகுதியுள்ளவர்கள் திட்டமிட்டே, வஞ்சகங்கள் மூலம் தடுக்கப்படுகிறார்கள் என்பதுதான்.

பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த இவர்கள் குரலிசை (வாய்ப்பாட்டு) பயின்று, பட்டம் பெற்று, பதிவு மூப்பு அடிப்படையில் மூத்தவர் நிலையில் உள்ளவர்கள். "உயர்ந்த சமூகங்களைச் சேர்ந்தவர்கள் தான் படிக்கும் தகுதியுடையதாக நடைமுறைப்படுத்தப் படுகிற கர்நாடக இசையைப் படித்துப் பட்டம் பெற நாங்கள் பட்ட பாட்டை ஏடுகளில் எழுத முடியாது. அந்த அளவுக்குத் துயரங்களை அனுபவித்திருக்கிறோம்" என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு புதிய ஆசிரியர்கள் நியமனத்திற்கான நடைமுறைகள் தொடங்கியதை அறிந்து இவர்களும் முறைப்படி விண்ணப்பப் படிவங்கள் அளித்திருக்கிறார்கள். கடந்த பிப்ரவரி 18 அன்று சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டன. 24, 25 தேதிகளில் சென்னையில் கலைப் பண்பாட்டு இயக்க வளாகத்தில் நேர்க்காணல் நடந்தது. "அந்த நேர்க்காணலுக்கு ஒரே ஒரு தலித் விண்ணப்பதாரர் கூட அழைக்கப்படவில்லை. முற்றிலுமாக தலித் பட்டதாரிகள் புறக்கணிக்கப் பட்டுள்ளனர்."

இவர்களில் சிலர் எப்படித் தள்ளிவிடப்பட்டார்கள் என்பதில்தான் சாதிய மூளையின் சூழ்ச்சி இருக்கிறது. வாய்ப்பாட்டுப் பிரிவில் தகுதி உடையவர்கள் என்ற போதிலும் வேண்டுமென்றே மிருதங்கம், வயலின் ஆசிரியர்களுக்கான பிரிவுகளுக்கான நேர்க்காணலுக்கு இவர்கள் அழைக்கப்பட்டார்களாம். ஒரு வேளை ஆவணப் பிழையாக இருக்கக் கூடும் என்று நினைத்து இயக்கக ஆணையரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அவரோ பதிவு மூப்புக்கான தகுதி நிலை 1994 ஆம் ஆண்டு வரையில் தான் என்று கூறினாராம்.

அப்படியானால் மிருதங்கம், வயலின் பிரிவுகளுக்கான நேர்க் காணலில் பங்கேற்க இவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது எப்படி? அதுமட்டுமல்ல, இதற்கு முன் சென்ற ஆண்டு செப்டம்பரில் நடந்த நேர்க்காணலுக்கு 2005/06 வரையில் பதிவு மூப்பு உள்ளவர்களும் இணைக்கப்பட்டிருந்திருக்கிறார்கள். ஐந்தே மாதங்களில் பதிவு மூப்பு 1994 வரையில்தான் என்று பின்னுக்குத் தள்ளப்பட்டது எப்படி?

பயிற்சி பெறாத துறைக்கு அழைத்து, போட்டியில் ஈடுபட வைத்து, வெற்றி பெறவில்லை, அதனால் தேர்ந்தெடுக்கவில்லை என்று கழித்துக் கட்டுகிற நோக்கத்துடன் தான் இப்படியொரு குளறுபடி நடத்தப்பட்டிருக்கிறது என்ற ஐயத்திற்கு முழு வாய்ப்பு இருக்கிறது. கடந்த மாதம் நடந்த நேர்க்காணலில் பங்கேற்ற 9 தலித் பட்டதாரிகளும் இப்படிக் கழிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் தனியார் இசைப் பள்ளிகளில் பணி புரிந்த அனுபவம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். நேர்க்காணல் முடிந்து, தாங்கள் தேர்வு செய்யப்படவில்லை என்பதையறிந்து பள்ளிக் குழந்தைகள் போல் அழுதுகொண்டே திரும்பியிருக்கிறார்கள்.

இவ்வாறு தகுதி பறிக்கப்பட்ட தலித் இசையாசிரியர்கள் நிறையபேர் மாநிலம் முழுவதும் இருக்கிறார்கள். இதற்கு இயக்ககம் என்ன விளக்கம் தரப் போகிறது? மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றாலாவது தங்கள் வாழ்வில் பூபாளம் இசைக்காதா என்ற ஏக்கத்தோடு காத்திருக்கிறார்கள் இவர்கள்.

**நன்றி: 'தீக்கதிர்' நாளேடு**

# பிரதமர் அலுவலகத்தை ஆட்டிப் படைக்கும் கேரள வல்லாதிக்க குழு

அமெரிக்காவின் தூதரகங்களில் இந்தியா பற்றி பதிவு செய்யப்பட்ட ரகசிய தகவல்களை 'விக்கிலீக்ஸ்' இணைய தளத்திலிருந்து பெற்று இந்து நாளேடு ஒவ்வொரு நாளும் வெளியிட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு அனைத்து திட்டங்களையும் வகுத்துக் கொடுத்த கேரள வல்லாதிக்க குழு ஒன்று செயல் பட்டதை ஏற்கனவே ஊடகங்கள் அம்பலப்படுத்தி இருந்தன. 2005 ஆம் ஆண்டில் பிரதமர் மன்மோகன் சிங்கின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக எம்.கே. நாராயணன் என்ற மலையாள அதிகாரி நியமிக்கப்பட்டார். அப்போதே அமெரிக்க தூதரகம் இந்தியாவில் பிரதமரைச் சுற்றி மலையாளிகளின் வல்லாதிக்கக் குழு ஒன்று இயங்கி வருவதாக ரகசியக் குறிப்பில் பதிவு செய்துள்ளது. அமைச்சரவையின் முதன்மைச் செயலாளராக டி.கே.ஏ. நாயர் இருக்கிறார். இப்போது எம்.கே. நாராயணன், பாதுகாப்பு செயலாளராகியுள்ளார். பிரதமர் அலுவலகத்தில் கேரள மாஃபியா குழு ஒன்று உருவாகியுள்ளது. பொதுவாக இந்தியாவில் வடநாட்டு இந்தி அதிகாரிகள் தான் அதிகார வர்க்கத்தில் பெருமளவில் இருப்பார்கள். மாறாக, இப்போது பிரதமர் அலுவலகத்தை கேரள அதிகார வர்க்கம் சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் எதையும் செய்யக் கூடிய அதிகாரம் படைத்தவர்கள். எதிர்காலத்தில் எந்தத் தவறையும் செய்யக் கூடிய குழு ஒன்று பிரதமர் அலுவலகத்தில் உருவாகிவிடும்" என்று அமெரிக்க தூதரகம் பதிவு செய்துள்ளது.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

# ஈழத்தில் இறுதிக்கட்டப் போரில் இந்தியாவின் துரோகம்

இலங்கை அதிபர் மஹிந்த ராஜபக்சேவுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கையில் 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும், அரசப் படைகளுக்கும் இடையே நடந்த இறுதிக் கட்டப் போரின் போது, போர் நிறுத்தம் செய்யுமாறும், பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறும், சர்வதேச நாடுகள் கொடுத்த அழுத்தத்தில் இருந்து தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசையே காப்பாற்றுவதற்கு இந்திய அரசு முக்கியப் பங்காற்றியதாக அமெரிக்க அரசின் பரிமாற்றத் தகவல்களை விக்கிலீக்ஸ் இணைய தளம் வெளியிட்டுள்ளது. விக்கிலீக்ஸ் தகவல்களை 'இந்து' நாளிதழ் பிரசுரித்துள்ளது.

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த போரில் பொது மக்கள் பலியாவது குறித்துக் கவலை தெரிவித்த இந்திய அரசு, அதே நேரத்தில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதை எதிர்க்க வில்லை என்று அமெரிக்கத் தகவல் பரிமாற்றத்தில் கூறப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அதிபரை அவரது மாளிகையில் சந்தித்த அப்போதைய இந்திய வெளியுறவு அமைச்சரான பிரணாப் முகர்ஜி, மனித உரிமைகள் மற்றும் சிவிலியன்கள் பாதுகாப்பை உறுதி செய்வதைத் தவிர வேறு எந்த நோக்கத்துடனும் தான் வரவில்லை என்று கூறியதாக அமெரிக்கத் தூதரிடம் இந்தியத் தூதரக அதிகாரி தெரிவித்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.அதாவது, போர் தொடர்வதை இந்தியா எதிர்க்கவில்லை என்று அவர்வெளியிட்ட அறிக்கை மூலமே தெளிவாகியிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. முகர்ஜி வெளியிட்ட அறிக்கையில், 23 ஆண்டு மோதலுக்குப் பிறகு, ராணுவம் பெறுகின்ற வெற்றி, இலங்கையின் வடக்கிலும் மற்ற பகுதிகளிலும் சகஜ நிலையை நிலைநாட்டுவதற்காக அரசியல் ரீதியாக ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் என்றே கூறியிருந்தார். மத்தியில் கூட்டணியில் இடம் பெற்றுள்ள தி.மு.க.வின் நெருக்குதலால் 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மட்டும், போரை தற்காலிகமாக நிறுத்துமாறு இலங்கை அரசை வலியுறுத்துவதற்காக முயற்சிகளை மேற்கொண்டது. அதன் பிறகு மற்ற எல்லா நேரங்களிலுமே போர் தொடர்வதை இந்தியா தடுக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

### சிவசங்கர் மேனன் யோசனை

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் தேதி அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவருடன் அப்போதைய இந்திய வெளியுறவுச் செயலரும் தற்போதைய தேசிய பாதுகாப்பு ஆலோசகருமான சிவசங்கர் மேனன் சந்தித்த போது, மோதலுக்குத் தீர்வு காண்பதற்காக ஐ.நா. மன்றம் தனது பிரதிநிதியை அனுப்புவதை இலங்கை அரசு விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

மேலும், விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கும், போர் நிறுத்தத்துக்கும் இலங்கை அரசு தயாராக இல்லை என்றும் மேனன் கூறியுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் கூறுகிறது.

சர்வதேச நாடுகளின் கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணிக்காமல், குறைந்த பட்சம், விடுதலைப் புலிகளின் முக்கியத் தலைவர்கள் அல்லாத மற்றவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவது குறித்துப் பரிசீலிக்குமாறு இலங்கை அரசுக்கு இந்தியா யோசனை கூறியதாக சிவசங்கர் மேனன் அமெரிக்க அதிகாரியிடம் கூறியிருக்கிறார்.

அதே நேரத்தில், புலிகளின் முக்கியத் தலைவர்கள் யார், மற்ற தலைவர்கள் யார் என்பதை எப்படி அடையாளம் காண்பது என்ற கேள்வியும் எழுந்ததாக மேனன் கூறியிருக்கிறார்.

பேச்சு வார்த்தைக்கான வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ள அதே நேரத்தில், விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்தும் முரண்பட்ட தகவல்கள் வருவதாகவும், பிரபாகரனுக்காகப் பேச வல்லவர் யார் என்பது தெரியவில்லை என்றும் நிலைமையை பிரபாகரன் உணர்ந்திருக்கிறாரா என்பது தெரியவில்லை என்றும் சிவசங்கர் மேனன் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் தெரிவிக்கிறது.

இந்தியாவில் தேர்தல் நடைபெறும் நிலையில், இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சு வார்த்தை நடைபெற இந்தியா முன்முயற்சி எடுப்பதற்கான வாய்ப்புகள் சாத்தியமில்லை என்றும் சிவசங்கர் மேனன் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது.

2009 ஆம் ஆண்டு மே 6, 7 தேதிகளில், இலங்கைக்கான பிரிட்டனின் சிறப்புத் தூதர் டேஸ் பிரவ்ன் இந்திய வெளியுறவுச் செயலர் சிவசங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனை சந்தித்த போது, இலங்கை ராணுவம் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் நிலையில் உள்ளதால், இந்த நிலையில் போரை நிறுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று இந்தியா சார்பில் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பாவி மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலம் குறித்து இந்திய அதிகாரிகள் கவலை தெரிவித்தாலும், போருக்குப் பிறகு, தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சேவை சம்மதிக்க வைக்க முடியும் என நம்பிக்கையுடன் இருந்ததாக பிரிட்டிஷ் தூதரக அதிகாரி அமெரிக்க தூதரக அதிகாரியிடம் தெரிவித்திருக்கிறார்.

### ஐ.நா. மூலம் நடவடிக்கை எடுப்பதில் ஆர்வமில்லை

ஐ.நா.பாதுகாப்பு மன்றக் கவுன்சில் கூட்ட நிகழ்ச்சி நிரலில், இலங்கைப் பிரச்சினையை சேர்த்து, அறிக்கை வெளியிட்டால், இலங்கைக்கு எதிராக ஐ.நா. குரல் கொடுத்தால், அது எதிர்விளைவுகளைத் தான் ஏற்படுத்தும் என பிரிட்டன் சிறப்புத்தூதரிடம் சிவசங்கர் மேனனும், நாராயணனும் கூறியதாக விக்கிலீக்ஸ் தகவல் கூறுகிறது.

# பார்ப்பன பா.ஜ.க.வின் இரட்டை வேடம் அம்பலமானது

இந்தியாவின் எதிர்க்கட்சியான பா.ஜ.க. ஆட்சியில் இருக்கும்போது ஒரு நிலைப்பாட்டுடனும், எதிர்க்கட்சியாக இருக்கும்போது வேறொரு நிலைப்பாட்டுடனும் செயல்படுவதாக விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

இந்திய அமெரிக்க அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை காங்கிரஸ் அரசு நிறைவேற்றியதை அமெரிக்காவிற்கு எழுதித் தந்த அடிமை சாசனம் என்றெல்லாம் விமர்சித்தது வெறும் அரசியலே என்றும் அதை ஆழமாக பார்க்க வேண்டாம் என்று பாரதிய ஜனதா கூறியதாக இந்தியாவிற்கான அமெரிக்கத் துணைத் தூதர் வாஷிங்டனுக்கு செய்தி அனுப்பியுள்ளார்.

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் அத்வானியின் பேச்சுக்கள் மற்றும் அவர் நடந்து கொண்ட முறையை மேற்கோள்காட்டி, அமெரிக்க தூதரக ஆவணங்களில் பதியப்பட்டிருப்பதை 'தி இந்து' நாளிதழ் வெளிப்படுத்தியுள்ளது. (கேபிள் எண்.48692)

இந்திய - அமெரிக்க அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் பெரும் பிரச்சினையாக விவாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் 2005 ஆம் ஆண்டு, டிசம்பர் 26, 27 தேதிகளில் மும்பையில் பா.ஜ.க. மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தில் ஒன்று, அணு சக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் இந்தியாவை அமெரிக்காவிற்கு அடிமைப்படுத்தும் ஒப்பந்தம் என்று விமர்சித்திருந்தது.

இத் தீர்மானத்தை நிறைவேற்றிய சிறிது நேரத்திலேயே, பா.ஜ.க. தலைவர்கள், அமெரிக்கத் தூதரக அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, அந்த தீர்மானத்தை பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறினாராம்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே 13 ஆம் தேதி (மக்களவைத் தேர்தல் முடிவுக்கு முந்தைய தினம்) ப.ஜ.க. பிரதமர் வேட்பாளர் அத்வானியைச் சந்தித்துள்ளார் அமெரிக்க தூதரக உயர் பொறுப்பில் இருந்த பீட்டர் பர்லீக்.

அப்போது, 'பா.ஜ.க. ஆட்சியில் அமர்ந்தால், அமெரிக்கா - இந்தியா இடையிலான அணுசக்தி ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது' என்று தன்னிடம் அத்வானி கூறியுள்ளார். இதனை அதே நாளில் வாஷிங்டனுக்கு அனுப்பிய கேபிளில் குறிப்பிட்டுள்ளார் பீட்டர்.

'எவ்வித பதற்றமுமின்றி நம்பிக்கையுடன் காணப்பட்ட பா.ஜ.க. தலைவர் எல்.கே. அத்வானி, பா.ஜ.க. தலைமையிலான அரசு அமைந்தாலும் அமெரிக்கா - இந்தியா இடையிலான வலுவான உறவு தொடரும் என்று கூறினார்' - என அதில் குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்காவுடனான உறவு தொடர்பான பா.ஜ.க. நிலைப்பாட்டின் தன்மையை 2005 ஆம் ஆண்டு டிசம்பரில் வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்ட கேபிளில் விவரிக்கப்பட்டுள்ளது.

மும்பையில் 2005 டிச. 26 மற்றும் 27-ல் நடந்த பா.ஜ.க. தேசிய செயற்குழு கூட்டத்தில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசானது, அமெரிக்காவின் அடிமையாக இயங்குகிறது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், மறுநாள் டிச.28-ல் தன்னிடம் தனிப்பட்ட முறையில் பேசிய பா.ஜ.க. தேசிய செயற்குழு தலைவர் சேஷாத்திரி, பா.ஜ.க.வின் வெளியுறவுக் கொள்கை தொடர்பான தீர்மானத்தை எல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அது சும்மா ஒரு பேச்சுக்காக வெளியிடப்பட்டது' என்று கேட்டுக் கொண்டதாக அமெரிக்க தூதரக அதிகாரி ராபர்ட் பிளேக் அனுப்பிய கேபிளில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் அரசியலுக்காக மட்டுமே காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியை பா.ஜ.க. எதிர்ப்பது உறுதியாகிறது என்றும், உண்மையில் காங்கிரஸ், பா.ஜ.க. இரண்டுமே ஒரே விதமான சிறகுகள் கொண்ட பறவைகள் தான் என்றும் விக்கிலீக்ஸ் வர்ணித்துள்ளது.

# அரசுத் திட்டத்திலே தீண்டாமை

திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஒன்றியத்திற்கு உட்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் உயர்சாதி மக்களுக்காகவே தமிழக அரசால் சுடுகாடுகள் கட்டப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் கட்டப்பட்டுள்ள மயானங்கள் எதுவும் தலித் மக்களுக்கானது இல்லை. அனைவருக்கும் பொதுவானதும் இல்லை. கீழ்க்கண்ட ஊர்களில் அத்தகைய சுடுகாடுகள் உள்ளன.

மங்கரசவளையபாளையம், பேரநாயக்கன்புதூர், ஆலத்தூர், பொங்கலூர், சின்னகானூர், கஸ்பா கானூர், தண்டுக்காரன்பாளையம், மூலக்குரும்பபாளையம், போத்தம்பாளையம், சாவக்கட்டுப்பாளையம், ஒட்டர்பாளையம், நல்லகட்டிபாளையம், ஊஞ்சப்பாளையம், அய்யம்பாளையம், நடுவச்சேரி, பந்தம்பாளையம், அ்கும்பபாளையம், கருவலூர், இராமநாதபுரம், வேட்டுவபாளையம், ஆட்டையாம்பாளையம், புதுப்பாளையம், சின்னசெட்டிபாளையம், சாமந்தக் கோட்டை, முருகம்பாளையம், காசிலிங்கம்பாளையம், சி.டி. காலனி, கூளே கவுண்டன்புதூர், தண்ணீர்பந்தல்பாளையம் (தெக்கலூர்), கணியாம்பூண்டி.

### வரகூரில் கழகக் கூட்டம்

6.3.2011 ஞாயிறு மாலை 6 மணியளவில் விழுப்புரம் மாவட்ட கழகம் சார்பில் அனைத்து சாதியினர் அர்ச்சகராகும் திட்டம்; தடையும், விடையும் விளக்கப் பொதுக் கூட்டம் வரகூர் பெரியார் திடலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கு. குணசீலன் தலைமையேற்க ம.தலித்குமார், தெசெ.நாவாப்பிள்ளை, கு. மனோஷ், சூரியா, ரமேசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிவராஜ் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் ப. கண்ணன், கோ. சாக்ரடீசு, ச. பெரியார் வெங்கட், ந. அய்யனார் ஆகியோர் கருத்துரை வழங்கியதை தொடர்ந்து காவை இளவரசனின் 'மந்திரமல்ல தந்திரமே' அறிவியல் விளக்க கலை நிகழ்ச்சி நடைபெற்றது. சி.சாமிதுரை, ச.கா. இளையராசா, விழுப்புரம் மா. கணேசன், செ. பிரபு உள்பட பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான கழக தோழர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். முடிவில் அ. தம்பிதுரை நன்றியுரையாற்றினார்.

# திருப்பூரில் மகளிர் தின விழா




8.3.2011 செவ்வாய்க் கிழமை அன்று மாலை 6.30 மணிக்கு திருப்பூர் இராயபுரத்தில், பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, மார்ச் 8 மகளிர் தின விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. முதலில் சென்னை ஆதித் தமிழர் கலைக் குழுவினரின், தப்பாட்டம், ஒயிலாட்டம், சாட்டையாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதன் பின்னர் தொடங்கிய பொதுக் கூட்டத்திற்கு பேராசிரியர் சரசுவதி தலைமையேற்று சிறப்புரை நிகழ்த்தினார். சுபா




வரவேற்றுப் பேசினார். வழக்கறிஞர் தமயந்தி, இரா. கார்த்திகா, சரசுவதி ஆகியோர் உரையாற்றினர். வீ. சிவகாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். சூலூர் தமிழ்ச் செல்வி, பல்லடம் சாந்தி, பா. செயலட்சுமி, சுசிலா, சந்திரா, மல்லிகா, பரமேசுவரி, சரசுவதி, செயந்தி, பார்வதி, யமுனா தேவி, வெண்ணிலா, பிரியா, கவிதா, கீதா உட்பட பெண்கள் மட்டுமே ஏற்பாடு செய்த இவ்விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். இறுதியாக க.ந. தென்றல் நன்றி கூறினார்.

# மேட்டூரில் கழகம் ஆர்ப்பாட்டம்




பெரியார் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் குழு தீர்மானத்தின்படி மார்ச் 5 இல் தமிழ்நாடு முழுவதும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கும் தமிழக அரசு பள்ளி மாணவ மாணவியர்களின் தேர்வு காலங்களில் தேர்வுகள் முடியும் வரையிலாவது தொடர் மின்வெட்டை அமுல்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி மேட்டூர் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 5.3.2011 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் மேட்டூர் நகர மின் விநியோக அலுவலகம் முன்பு சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழக மாவட்ட தலைவர் செ.மார்ட்டீன் அவர்களின் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழக மாவட்ட செயலாளர் அ. சக்திவேல், மாவட்ட அமைப்பாளர் கி. முல்லைவேந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் “நாம் தமிழர் இயக்கம்” சார்பில் வணங்காமுடி, ஆதி தமிழர் பேரவை சார்பில் வெ.சிவராமன் ஆகியோர் உரையாற்றினர். நாம் தமிழர் இயக்கம் நகர அமைப்பாளர் மணிவேல், மேட்டூர் சரவணன், ஆதி தமிழர் பேரவை மாவட்ட மகளிரணி செயலாளர் மீனா மோகன்ராஜ், பெரியார் தி.க. சார்பில் நகர செயலாளர் சு. சம்பத்குமார், பாஸ்கர், ஆர்.எஸ். பகுதி நாகராஜ், சவுந்திரம், சேலம் கேம்ப் அருள்செல்வன், நங்கவள்ளி கிருஷ்ணன், மல்லிகுந்தம் பகுதி காமராஜ் உட்பட 75க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டம் இறுதியாக மேட்டூர் நகர தலைவர் அ. அண்ணாதுரை நன்றி கூற முடிவுற்றது.

## கடலூர் இரா. சுந்தரம் மறைவு

கடலூர் நகர மன்ற தி.மு.க. முன்னாள் உறுப்பினரும், கழக ஆர் வலர் சு. பன்னீர்செல்வம், சு. அன் பழகன், சு. இளங்கோ, சு. இராமசாமி ஆகியோரின் தந்தையாருமான இரா. சுந்தரம் 18.02.2011 அன்று மறைவுற்றார். 28.02.2011 அன்று அவரது படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூா மணி, கடலூர் மாவட்ட அமைப்பாளர் கு. அழகிரி, சிற்பி இராசன், ம.தி.மு.க. வெளியீட்டு அணி செயலாளர் ஆ.வந்தியத்தேவன், கடலூர் நகர் மன்றத் தலைவர் து.தங்கராசு, சட்டமன்ற உறுப்பினர் கோ. அய்யப்பன் முதலானோர் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இரங்கல் தெரிவித்தார்கள்.

# சோதிடத்தை பொய்யாக்கும் கிரிக்கெட்

2003 ஆம் ஆண்டு நடந்த உலக கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெறும் என்பதற்கு சோதிடத்தை முன் வைத்து கணிப்புகளை வெளியிட்டார்கள். சோதிடம் பொய்த்துப் போனது. மனித உரிமைப் போராளியும் எழுத்தாளருமான அ.ஸ்டீபன் எழுதிய இந்திய கிரிக்கெட் (ஓர் அகழ்வாராய்ச்சி) என்ற சிறு நூலை 2003 ஆம் ஆண்டு மதுரை அய்டியாசு மய்யம் வெளியிட்டிருந்தது. அதிலிருந்து ஒரு பகுதி.

இந்தியா வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை வழக்கமாக தொடர்புச் சாதனங்களும் கிரிக்கெட் வல்லுநர்களும்தான் ஏற்படுத்துவார்கள். இம்முறை அவர்களையெல்லாம் தூக்கிச் சாப்பிடும் அளவுக்கு முன்னணியில் நின்றது சோதிடக் கணிப்புகள். இவற்றில் சிலவற்றைக் காண்போம்.

20 ஆண்டு இடைவெளி வித்தியாசம் என்பது இந்தியாவிற்கு ராசியான எண். கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி கடந்த 83 ஆம் ஆண்டு, முதல் முறையாக உலகக் கோப்பையைக் கைப்பற்றியது. இப்போது 2003 ஆம் ஆண்டு நடக்கிறது. இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் உள்ள இடைவெளி வித்தியாசம் 20. எனவே, இந்தியா உலகக் கோப்பையை வெல்லும். (தினகரன், மதுரை 14.03.2003).

1983, 2003 என இரண்டு ஆண்டுகளின் எண்களுமே 3 இல் முடிவது இந்தியாவின் இறுதி வெற்றியை உறுதி செய்கிறது.

1979 ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற மேற்கு இந்தியத் தீவு அணியின் தலைவர் லாய்ட் இடது கை ஆட்டக்காரர். அதன்பின் 83 ஆம் ஆண்டில் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் வலது கை ஆட்டக்காரர். இவ்வாறாக 79-லிருந்து இடது கை ஆட்டக்காரர், வலது கை ஆட்டக்காரர் என்று உலகக் கோப்பை மாறி மாறி வந்திருக்கிறது. கடந்த முறை உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் வாக் வலது கை ஆட்டக்காரர். இப்போது இந்திய அணியின் தலைவர் கங்குலி இடது கை ஆட்டக்காரர். எனவே, இந்த 2003 ஆம் ஆண்டு உலகக் கோப்பை இந்தியாவுக்குத்தான்.

ஆந்திராவில் குண்டூரில் உள்ள சோதிட ஆய்வு மையமும் தனது கணிப்பைச் சொல்லியுள்ளது. காலக் கிரக நிலைகளின் அடிப்படையில் பார்த்தால் இந்திய அணி கோப்பையை வெல்லும் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், கடக ராசியில் குரு பகவான் உச்சத்தில் இருக்கிறார். இது மேற்கு இந்தியத் தீவு அணிக்கு உதவியாக இருப்பதால், இதுவே கோப்பையை வெல்லும். மேலும், மார்ச் 23 ஆம் தேதி இந்தியாவும் மேற்கு இந்திய தீவும் நேருக்கு நேர் நிற்கும். எண் சோதிடப்படி, மேற்கு இந்திய தீவு நாட்டின் எண்ணும் இறுதிப் போட்டி நடக்கும் தேதியும் சாதகமாக இருக்கும்.

ஆஸ்திரேலியா அணித் தலைவர் ரிக்கி பான்டிங்க்கு பிப்ரவரி மாதம் முழுவதும் ராசி நன்றாக இருக்கும். மார்ச் மாதத்தில் அவரது ராசி அவ்வளவு நன்றாக இருக்காது.


ஆனால், நடந்ததெல்லாம் இந்தக் கணிப்புக்கு முரணானவையே. சோதிடம் பரிதாபமாக மண்ணைக் கவ்வியது. பா.ஜ.க. அரசு பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்திய சோதிடக் கல்விக்கான பேராசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் முன்கூட்டியே ஏதாவது செய்து, சோதிடத்திற்கு ஏற்பட்ட இந்தப் பரிதாப முடிவைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம்.

ஏனென்றால், இந்திய அணியின் தோல்வியைவிட, சோதிடத்தின் தோல்வி மிகப் பரிதாபமானது. எதற்கும், இந்திய அணி இறுதிப் போட்டியில் தோல்வியைச் சந்திக்கும்படி பாகிஸ்தானியர்கள் பில்லி, சூன்யம் வைத்து விட்டார்களா என்று கண்டுபிடிப்பது நல்லது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 24th March 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மார்ச் 31, 2011 | புரட்சி 10 | முழக்கம் 11 | விலை: ரூ.2.50


## சென்னை – சேலத்தில் கழகத்தினர் கைது

# மாட்டிறைச்சியுடன் 'ராம்தேவ்'க்கு எதிர்ப்பு

பாரத் சுவாபிமான் யாத்திரை என்ற பெயரில் இலவச யோகா வகுப்பு என்ற முகமூடியோடு பாபாராம்தேவ் பசுவதை தடுப்புச் சட்டம் வேண்டும் என்றும், மாடு அறுப்போருக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என்றும் பரப்புரை செய்து வருகிறார். 22.3.2011 அன்று காலை 5 மணிக்கு இராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்திற்கு வந்த ராம்தேவ்க்கு எதிர்ப்புத் தெரிவித்து தென் சென்னை மாவட்ட தலைவர் இரா.உமாபதி தலைமையில் மாட்டு இறைச்சியுடன் கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பின்னர் ஆர்ப்பாட்டத்தில் வடசென்னை மாவட்டத் தலைவர் கேசவன், தென் சென்னை மாவட்ட தலைவர் தபசி குமரன் உள்ளிட்ட 40 தோழர்களை கைது செய்து அருகிலுள்ள திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டு 12 மணி அளவில் விடுதலை செய்யப்பட்டனர்.



### சேலத்தில்

பாரத் சுவாபிமான் யாத்திரை என்ற பெயரில் 26.3.2011 அன்று காலை 5 மணிக்கு, சேலம் காந்தி ஸ்டேடியம் வந்த ராம் தேவ்க்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவரின் இந்துத்துவ சூழ்ச்சியை அம்பலப்படுத்தும் நோக்கத்தோடும் ஆர்ப்பாட்டம் நடத்திய கழகத் தோழர்கள் 100 பேர் கைது செய்யப்பட்டு மாலை 3 மணி அளவில் விடுதலை செய்யப்பட்டனர்.



ஆர்ப்பாட்டம் நடத்தும் செய்தி துண்டறிக்கை மூலம் வெளியிடப்பட்டிருந்ததால், காந்தி ஸ்டேடியத்தை சுற்றிலும் ஏராளமான காவல் துறையினர் குவிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிகாலை 5 மணி முதல் தோழர்கள் சேலம் நகரம் நோக்கி வரத் துவங்கினர். அங்கு வந்த ஆத்தூர் பகுதியைச் சார்ந்த மூன்று தோழர்களையும் யோகா பயிற்சிக்கு வந்த சிலரையும், பெரியார் தி.க. தோழர்கள் எனக் கருதி, காலை 5.30மணிக்கு காவல்துறை கைது செய்தது. கருப்பு சட்டை அணிந்தவர்களை பார்த்தவுடன் கைது செய்யப்படுவதை அறிந்து கொண்டதால், இளம்பிள்ளை தோழர்கள் 25 பேரும், மேட்டூர் தோழர்கள் 25 பேரும், சேலம் நகர தோழர்கள் 10 பேரும், மற்ற அமைப்புகளைச் சார்ந்த சிலரும் ஓரிடத்தில் ஒருங்கிணைக்கப்பட்டு 6 மணிக்கு திடீரென காந்தி ஸ்டேடியம் அருகில் திரண்டனர். கையில் பெரிய மாட்டு எலும்புகளை வைத்துக் கொண்டும், மாட்டுக்கறி பிரியாணி சாப்பிட்டுக் கொண்டும், தோழர்கள் ஒலி முழக்கங்களை எழுப்பினர். தோழர்களை கைது செய்து வாகனத்தில் அழைத்துச் சென்ற சிறிது நேரத்தில், கொளத்தூர் தோழர்கள் 10 பேரும், சட்டக் கல்லூரி மாணவர்கள்; 10 பேரும், அண்ணல் அம்பேத்கர் அமைப்பு சாரா தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சார்ந்த 10 பேரும் தனித்தனியாக காந்தி ஸ்டேடியம் நோக்கி சென்று ஒலி முழக்கங்களை எழுப்பி கைது தானார்கள். தொடர்ச்சியாக கைது செய்யப் பட்டதால் அப்பகுதி பரபரப்பாக இருந்தது.

கலைவாணி, தமிழ்மதி, தானுபிரபா சேலம் மாவட்டச் செயலாளர் அ. சக்திவேல், துணைச் செயலாளர் அ. முத்துமாணிக்கம், செயற்குழு உறுப்பினர் இரா. டேவிட், மாநகர செயலாளர் மோ.பாலு, ந. விசு, ஜங்சன் தங்கராஜ், மேட்டூர் நகர தலைவர் அண்ணாதுரை, செயலாளர் சம்பத், கொளத்தூர் ராமமூர்த்தி, காவலாண்டியூர் ஈசுவரன், இராசேந்திரன், ஆர்.எஸ். பகுதி அமைப்பாளர் இராதாகிருட்டிணன், மல்லிகுந்தம் காமராஜ், நங்கவள்ளி கிருட்டிணன், ஆத்தூர் மகேந்திரன், அம்மாபேட்டை செந்தில், ஓமலூர் சிவபெருமாள், மனித உரிமை பாதுகாப்பு மையம் வழக்குரைஞர் மாயன், தமிழ்நாடு மக்கள் உரிமை இயக்கம் பூமொழி, அ.அ.அ.தொ.மு.ச. அரங்க. செல்லத்துரை, த.ஒ.வி.இ. இளமாறன், தமிழக முற்போக்கு இளைஞர் இயக்கம் தங்கதுரை உள்ளிட்ட சுமார் 100 பேரும் மாலை 3 மணி அளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

**(கட்டுரை உள்ளே)**

### கழக ஆலோசனைக் குழு அமைப்பு

கழகத்துக்காக ஆலோசனைக் குழு ஒன்று சென்னையில் 20.3.2011 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கூடிய மாநில செயற்குழு கூட்டத்தில் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் உறுப் பினர்கள்:

தாமரைக் கண்ணன், அன்பு. தனசேகரன், லோகு. அய்யப்பன், முல்லை வேந்தன், ஈரோடு இரத்தின சாமி, கோபி. இளங்கோவன், திருப்பூர் அங்ககுமார், திருப்பூர் துரைசாமி, சென்னிமலை இராமசாமி, சாஜித், அய்யனார், பொள்ளாச்சி விஜயராகவன், பொள்ளாச்சி பிரகாசு, தூத்துக்குடி பால் பிரபாகரன், மதுரை முருகேசன், மயிலாடுதுறை இரஷீத்கான், திருச்சி புதியவன் மற்றும் கழகத் தலைவர், பொதுச் செயலாளர்கள், வழக்கறிஞர் துரைசாமி, துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் ஆகியோர். குழுவின் உறுப்பினர்களாக செயல்படுவார்கள். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை குழுவினர் கூடி, கழகத்தின் செயல்பாடுகள், செயல் திட்டங்கள் பற்றி கலந்து பேசுவது என செயற்குழு முடிவு செய்தது.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 31.03.2011**

## ‘பசு நேசன்’ ராம்தேவ் முகத்திரை கிழிகிறது

# மனித எலும்புகளையும் மாட்டுக்கறியையும் கலந்து மருந்து தயாரிப்பவர்!

*‘பசுவதை’க்கு தூக்குத் தண்டனை தரவேண்டும் என்று நாடு முழுதும் இயக்கம் நடத்தி வரும் பாபாராம்தேவ், அவர் நடத்திவரும் மருந்து தயாரிப்பு நிறுவனத்தில் மருந்துகளில் விலங்குகளின் உறுப்புகள் மட்டுமல்ல; மனித எலும்புகளும் சேர்க்கப் படுவது ஆய்வுபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.*

பாபா ராம தேவ் என்ற இந்து மதவெறியாளர் ‘பாரத ஸ்வாபிமான் யாத்ரா’ என்ற பெயரில் யோகாப் பயிற்சி என்ற போர்வையில் நாடு முழுதும் சுற்றுப் பயணம் செய்து, ‘பசுவதை’ செய்வோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கவேண்டும் என்றும், சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்து 3 மாதத்துக்குள் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்றும் பேசி வருகிறார்.

ஏழை எளிய மக்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கும் புரதச் சத்து உணவு மாட்டுக்கறி. இதில் பசுவை கொல்வது பாவம் என்ற பார்ப்பன சிந்தனையைப் புகுத்தி, மாட்டிறைச்சி உண்ணும் ஏழை எளிய மக்களை ‘தூய்மையற்றவர்கள்’ என்று இழிவுபடுத்துவதோடு, மாட்டுக்கறி உண்ணும் இசுலாமியர்களுக்கு எதிராக பகை உணர்வுகளைத் தூண்டி வருகிறார். இந்த ராம் தேவ் பாபா நிகழ்ச்சிகளை தமிழக மக்கள் புறக்கணிக்க வேண்டும் என்றும், மாட்டுக்கறி உணவை மத அரசியலாக்கும் உள்நோக்கத்தை அம்பலப்படுத்த வேண்டும் என்றும் பெரியார் திராவிடர் கழகம் தீர்மானித்தது.

அதன் அடிப்படையில் கடந்த மார்ச் 22 அன்று சென்னையிலும், மார்ச் 26 அன்று சேலத்திலும் கழகத் தோழர்கள் மாட்டுக்கறியுடனும் மாட்டு எலும்புகளுடனும் ராம்தேவ் நிகழ்ச்சி நடக்கும் விளையாட்டுத் திடல்களில் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். மார்ச் 30 அன்று கோவையிலும் மாட்டுக்கறியுடன் நுழையும் போராட்டமும் நடந்தது.

ஆர்.எஸ்.எஸ். சங் பரிவாரங்களின் மற்றொரு முகமூடிதான் இந்த ராம்தேவ். யாதவ் இனத்தின் பெருமைக்குரிய அடையாளமாக கருதப்படும் இந்த சாமியாருக்கு வட மாநிலங்களில் பெரும் வாக்கு வங்கி இருக்கிறது. காங்கிரஸ், பி.ஜே.பி. மற்றும் பல வட மாநில அரசியல் கட்சிகள் இந்த ராம்தேவிடம் இருக்கும் வாக்கு வங்கிக்கும், ஆர்.எஸ்.எஸ். பலத்துக்கும் அடங்கியே இயங்குகின்றன.

**அதி அசுரன்**

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் அம்பிகாசோனி, ராஷ்ட்ரிய ஜனதாதளத் தலைவர் லல்லுபிரசாத் யாதவ், 2006 ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த முலாயம்சிங் யாதவ், சட்டீஸ்கர் முதல்வர் ராமன்சிங், உத்ராஞ்சல் முதல்வர் என்.டி.திவாரி, ராஜஸ்தான் முதல்வர் வசுந்த்ரா ராஜே சிந்தியா, மத்தியப் பிரதேச முன்னாள் முதல்வர் பாபுலால் கவுர், உ.பி. முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் மற்றும் அமர்சிங், காங்கிரஸ் முக்கியத் தலைவர் அகமது படேல், அகில இந்திய சூப்பர் ஸ்டார் அமிதாபச்சன் போன்ற பலரும் இந்த சாமியார் ராம்தேவ்வின் முக்கிய சீடர்கள்.

பசுக்களைக் கொல்லக் கூடாது என நாடெங்கும் குரல் கொடுக்கும் பசுநேசன் ராம்தேவுக்குச் சொந்தமாக “திவ்ய யோக பார்மசி” என்ற மருந்து தயாரிப்பு நிறுவனம் மிகப் பெரும் மூலதனத் துடன் இயங்கி வருகிறது. ஆயுர்வேத மருந்து களைத் தயாரித்து பலகோடி ரூபாயில் வியாபாரம் நடந்து வருகிறது. கடந்த 2006 ஆம் வருடம் இந்த பசுநேசனின் நிறுவனம் தயாரித்த மருந்துகளில் விலங்குகளின்பாகங்களும், மனித மண்டை ஓட்டின் துகள்களும், மனித எலும்புத் துகள்களும் கலந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டது.

மனித எலும்புகளைக் கலந்து மருந்து தயாரித்த இந்த விலாங்காபிமானியைக் கைது செய்யக் கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர் பிருந்தாகாரத் 2006 இல் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணியிடம் கோரிக்கை வைத்தார். சுகாதார அமைச்சகம் திவ்ய யோக பார்மசி தயாரித்து விற்பனை செய்த மருந்துகளைப் பரிசோதித்தது. ஆயுஷ் என்ற மத்திய அரசு நிறுவனத்தின் நவீன ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்யப்பட்டு, ராம் தேவ் தேயாரித்த ஆயுர்வேத மருந்துகளில் விலங்குகளின் பாகங்களும், மனித மண்டை ஓடு மற்றும் மனித எலும்புகளும் கலந் திருப்பது உறுதி செய்யப்பட்டது. அப்போதைய அமைச்சர் அன்புமணி அந்த ஆய்வுக் குறிப்புகளை உத்ராஞ்சல் மாநில அரசு வழியாக அங்குள்ள மாநில அரசு ஆய்வுக்கூடத்துக்கு அனுப்பி வைத்தார். ராம் தேவின் நண்பர் என்.டி.திவாரி தலைமையிலான உத்ராஞ்சல் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அகில இந்திய மருந்து சட்டங்களின்படி (Drugs & Cosmetic Act, Drugs & Magic Remedies Act) இரண்டு ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை பெறும் அளவிலான குற்றங்களைச் செய்தவர் இந்த ராம்தேவ். தனியார் தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் போலியான மருந்துகளை விற்பனை செய்தவர் என்ற குற்றச்சாட்டிலும் சிறைச் செல்ல வேண்டியவர்.

இவரது மருந்து விற்பனை மோசடிகளையும், விலங்குகளின் பாகங்கள் - மனித எலும்புக் கலப்படங்களையும் அம்பலப்படுத்தியதற்காக தோழர் பிருந்தாகாரத் அப்போது அனைத்து அரசியல் கட்சிகளாலும் கடுமையாக விமர்சிக்கப் பட்டார். பன்னாட்டு மருந்து கம்பெனிகளின் குரல் என்றும் குற்றம்சாட்டப்பட்டார். சங்பரிவார் கும்பல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய அலுவலகமான ஏ.கே.ஜி. பவனை முற்றுகையிட்டு தாக்குதலையும் நடத்தியது.

சில ஆண்டுகளுக்கு முன்பு மார்க்சிஸ்ட்டுகள் மீது அரசியல் ரீதியாகவும், நேரடியாகவும் மிகப் பெரும் தாக்குதலைத் தொடுத்த மருந்து மோசடி சாமியார் ராம்தேவ் தற்போது தமிழ்நாட்டுக்கு வரும்போது சிறு எதிர்ப்பைக்கூட பதிவு செய்யாது, மார்க்சிஸ்ட்டுகள் அமைதியாக இருப்பது வியப்பாக இருக்கிறது.

தான் தயாரிக்கும் மருந்துகளில் மாடு மற்றும் பல மிருகங்களின் பாகங்களையும், மனித எலும்பு களையும் கலந்து பல கோடி சம்பாதிக்கும் ராம்தேவ், மாட்டுக்கறி ஏழை எளிய மக்களுக்கு உணவாகப் பயன்படக் கூடாது. அப்படி உண்பவனை 3 மாதத்திற்குள் தூக்கில் போட வேண்டும் என்று பிரச்சாரம் செய்கிறார் என்றால் இப்பிரச்சாரத்தில் உள்ள நேர்மையற்ற தன்மையை யும், இந்தப் பிரச்சாரங்களின் பின்னணியில் இருக்கும் மனுதர்ம - பார்ப்பன அரசியலையும் ஒடுக்கப்பட்ட மக்கள் உணர வேண்டும்.

# காங்கிரஸ் கட்சியில் உள்ளடி வேலை துவங்கியது

தமிழகத்தில் காங்கிரஸ் போட்டி யிடும் 63 தொகுதிகளில், 11 தொகுதி களில் தங்கபாலு உட்பட, ஒன்பது புதுமுகங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட் டுள்ளது. இது, கட்சித் தொண்டர்கள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதன் எதிரொலியாகவே, தங்க பாலு படத்துக்கு செருப்படி, உருவ பொம்மை எரிப்பு சம்பவங்கள் அடுத்தடுத்து அரங்கேறின. இந்த எதிர்ப்பு, தேர்தல் ஓட்டுப் பதிவு நெருங்க நெருங்க மேலும் அதிகரிக் கும். காரணம், தங்க பாலு கோஷ்டிக்கு தமிழகத்தில் பலம் குறைவு என்பது தான்.

மேலும், தங்கபாலுவும் கட்சி யினரை அனுசரித்து செல்வது கிடையாது. இதுவே காங்கிரஸ் கோஷ்டிகளிடையே உச்சகட்ட வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்கபாலு ஆதரவாளர்களான, 11 பேரையும் தோல்வியடைச் செய் வோம் என மார்த்தட்டி வருகின்றனர்.

இவர்களில் ஓசூர் கோபிநாத், ஸ்ரீவைகுண்டம் சுடலையாண்டி ஆகியோர் எம்.எல்.ஏ.க்களாக உள்ளனர். ஓசூர் கோபிநாத் மீண்டும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டது, உள்ளூர் காங்கிரஸ் கட்சியின ரிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் நிர்வாகிகள் பலர், கட்சி பதவியிலிருந்து ராஜினாமா செய் துள்ளனர். மற்ற கட்சியினரையும் இவர் அனுசரித்து செல்லாததால், அவர்களும் அதிருப்தியில் உள்ளனர். தி.மு.க.வைச் சேர்ந்த நகராட்சி தலைவர் சத்யா, தன் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு, கோபிநாத்துக்கு எதிராக சுயேச்சை யாக போட்டியிடுகிறார். இது கோபி நாத்தின் தோல்வியை உறுதி செய்துள்ளது.

தொகுதிப் பங்கீட்டில் ஏற்பட்ட இழுபறிக்கு, சிதம்பரம், தங்கபாலு தான் காரணம் என தி.மு.க.வினர் நினைத்து செயல்படுவதால், அவர்களும் தங்கபாலு ஆதரவாளர் களுக்கு எதிராக களம் இறங்கியுள்ளனர். இது காங்கிரஸ் கட்சிக்கு பேரிடியாக அமையும்.

வரும் தேர்தலில், தமிழகத்தில் தங்கபாலு தலைமையில் தேர்தலை சந்திக்கும் காங்கிரசுக்கு, காங்கிரஸ் கட்சியினரின் உள்ளடி வேலை காரணமாக, மரண அடி இருக்கும் என காங்கிரஸ் கட்சியினரே கூறி வருகின்றனர்.

இதற்கிடையே தங்கபாலு, லஞ்சம் வாங்கிக் கொண்டு ‘சீட்’டுகளை விற்றதாகக் காங்கிரசாரே குற்றம் சாட்டுகிறார்கள்.

“ஒரு கோடியே 50 லட்ச ரூபாய் வரை லஞ்சம் பெற்று, தனக்கு வேண்டியவர்களுக்கு தங்கபாலு ‘சீட்’ கொடுத்துள்ளார்” என ஐ.என்.டி.யு.சி. தலைவர் கே.எஸ்.கோவிந்தராஜன் குற்றம் சுமத்தினார்.

மதுரையில் அவர் கூறியதாவது:

‘இரண்டு முறைக்கு மேல் எம்.எல். ஏவாக அல்லது உயர் பதவியில் இருந்த வர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது’ என சோனியா, ராகுல் கூறினர். அவர்களது கொள்கைக்கு மாறாக காங்கிரஸ் தலைவர் தங்கபாலுவின் செயல்பாடு உள்ளது.

தேர்தலில் போட்டியிட, 1 கோடியே 50 லட்ச ரூபாய் வரை லஞ்சம் பெற்று, தனக்கு வேண்டி யவர்களுக்கு தங்கபாலு, ‘சீட்’ வாங்கிக் கொடுத்துள்ளார். 10 லட்சம் உறுப் பினர்களை கொண்ட ஐ.என்.டி.யு. சி.யைச் சேர்ந்த உழைப்பாளிகளுக்கு ‘சீட்’ இல்லை.

உழைக்கும் வர்க்கத்தினர் சோர் வடையும் சூழல் உருவாகியுள்ளது. ஆவடி தொகுதிக்கு தாமோதரன் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர், ஐ.என்.டி.யு.சி.யைச் சேர்ந்தவர் அல்ல. தங்கபாலு நீடித்தால், ஆண்டவனே நினைத்தாலும் காங்கிரசை காப்பாற்ற முடியாது.

இவ்வாறு கே.எஸ். கோவிந்த ராஜன் கூறினார்.

**– பார்ப்பன நாளேடான ‘தினமலர்’ மார்ச் 28, இப்படி செய்தி வெளியிட் டுள்ளது.**


“புரட்சிப் பெரியார் முழக்கம்”

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

### பல்டி அடித்த சாட்சிகள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை

# ஜெயேந்திரனைக் காப்பாற்ற அரசு தரப்பு தீவிரம்

## அம்பலப்படுத்துகிறார் காவல்துறை அதிகாரி

சங்கர் ராமன் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள காஞ்சி ஜெயேந்திரனைக் காப்பாற்றுவதற்கு தமிழக காவல்துறையே முயற்சி செய்து வருகிறது. சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறி வருகின்றனர். வழக்கை விசாரித்த முக்கிய காவல்துறை அதிகாரியான எஸ்.பி. சக்திவேலு என்பவரையே சங்கராச்சாரிக்கு எதிராக சாட்சி கூற வேண்டாம் என்று தமிழக காவல்துறை அதிகாரிகள் கூறியதை எதிர்த்து எஸ்.பி. சக்திவேலு, உயர்நீதிமன்றம் வந்துள்ளார். உயர்நீதிமன்றத்தில் அவர் சார்பாக கழக வழக்கறிஞர் எஸ்.துரைசாமி வழக்கு மனுதாக்கல் செய்தார். வழக்கறிஞர்கள் எஸ். குமாரதேவன் மற்றும் எஸ்.சி.வி. விமல்பானி பெயர்களில் வழக்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் எஸ்.துரைசாமி தயாரித்த மனுவில் காவல்துறை அதிகாரி சக்திவேலு கூறியுள்ள விவரங்கள்:

காஞ்சி வரதராஜபெருமாள் கோயில் நிர்வாகி சங்கர்ராமன், கோயிலுக் குள்ளேயே அடையாளம் தெரியாத 5 நபர்களால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலையில் காஞ்சி ஜெயேந்திர சரசுவதி எனும் சுப்பிரமணியனுக்கு தொடர்பு இருப்பதாக புலனாய்வில் தெரியவந்தது. உடனே ஆந்திர மாநிலம் அய்தராபாத் மகபூப் நகரில் பதுங்கி இருந்த காஞ்சி ஜெயேந்திரனை, கூடுதல் கண்காணிப்பாளராக இருந்த நானும், மாவட்ட கண்காணிப்பாளராக இருந்த பிரேம்குமாரும் கைது செய்து, காஞ்சிபுரம் பெருநகர நீதிமன்றத்தில் நிறுத்தினோம். ஜெயேந்திரன் நீதித் துறை காவலில் வைக்கப்பட்டார். பின்னர் ஜெயேந்திரன் காவல்துறை விசாரணையின்போது பல உண்மைகளை ஒப்புக் கொண்டார்.

2001 ஆம் ஆண்டு ஜெயேந்திரன் சீனாவுக்கு செல்ல திட்டமிட்டதை சங்கரராமன் தான் - அது மடத்தின் சம்பிரதாயத்துக்கு விரோதம் என்று நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடை செய்தார். அதைத் தொடர்ந்து ஜெயேந்திரன் மடத்துக்கு சொந்தமான நிலத்தை மிகக் குறைந்த விலையில் விற்க முயன்றபோது சங்கர்ராமன், இந்து அறநிலையத் துறை ஆணை யருக்கு புகார் கடிதம் எழுதினார். (27.12.2001) ஜெயேந்திரனின் இந்த முறைகேடான நடவடிக்கையால் மடத் துக்கு ஒரு கோடியே 13 லட்சத்து 55 ஆயிரத்து 766 ரூபாய் இழப்பு ஏற்பட் டுள்ளதாகவும், எனவே ஜெயேந்திரனின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தி இருந்தார்.

காஞ்சி ஜெயேந்திரனும் அவரது 'ஜூனியரான' விஜயேந்திர சரசுவதியும் மடத்துக்குள் 'ஒழுக்கக் கேடான' வாழ்க்கை நடத்தி வருவது பற்றி, மீண்டும் அறநிலையத் துறை ஆணையருக்கு 'சோம சேகர கனபாடிகள்' என்ற பெயரில் சங்கர்ராமன் ஒரு கடிதம் எழுதினார் (21.5.2002). காஞ்சி ஜெயேந்திரன் ஒரு பெண்ணுக்கு, அவரே கைப்பட எழுதிய காதல் கடிதமும், பெண்களுடன் ஜெயேந்திரன் பாலியல் உறவு கொள்ளும் படங்களும், தம்மிடம் இருப்பதாக சங்கர்ராமன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இதைத் தவிர, திருமதி உஷா என்ற பெண்ணிடம் காவல்துறை விசாரணை நடத்தியபோது ஜெயேந்திரன் செல்பேசி வழியாக பல்வேறு பெண்களுடன் பாலியல் உறவு குறித்து பேசுவது வழக்கம் என்ற விவரங்கள் கிடைத்தன.

சங்கர்ராமன் சோமசேகர கனபாடிகள் என்ற தனது புனைப் பெயரில் அறநிலையத் துறை ஆணையருக்கு எழுதிய மற்றொரு கடிதத்தில் (26.6.2003) பல தகவல்கள்இடம் பெற்றிருந்தன. அக்கடித்தில் இருந்த வாசகங்கள்:

"ஏற்கனவே ஜெயேந்திரனுக்கு ஒரு பெண்ணுடன் பாலியல் உறவு இருந்ததை நான் பலரது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். அது பழைய கதை. இப்போது புதிய கதை ஒன்றை நான் கூறுகிறேன். காஞ்சியில் ஜெயேந்திரனுக்கு ஒரு 'வைப்பாட்டி' இருக்கிறார். இது எல்லோருக்குமே தெரிந்ததுதான். ஜெயேந்திரனின் வைப்பாட்டிகளில் இவர்தான் 'சீனியர்'. காஞ்சிபுரம் நகரம் முழுமைக்கும் இவர்களின் உறவு பற்றி தெரியும். மடத்துக்குள்ளேயே ஜெயேந்திரன், தனக்கு தேவைப்படும்போது, இந்த பெண்ணிடம் உறவு வைத்துக் கொள்வார். அந்தப் பெண்ணின் கணவர் கண் முன்னே இது நடக்கும். கணவர் கவலைப்படமாட்டார். ஜெயேந்திரன் அறைக்கு அடுத்த அறை அவரது உதவியாளர் ரகுவின் அறை. ரகு அறைக்கதவை பாதி திறந்த நிலையிலேயே வைத்துக் கொண்டு ஜெயேந்திரருக்கு நெருக்கமான அதே பெண்ணிடம் தகாத உறவு கொண்டிருந்தபோது, கதவைத் திறந்த ஜெயேந்திரர் நேரில் பார்த்து அதிர்ச்சி அடைந்து, விளக்கை அணை என்று கூச்சல் போட்டார். உதவியாளர் ரகு, ஜெயேந்திரனின் கூச்சலை காதிலே போட்டுக் கொள்ளவே இல்லை. பல பெண்களுடன் தகாத உறவு வைத்துக் கொண்டு, பிறகு அந்தப் பெண்களை மடத்தின் செலவிலேயே சில அப்பாவிகளைப் பிடித்து திருமணம் செய்து வைத்து விடுவார்கள். (இப்படி ஜெயேந்திரர், விஜயேந்திரர் இருவருமே தகாத உறவு கொண்டிருந்த பெண்கள், அவர்களால் கருவுற்ற பெண்கள், பிறகு அவர்களுக்கு கணவர்களாக திருமணம் செய்து வைக்கப்பட்டவர்கள் எல்லோருடைய பெயர்களையும் அந்தக் கடிதத்தில் சங்கர்ராமன் குறிப்பிட்டிருந்தார்.) அடையாறில் 'ஜூனியர்' விஜயேந்திரர் பாலியல் வியாதிக்கு சிகிச்சை எடுத்துக் கொண்டவர்."

இப்படி பல தகவல்களை சங்கர்ராமன் அறநிலையத் துறை ஆணையருக்கு எழுதிய கடிதத்தில் விரிவாக விளக்கியிருந்தார்.

இவற்றால் சங்கர்ராமன் மீது ஜெயேந்திரனுக்கு கடும் கோபம் ஏற்பட்டது. இத்தகைய ஒழுங்கற்ற நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளாவிட்டால், மக்களிடம் உண்மைகளை அம்பலப்படுத்துவேன் என்று சங்கர்ராமன் இறுதியாக ஜெயேந்திரனுக்கே கடிதம் எழுதி (16.7.2004) இறுதி எச்சரிக்கை செய்தார். தொடர்ந்து 'தினமலர்' நாளேட்டின் ஆசிரியருக்கு இந்த ஒழுக்கக் கேடுகளை விளக்கி சங்கர்ராமன் ஒரு கடிதம் எழுதினார் (14.8.2004) - 'தினமலர்' ஆசிரியர் அந்தக் கடிதத்தை தனது பத்திரிகையில் வெளியிடுவதற்கு பதிலாக ஜெயேந்திரனிடமே நேரில் கொடுத்து விட்டார். இது போன்ற நடவடிக்கைகளை நிறுத்தி விடுமாறும் கேட்டுக் கொண்டார். கடைசியாக ஜெயேந்திரனுக்கு சங்கர்ராமன் தனது வழக்கமான புனைப் பெயரில் ஆங்கிலத்தில் ஒரு கடிதம் எழுதினார்.

"உங்களுடைய ஒழுக்கக் கேடான நடவடிக்கைகள் மடத்தின் பெயரை பாழாக்கிவிட்டது. மடத்தின் பெயரைக் காப்பாற்ற தியாகம் செய்வதுகூட தவறு கிடையாது. இப்போது நான் தியாகத்துக்கு தயாராகி விட்டேன். உம்முடைய அனைத்து ஒழுக்கக் கேடுகளையும் சட்டத்துக்கு புறம்பான செயல்பாடுகளையும் வெளிக் கொண்டு வரப் போகிறேன். எங்கெங்கே உமக்கு தொடர்பு உண்டு என்பது எனக்கு தெரியும். விஜயவாடா, பம்பாய், திருப்பதி, இலியாத்திராங்குடி மற்றும் காஞ்சிபுரத்தில் உள்ள தொடர்புகள். கல்லூரி பெண்கள் விடுதியில் நடந்த கொலை, ரகுவின் ஒழுக்கக்கேடுகள் எல்லாவற்றையும் வெளியிடப் பேகிறேன். தேவைப்பட்டால் நீதிமன்றம் வழி யாகவும் அம்பலமாக்குவேன்" - என்று அந்தக் கடிதத்தில் எச்சரித்திருந்தார்.

அந்தக் கடிதம் - ஜெயேந்திரனிடம் வந்தவுடன் (30.8.3004) ஆத்திரத்தின் எல்லைக்குப போன ஜெயேந்திரன், ரவி சுப்பிரமணியத்தை அழைத்தார். கிருஷ்ணசாமி என்கிற அப்புவையும், கதிரவனையும், உடனே அழைத்து வர ஆணையிட்டார். இதற்காக 50 லட்சம் பணம் தர ஜெயேந்திரன் முன் வந்தார். மடத்தின் கணக்காளர் சுந்தரேச அய்யரை அழைத்து மடத்தின் கணக்கி லிருந்து அந்தத் தொகையை ரவி சுப்ரமணியத்திடம் தருமாறு கேட்டுக் கொண்டார். தொடர்ந்து அப்பு கதிரவனிடம் சங்கர்ராமனின் கதையை முடித்துவிட உத்தரவிட்டார். அதன்படி கதிரவனால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆட்கள் 3.9.2004 மாலை 5.45 மணிக்கு கோயில் வளாகத்துக்குள்ளேயே சங்கர் ராமனை கொலை செய்தார்கள்.

என்னுடைய (சக்திவேலு) புலனாய் வில் பல உண்மைகள் தெரிய வந்தன. அதாவது கொலை செய்யப்பட்ட சங்கர்ராமன், ஜெயேந்திரன் மீது சுமத்திய குற்றச்சாட்டுகள் அனைத்துமே உண்மை. பல பெண்களுடன் அவர் தகாத உறவு கொண்டிருந்ததும் உண்மை. உதாரணத்துக்கு ஒன்றை கூற வேண்டுமானால், திருவரங்கத்தில் உள்ள திருமதி உஷா பற்றிக் கூறலாம் அந்தப் பெண்ணிடம் விடியற்காலை 4 மணியிலிருந்து 5 மணி வரை அடிக்கடி செல்பேசியில் பாலியல் பற்றி ஜெயேந்திரர் பேசுவது வழக்கம். இதற்கான சான்று ஆவணம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணுடன் தனக்கிருந்த முறைகேடான உறவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மடத்தின் பணத்தை அவ்வப்போது ஜெயேந்திரன் கொடுத்து வந்துள்ளார்.

அனுராதா ரமணன் என்ற பிரபல தமிழ் எழுத்தாளரிடம் தகாத உறவுக்கு ஜெயேந்திரர் முயன்றதை, அந்தப் பெண்ணே பத்திரிகையாளர்களிடம் அம்பலப்படுத்தினார். அவரிடம் வாக்குமூலம் பெற்று, நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேன். ஜெயேந்திரருக்கு உலகம் முழுதும் சீடர்கள் உண்டு. அனுராதா ரமணன் கண்பார்வையிலேயே வேறு ஒரு பெண்ணுடன் தகாத உறவு கொண்ட ஜெயேந்திரன், அதற்குப் பிறகு, குளிக்கக் கூட போகாமல், தன்னுடைய பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கியதை நேரில் பார்த்ததாக அனுராதா ரமணன் தனது வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

நான் (சக்திவேலு) இந்த வழக்கில் 500 சாட்சிகளை விசாரித்துள்ளேன். ஆயிரக்கணக்கான சான்று ஆதாரங்களைத் திரட்டியுள்ளேன். அனைவருமே தாமாக முன் வந்து சாட்சியம் அளித்தார்கள். எனவே அவர்கள் 'பல்டி' அடித்து பிறழ்சாட்சியாக மாறுவதற்கான வாய்ப்புகளே இல்லை. இந்த வழக்கில் 24 பேர் கைது செய்யப்பட்டனர். இதில் இரண்டாவது குற்றவாளியான ரவி சுப்ரமணியம், 'அப்ரூவர்' ஆனார். அவர் அளித்த வாக்குமூலம் (இ.பி.கோ.164-வது பிரிவின் கீழ்) நீதிபதி முன் பதிவு செய்யப்பட்டது. விசாரணையின் முடிவில் குற்றத்தை ஒப்புக் கொண்டதற்காக அவருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. (இ.பி.கோ.307வது பிரிவின் கீழ்) செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் நடந்த வழக்கு விசாரணை ஜெயேந்திரன்

(4 ஆம் பக்கம்)

### ஆன்மிக அரசியல் கட்சியை தொடங்கினார், ஜெயேந்திரன்

**கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள பார்ப்பனர் காஞ்சி ஜெயேந்திரன் "தமிழ்நாடு தேசிய ஆன்மிக மக்கள் கட்சி" என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றை கடந்த 23 ஆம் தேதி தொடங்கியுள்ளார். ஆவடி இரவிச்சந்திரன் என்ற தொழிலதிபர் கட்சியின் தலைவராம். மதமாற்றத் தடை சட்டம், பசுவதை தடை சட்டம், கோயில் நிர்வாகத்தை அரசிடமிருந்து எடுத்தல், மக்களை பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தி, தூய்மையான, மகிழ்ச்சியான வாழ்க்கையை உருவாக்குதல் ஆகியவை இக்கட்சியின் கொள்கைகளாகும் என்று ஜெயேந்திரன் கூறியுள்ளார். இக்கட்சி உடனடியாக தேர்தலில் ஈடுபடாது என்றும் கூறியுள்ளார். மதத் தலைவர்கள், அரசியல் கட்சி தொடங்குவதில் தவறு இல்லை என்று 'துக்ளக்' சோ கூறி, கட்சியை வரவேற்றுள்ளார். இந்த நிகழ்வில் பங்கேற்ற மற்றொரு பார்ப்பனரான பா.ஜ.க. தலைவர் இல. கணேசன், இந்த ஆன்மிக கட்சி, பா.ஜ.க. கொள்கைகளோடு இணைந்து நிற்கிறது என்றார். சீக்கிய பார்ப்பனரான மேனகா காந்தி, முன்னாள் அய்.ஏ.எஸ். பார்ப்பன அதிகாரி சந்திரலேகா ஆகியோரும் இந்த நிகழ்வில் பங்கேற்று ஜெயேந்திரன் காலில் விழுந்து ஆசி பெற்றனர்.**

# சங்கர மடத்துக்குள் நடக்கும் ஒழுக்கக் கேடுகள் அதிர்ச்சியூட்டுபவை!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உச்சநீதிமன்றத்தில் மனுபோட்டு கேட்டுக் கொண்டதற்காக வேறு மாநிலமான புதுவைக்கு மாற்றப்பட்டது. 2005 ஆம் ஆண்டிலிருந்து புதுச்சேரி நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து வருகிறது.

வழக்கு விசாரணை நடக்கும்போதே நான் (சக்திவேலு) ஓய்வு பெற்று விட்டேன். அதன் பிறகு, அரசு தரப்பில், இந்த வழக்கு தொடர்பாக என்னைக் கலந்து ஆலோசிப்பது இல்லை. ஜெயேந்திரனுக்கு அரசியல் செல்வாக்கு இருப்பதால், வழக்கைக் குலைக்க முயற்சிப்பார் என்பதால்தான், இ.பி.கோ.164 ஆவது பிரிவின் கீழ் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்தோம். சாட்சிகளைக் கலைத்தாலும்கூட வாக்கு மூலங்கள் உறுதியாக நிற்கும் என்பதால்தான் இந்த ஏற்பாட்டை செய்தோம். அப்ரூவராக மாறி வாக்கு மூலம் தந்த ரவி சுப்ரமணியமே பல்டி அடித்து பிறழ் சாட்சியாகிவிட்டது, எனக்கு அதிர்ச்சியளித்தது. இ.பி.கோ. 164 பிரிவில் வாக்கு மூலம் தந்தவர், தனது கருத்தை மாற்றிக் கொள்வது குற்றம். பொய்யான வாக்குமூலம் தந்தமைக்காக அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை; அரசு தரப்பினரே குற்றம் சாட்டப்பட்ட ஜெயேந்திரனுடன் சேர்ந்து கொண்டு சாட்சிகளை குலைத்து விட்டார்கள் என்ற உண்மை எனக்கு தெரிய வந்தது. இதுவரை விசாரிக்கப்பட்ட 176 சாட்சிகளில் 76 பேர் பிறழ்சாட்சிகளாகி பல்டி அடித்து விட்டனர். அதில் அப்ரூவர் ரவிசுப்பிரமணியமும் ஒருவர். இதற்கான காரணம் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஜெயேந்திரன் கைது செய்யப்பட்டது ஜெயலலிதா முதல்வராக இருந்த காலத்தில். அதற்குப் பிறகு ஆட்சி மாறியது; ஆட்சி மாறிய பிறகே ஜெயேந்திரன் மீதான வழக்கு விசாரணை தொடங்கியது. சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அரசு அதிகாரிகளே பிறழ்சாட்சிகளாகி விட்டனர். வழக்கு விசாரணைக்கு அரசோடு ஒத்துழைக்க அதிகாரி மறுத்தால், அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். அரசுப் பணியில் இருந்தால் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இப்போது நடக்கும் ஆட்சி, பல்டி அடித்த சாட்சிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்ரூவராக மாறியவரே பிறழ் சாட்சியானபோதும்கூட இ.பி.கோ. 308வது பிரிவின் கீழ் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கவில்லை.

இந்த வழக்கின் தலைமை விசாரணை அதிகாரியே நான் தான். அந்த அடிப்படையில் நான் தயாரித்த வழக்கு டைரியின் அடிப்படையில் என்னை விசாரணைக்கு அழைத்தாக வேண்டும். 500-க்கும் மேற்பட்ட சாட்சிகளின் பதிவுகள் இடம் பெற்றுள்ள வழக்கு டைரி, ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்டது. ஆனால், கடந்த மார்ச் 14 ஆம் தேதி வரை எனக்கு அரசு தரப்பிலிருந்து எந்த அழைப்பும் வரவில்லை. ஆனால், அழைப்பை ஏற்காமல் நான் தவிர்த்து வருவதாக பத்திரிகைகளுக்கு தவறான தகவல் தந்து மார்ச் 23 ஆம் தேதிக்கு வழக்கை தள்ளி வைத்துள்ளனர். **தேர்தலுக்கு முன் வழகை முடித்து ஜெயேந்திரரைக் காப்பாற்றுவதில் காவல்துறை அவசர அவசரமாக செயல்பட்டு வருகிறது.**

இந்த நிலைமையை அறிந்தவுடன், நான் (சக்திவேலு) காஞ்சிபுரத்தில் வழக்குக்கு பொறுப்பாக உள்ள மாவட்ட காவலதுறை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு, நான் சாட்சி சொல்வதற்கு, எனது வழக்கு டைரியைத் தருமாறு கேட்டேன். அதைப் படித்தால் தான் மறந்து போனவற்றை நினைவூட்டிக் கொள்ள முடியும். ஆனால், நான் தயாரித்த வழக்கு டைரியை என்னிடம் கையளிப்பதற்கு அந்த அதிகாரி மறுத்துவிட்டார். விசாரணைக் கூண்டில் ஏறி நிற்கும்போது வழக்கு டைரியைக் காட்டுவோம் என்றும், அரசு எடுத்துள்ள நிலைக்கு (ஜெயேந்திரரை காப்பாற்றுவது) ஒத்துழைக்க மறுத்தீர்களேயானால், உங்களை பிறழ் சாட்சியாகவே கருதி, வழக்கை முடித்து விடுவோம் என்றும் கூறினார்.

இந்த நிலையில் அரசு தரப்பின் இந்த நடவடிக்கைகளுக்கு நான் உடன்பட விரும்பவில்லை. பெயரளவில் கூண்டில் ஏறி சாட்சியாக நிற்க விரும்பவில்லை. நான் சாட்சியாக விசாரிக்கப்படுவதற்கு முன்பு பிறழ் சாட்சி கூறியவர்கள் மீதும், 'அப்ரூவராகி' பிறகு மாறியவர் மீதும் அவர்களை அழைத்து, ஏற்கனவே இ.பி.கோ. 164 பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட அவர்களது சாட்சியங்கள் இ.பி.கோ.161 ஆவது பிரிவின் கீழ் கூறிய சாட்சியத்திலிருந்து முரண்பட்டு நிற்பதை பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் தயாரித்த வழக்கு டைரியை முழுமையாக நான் படிப்பதற்கு உரிய அவகாசம் தர வேண்டும். **குற்றம் சாட்டப்பட்ட நபர்களை விடுவிப்பதற்கு அரசு தரப்பு ஆர்வம் காட்டி செயல்படுகிறது. இத்தனைக்கும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் மீது குற்றத்தை நிரூபிக்கும் சான்றுகள் ஏராளமாக இருக்கின்றன.** கோயில் வளாகத்துக்குள்ளேயே ஒரு அப்பாவி மனிதரை திட்டமிட்டு தீர்த்துக் கட்டியுள்ளனர். அவர் செய்த தவறு வேறு ஒன்றும் இல்லை. தான் மிகவும் மதித்துப் போற்றிய புனிதமான மடத்தின் பெருமைகள் குலைந்து விடாமல் காப்பாற்ற துடித்தார். ஜெயேந்திர சரசுவதி ஏராளமான பெண்களுடன் வைத்திருந்த தகாத உறவுகளை தடுக்க முயன்றார். அதற்காகவே பலியானார்.

பிறழ் சாட்சிகளாக பல்டி அடித்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களை மீண்டும் மறு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அரசு தரப்பு என்னையும் பிறழ் சாட்சியாகக் கருதி செயல்படாதிருக்க நீதிமன்றம், ஆணை பிறப்பிக்க வேண்டும். எனக்கு இந்த நீதிமன்றத்தை நாடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

உடனடியாக இப்போது புதுச்சேரி நீதிமன்றத்தில் நடக்கும் விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும். தடை விதிக்கா விட்டால் உண்மையான குற்றவாளிக்கு எதிராக நான் மேற்கொண்ட அத்தனை முயற்சிகளும், நடவடிக்கைகளும் வீணாகி விரயமாகிவிடும். இவ்வாறு ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரி சக்திவேலு தமது மனுவில் குறிப்பிட்டுள்ளார். வழக்கு விசாரணையின் நடுவில் தலையிட இயலாது என்று கூறிய நீதிமன்றம், நீதிபதி எஸ்.பி. சக்திவேலுவிடம் காவல்துறை டைரியை ஒப்படைக்குமாறு ஆணையிட்டுள்ளது.

# பெரியார் பொன்மொழியை அகற்றுவதா? தேர்தல் ஆணையத்தை எதிர்த்து கழகம் வழக்கு

தேர்தல் ஆணையம் வரம்பு மீறி செயல்பட்டு வருவது பொது மக்களிடையே கடும் அதிருப்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தி வருகிறது. ஓட்டுக்குப் பணம் தருதல் போன்ற முறைகேடுகளைத் தடுப்பதில் தேர்தல் ஆணையம் தீவிரமாக செயல்படுவதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், பரப்புரைகளையே தடுக்க முயலுகிறது. தேர்தலில் போட்டியிடாத பெரியார் திராவிடர் கழகத்தின் கொடிகளை அகற்றுவதோடு, பெரியார் பொன்மொழிப் பலகையையும் அகற்றி வருகிறது. கோபி அருகே கொளப்பலூரில் ஊர் எல்லை தொடங்கும் இடத்தில் பொது ஒழுக்கம் பற்றிய தந்தை பெரியார் கருத்துகளுடன் 'பெரியார் திராவிடர் கழகம் தங்களை அன்புடன் வரவேற்கிறது' என்ற வரவேற்பு பலகையை பல ஆண்டு காலமாகவே நிறுவியுள்ளது. தேர்தல் ஆணையம் இந்த வரவேற்பு பலகையை அகற்றிவிட்டது. அங்கே பறந்த கழகக்கொடிக் கம்பத்தின் கறுப்பு நிறத்தை அகற்றி விட்டு, வெள்ளை வண்ணம் பூச வேண்டும் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் அறிவுறுத்தி, கொடிக் கம்பத்தையும் அகற்றி விட்டனர். தேர்தல் ஆணையத்தின் இந்த எல்லை மீறிய செயல்பாடுகளை எதிர்த்து ஈரோடு மாவட்டக் கழக செயலாளர் இராம. இளங்கோவன், உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். கழக வழக்கறிஞர்கள் எஸ். துரைசாமி, வி. இளங்கோவன், து. ராஜ்குமார் வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

பெரியார் திராவிடர் கழகம் தேர்தலில் போட்டியிடாத சமுதாய இயக்கம். கழகம் நிறுவியுள்ள வரவேற்பு கருத்துப் பலகை விளம்பர நோக்கம் கொண்டது அல்ல. அதில் இடம் பெற்றுள்ள பெரியார் பொன்மொழி மனித குலத்துக்கான உயர்ந்த மாண்புகளையே பேசுகிறது. தேர்தல் அரசியலில் தொடர்பில்லாத பெரியார் திராவிடர் கழகத்தின் கொடிகளையும் பெரியார் பொன்மொழிப் பலகையையும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் அகற்றாமல் இருப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்று வழக்கு மனுவில் கூறப்பட்டுள்ளது. வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி, மாநில தேர்தல் ஆணையம், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விளக்கம் கேட்டு தாக்கீது அனுப்பியுள்ளார்.

# ஈரோட்டில் கழகம் ஆர்ப்பாட்டம்



கழகத்தின் தலைமை செயற்குழுவின் தீர்மானத்தின்படி பன்னாட்டு நிறுவனங்களுக்கு தடை இல்லாமல் மின்சாரம் வழங்கியும் படிக்கும் மாணவர்களின் தேர்வு காலத்தில்கூட மின்வெட்டை அமுல்படுத்தியும் செயல்படுகின்ற தமிழக அரசைக் கண்டித்து பெரியார் திராவிடர் கழகம் ஈரோடு மாவட்டம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் ஈரோடு மரப்பாலம் பகுதியில் 5.2.2011 அன்று நடைபெற்றது. இக் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ப. இரத்தினசாமி (ஈரோடு மாவட்ட பொறுப்பாளர்) தலைமையேற்க மாவட்ட தலைவர் நாத்திகஜோதி முன்னிலை வகித்தார். இதில் மாவட்ட செயலாளர் இராம. இளங்கோவன், அருளானந்தம், சிவக்குமார், மாதுராஸ், சுப்பிரமணியம், குணசேகரன், கருப்பணன், அரங்கநாதன், இ. மூர்த்தி, இராசேந்திரன், பிரபகரன், திருமுருகன், வேல்முருகன், நாத்திகம் தங்கமுத்து, நிவாசு, அறிவு (ஆதித் தமிழர் சனநாயக பேரவை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நன்கொடை

ஆத்தூர் மல்லியக்கரை தோழர் ரவிக்குமார் - செல்வி ஆகியோரது மகன் பிரபாகரன் பிறந்த நாள் நினைவாக கழகத் தலைவரிடம் ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

7.3.2011 அன்று சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்), தோழர் பிரபு திருமண விழாவில், கழகத் தலைவரை சந்தித்த கீழ்க்கண்ட கழக ஆதர வாளர் கள் கழக ஏட்டிற்கு நன்கொடை வழங்கினர்

நய்னார் பாளையம் வழக்கறிஞர் தமிழ்ப் புரட்சி - ரூ. 250; பெத்தா சமுத்திரம் சி. வெங்கடேசன் - ரூ.100; பூ.மா. செல்வராஜ் - ரூ.100; து. பொன்னுசாமி - ரூ.100; வீ.பாலமுருகன் - ரூ.100; மா. ராஜா - ரூ.100;

8.3.2011 அன்று திருப்பூர் மகளிர் தின பொதுக் கூட்ட மேடையில் சகுந்தலா - நடராசன் ஆகியோரது பெண் குழந்தைக்கு இளவேனில் என்று கழகத் தலைவரால் பெயர் சூட்டப்பட்டதன் நினைவாக ரூ.1000 நன்கொடை வழங்கினர்.

(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st March 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.